கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

244

ஐப்பசி 2024
05.10.2024
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

சி.ரமேஷ்
சிவகுருநாதன் கேசவன்
திருஞானசம்பந்தன் லலிதகோபன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
கௌசி
வ.ந.கிரிதரன்
அ.இரவி

## அ.இரவி சிறப்பிதழ்



கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024.10.05 -ஐப்பசி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்


## கட்டுரைகள்


**அ.இரவியின் புனைவும் எழுத்தும்**
சி.ரமேஷ்............ ............................... 03

**மேழகிழ்ப்பு காலத்தின் ஒரு வாக்குமூம்**
**"வீடு நெடும் தூரம்"**
சிவகுருநாதன் கேசவன் ........................ 07


**அ.இரவியின் ஆயுதவரி**
திருஞானசம்பந்தன் லலிதகோபன்............ 14

**ஒரு அனுபவத்திரட்டாய் மனதில் உறையும்**
**அ.இரவியின் "பாலைகள் நூறு"**
கந்தர்மடம் அ.அஜந்தன்......................... 20





நேர்காணல்
அ.இரவி / 29



சிறுகதை
அ.இரவி / 34

**அ.ரவியின் 1958**
கௌசி................................................ 23

**எழுத்தாளர் அ.இரவியின்**
**"கொற்றவை பற்றிக் கூறினேன்"**
வ.ந.கிரிதரன்....................................... 26



# ஜீவநதி

**2024 ஐப்பசி இதழ் - 244**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து
ஆக்கங்களின் கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


# ஈழத்து இலக்கிய அடையாளங்களில் ஒருவர் அ.இரவி

அ.இரவி அவர்கள் அளவெட்டியில் பிறந்தவர். ஈழத்தின் குறிப்பிடக் கூடிய நாவலாசிரியர்களில் ஒருவராக விளங்கி வருபவர். புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற இவர் தனித்துவமான மொழிநடையில் நல்ல நாவல்களையும் சிறுகதைகளையும் ஈழத்து இலக்கிய உலகிற்கு தந்து கொண்டு இருக்கும் படைப்பாளி. **P K M** என்கின்ற புகையிரத நிலையம், வீடு நெடுந்தூரம், கொற்றவை பற்றிக் கூறினேன், 1958, ஆயுத வரி, பாலைகள் நூறு, காலமாகிவந்தகதை, கையொப்பம் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளளார். புதுசு சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இயங்கியவர். இறுதிவரை புதுசு சஞ்சிகையை கொண்டு வருவதற்காக பெரிதும் பாடுபட்டு நடாத்தி வந்தவர். புதுசுரவி என இவரை பலரும் அழைத்து வந்தார்கள். தனித்துவமான கதை சொல்லியாக விளங்கும் இவரது படைப்புகள் வாசகர்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்படுகின்றன. இவர் தனது படைப்புகளில் இலங்கைத் தமிழர்களின் வட்டார வழக்குச் சொற்களை மிகச் சிறப்பாக கையாள்பவர். இவரது அனுபவங்கள் பல இவரது படைப்புகளில் வெளியாகுவதை காணமுடிகின்றது. நாவல்களை எழுதுவதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றார். ஈழத்து இலக்கிய உலகில் இவரது படைப்புகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இவரது படைப்புகள் வாயிலாக பல்வேறு வரலாறுகளைக் கூட அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இவரது படைப்பு வல்லபத்தை கௌரவிக்கும் முகமாக ஜீவநதி அவரை கௌரவித்து சிறப்பிதழ் வெளியிட்டு மகிழ்கின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

எழுத்தின் முக்கியமான வடிவங்களில் ஒன்றான புனைகதை பாரம்பரிய கதை வடிவங்களில் இருந்து வேறுபட்டது. மேலைநாட்டார் வருகைக்குப் பின்னர் தோற்றம் பெற்ற நாவல் மனித அனுபவங்களுக்கூடாக கற்பனை மாந்தர்களையும் நிஜமாந்தர்களையும் ஒன்றிணைத்து உரைநடையில் எழுதப்படுகிறது. அ.ரவியினுடைய நாவல்கள் எழுதப்பட்ட வார்த்தைகளின் வாயிலாக மனித வாழ்வை அர்த்தப்படுத்துகிறது. அவருடைய நாவல்கள் யாவும் துல்லியமான தொடர்ச்சியான கதைப் போக்கினைக் கொண்டிருக்கும். அறியப்பட்ட வரலாற்றுச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட ரவியினுடைய நாவல்கள் வெறும் கட்டுக் கதைகள் அல்ல. அவை தமிழர்களின் வாழ்வோடு இணைந்த கதைகள். தீவிரத் தன்மை கொண்ட அவ்வெழுத்துக்கள் ஆபாசத்தின் வெட்கக்கேடான வணிக ஆழங்களில் கட்டி எழுப்பப்பட்டவையல்ல. இனரீதியாக ஒடுக்கப்பட்டு வஞ்சிக் கப்பட்டு இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தின் கதைகளைக் கூறுபவை. மனித வாழ்க்கையின் உண்மைகளை அதன் ஆற்றல்கள் நம்பகத் தன்மையுடன் வெளிப்படுத்தும் அ.ரவியின் நாவல்கள் மனித ஆளுமையின் நெளிவு, சுழிவுகளை, வளைவுகளை, கலைநயத்துடன் வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை.

**PKM என்கின்ற புகையிரத நிலையம்**

பண்பாட்டுச் சூழ்நிலை, மரபுநிலை ஆகிய புறஇயல் காரணங்கள் இரண்டுமே மனிதனின் நடத்தையை பெருமளவு முடிவு செய்கின்றன. 1956ஆம் ஆண்டு S.W.R.D பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்பட்ட 33ஆம் இலக்க அரச கருமமொழிச் சட்டம் அரசபணியில் இருந்த தமிழர்கள் பலரைப் பாதித்தது. சுதந்திர இலங்கைக்குள் இனங்களுக்கிடையே பகையை உருவாக்கி நாட்டின் பிரிவினை வாதத்துக்கு வித்திட்ட இச்சட்டத்தை ஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றவர்கள்

# அ.இரவியின் புனைவும் எழுத்தும்

– சி.ரமேஷ் –



எதிர்த்த போதிலும் குறிப்பிட்டகாலம் வரை அரசு இச்சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப் படுத்தியது. நல்லிணக்கத்தை அறுத்து தேசிய சகவாழ்வைக் குலைத்த இச்சட்டத்தால் ஆயிரக் கணக்கான தமிழர்கள் தமது அரசவேலைகளை இழந்து தெருவில் அநாதரவாய் நின்றனர். இதனால் நாட்டில் இனங்களுக்கிடையில் சமூக ஒருமைப்பாடு காணாமல் போனது. இப்பின்னணியில் எழுந்த நாவலே அ.இரவியின் P K M என்கின்ற புகையிரத நிலையம். ஐந்தாம் வகுப்பு வரைப் படித்து புளியங்குளம் புகையிரத நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளியாகப் பணிபுரியும் நடராசா அரசகரும மொழிச் சட்டத்தால் பாதிக்கப்பட்டு தன் வேலையை இழக்கிறான். தொழிலுக்கு அல்லாடுகிறான். ரெயில்வே கார்ட்மாரின் உதவி யுடன் சுன்னாகத்தில் இருந்து களவாக வவுனியா சென்று அரிசி வாங்கி விற்றும் அவனுக்கு அது தோதுப் படவில்லை. மனைவி கட்டித் தரும் பூமாலைகளை விற்றும் அவன் கையில் காசு புரளவில்லை. ஈற்றில் தான் பறிகொடுத்த உத்தியோகத்தை எண்ணி எண்ணி புழுங்கி புத்தி பேதலித்து மண்ணில் மரணிக்கின்றான்.

1966 முதல் 1977 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அடிமட்ட பொருளாதார நிலையில் பின்தங்கிய ஏழை மக்களின் வாழ்வை இந்நாவல் கோடிட்டுக் காட்டுகிறது. இக்காலப்பகுதியில் தமிழ் மக்கள் இயல்பு வாழ்வினை நடாத்த முடியாத சூழலில் ஆயுதத்தைக் கையில் எடுத்தனர். அல்லல் பட்ட ஈழத்தமிழர்களின் துர்ப்பாக்கிய நிலையையும் சிங்களப் பெருந்தேசிய இனவாத அரசின் முகத்தையும் விளக்கி நிற்கும் இந்நாவல் ஆயுதப்போர் தானாகத் தோன்றிய தல்ல. அது தமிழர்கள் மீது திணிக்கப்பட்டதொன்று என்பதையும் விளக்கி நிற்கிறது. வன்மறை மீது மோகம் கொண்டு போராளிகள் ஆயுதங்களை கையில் எடுக்க வில்லை. சிங்களப் பேரின அரசு அதனைத் தமிழர்கள் கையில் திணித்தது என்பதை இந்நாவல் முன் மொழிகிறது.

அக்காவின் குடும்பத்தை தன் குடும்பம் என நினைத்து வாழும் நடராசா என்கின்ற சின்னமாமா மென்மையான உள்ளங்கொண்டவன். தன் மருமகனை யும் மருமகளையும் உயிரென நினைத்து வாழ்பவன். குறிப்பாகத் தன் மருமகன் மீத அன்பு கொண்டவன். அவனே தன் வாழ்வின் ஆதார சுருதி என வாழ்பவன். மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் இழையோடும் அன்புப் பிணைப்பே நாவலின் மையச்சரடாகும்.

சுயநலமே மனித இருப்பாய் பொதுமைப்படுத்தப் பட்ட உலகில் குடும்பத்தில் நிலவும் அன்பையும் இரக்கத்தையும் கருணைப்பாலமாய்க் கொண்டு எழுதப் பட்ட இந்நாவல் யாழ்ப்பாணப் பண்பாட்டின் வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. சோதிடம் சடங்காகிப் போன யாழ்ப்பாண மண்ணிலே இணைந்த உள்ளங்களைத் தோசம் எனக் கூறி பிரிக்கும் சோதிடம் நடராசன் பூமா வாழ்விலும் ஏழு செய்வாய் என்ற பெயருடன் புகுந்து அவர்கள் வாழ்வைக் குலைத்தது. சோதிடம் சொல்பவர்கள் யாவரும் வெறும் காசுக்காக மட்டுமே ஜோதிடம் சொல்வதில்லை. அவர்களுக் குள்ளும் மனிதத் தன்மை கொண்டவர்கள் உள்ளனர். அளவெட்டி சின்னப்பு சாஸ்த்திரியார் இதற்கு நல்ல உதாரணம். நடராசனுக்கு சின்னப்பு சாஸ்த்திரியார் கூறும் விளக்கம் இரவியின் பட்டறிந்த அனுபவங் களுக்கூடாக இந்நாவலில் வெளிப்படுத்தி நிற்கிறது. "...அதிகமாகப் பேசுகிறேன் என்று நினையாதே. ஏழரைச்சனி, ஏழிற் செவ்வாய், அட்டமத்துச்சனி எல்லாமே கடவுளின் பெயராலே வியாபாரிகள் உரு வாக்கியவை. நான் இவற்றை நம்புவதில்லை. யாருக்கும் இவை இருக்கென்று கூறுவதுமில்லை. ஆனால் சிதம்பரப்பிள்ளை ஐயா அதனை நம்பிறார். உன்ரை அம்மாவும் அதனை பூரணமா நம்பிறா. நான் ஆரின்றை நம்பிக்கைக்கும் குறுக்க வரமாட்டன்".

யாழ்ப்பாண சமூகத்தில் வாழும் பெண்களின் இயல்பு வாழ்க்கையை நடராசாவின் தாய், தமக்கை, அத்தை, பூமா, மருமகள் முதலான பாத்திரங்கள் வெளிப் படுத்தி நிற்கின்றன. கணவனே கண்கண்ட தெய்வம் என நினைத்து வாழும் சராசரிப் பெண்களையே நாவல் வெளிப்படுத்துகிறது. கணவனுக்கு அடங்கி, அவனின் நிழலின் கீழ் இருந்து அவனுக்கு கட்டுப்பட்டே சுய மரியாதையுடனும் தன்னம்பிக்கையுடனும் பெண்கள் வாழும் சராசரி வாழ்வையே இந்நாவல் காட்சிப்படுத்து கிறது. பெண்ணானவள் சமூகஇயக்கத்தின் உயிரியல் உள்ளடக்கமாகக் கருதப்படுகிறாள். இவ்வடிப்படையில் நாவலில் வரும் உணர்ச்சி நிறைந்த பெண்மை தாய்மை யுணர்வு கொண்டது. ஆலாபனையற்று ஆராதிக்கப் படுவது. கணவனோடு இயைந்து நடக்கும் இப்பெண்கள் தம் உணர்வைக் கூட வெளிப்படுத்தாதவர்கள். மனதுக் குள் குமைந்து கொண்டு பேசா மடந்தைகளாகவே இருப்பவர்கள். நடராசனின் மனைவி இதற்கு தக்க சான்று. "இரவிரவாக நாரி நோக மனைவி கட்டிக் கொடுக்கும் மாலையை விற்கும் நடராசன் அப்பணம் முழுவதையும் குடித்தே செலவழிப்பான். ஆயினும் அவன் மனைவி மனதுக்குள் புளுங்குவாளேயன்றி அவனைக் கடிந்து கொள்வதில்லை.", "மனம் பிறழ்ந்த தம்பி அம்மணமாக நின்றாலும் அவனோடு கடியாத தமக்கை" என இவ்வாறான யதார்த்தத்துக்கு அப்பாற் பட்ட பல சம்பவங்கள் நாவலில் இருந்தாலும் நாவலின் மொழி நாவலோடு வாசகனைக் கட்டி வைத்துள்ளது. அ.இரவியின் மொழிநடை வெறும் வார்த்தை கோவை களால் ஆனதல்ல அது தனித்துவமான உணர்வுகளால் ஆனது. யாழ்ப்பாண பேச்சு வழக்கை உள்வாங்கி எளிய மொழியில் எழுதப்பட்ட இவ்வுரைநடை முழுமையும் கச்சிதமும் கொண்டது.

சமூகம் சார்ந்த மதிப்புமாற்றங்கள், மதிப்பீடு கள், அதன் அங்கீகாரங்கள், நடத்தைவாத முறை களால் உருவாக்கப்படுகின்றன என்பதை விளக்கும் இந்நாவல் அறம், புனிதம் சார்ந்த தனிமனித நடத்தை யின் கீழ் தன்னைக் கட்டமைத்துக் கொள்கிறது.



**வீடு நெடும் தூரம்**

ஒரு போராளியின் அனுபவக்குறிப்பாக வரும் அ.இரவியின் “வீடு நெடும் தூரம்” 1972– 1986 வரையிலான பதினைந்து வருடகால ஈழத்து தமிழ் தேசிய அரசியல் வரலாற்றை ஆவணப் படுத்துகிறது. இந்நாவல் அகிம்சை வழிப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி மனித உயிர்களைக் காவுகொண்ட கதையைக் கூறுகிறது. தளபதி அமிர்தலிங்கம் அரசியலில் ஜெயித்து ஆவேசப் பேச்சுக்களினால் தம்பிமாரைத் தூண்டிவிட்டு அரசியல் நடாத்திய கதையைப் பேசும் இந்நாவல் தமிழ் ஈழவிடுதலை இயக்கங்கள் முளைவிட்டு எழுந்த நாள் முதல் அவ்வியக்க அமைப்புக்குள் இருந்த போராளிகள் எதிர்கொண்ட உயிராபத்துக்கள், பாசறை நடவடிக்கைகள், இராணுவக் கெடுபிடிகள், இயக்க முரண்பாடுகள், சகோதரப் படுகொலைகள், விடுதலைப் புலிகளின் எழுச்சி முதலானவற்றை கால அடிப்படையில் பதிவு செய்கிறது

**கொற்றவை பற்றிக் கூறினேன்**

கடந்த கால வரலாற்றுப்பக்கங்களைத் தான் வாழ்ந்த வாழ்வியற் புலத்தோடு இணைத்துக்கூறும் தன் வரலாற்று நாவல்கள் சமூகத்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக நிலைமைகளை யதார்த்தபூர்வமாக மற்றும் நம்பகத்தன்மையுடன் கூறிநிற்கிறது. இந்நாவல்களில் நிகழ்வுகள், பாத்திரங்கள் கற்பனையாகப் படைக்கப்பட்டாலும் வரலாறு நம்பகத்தன்மையுடன் எழுதப்பட்டிருக்கும். இதற்குத் தான் வாழ்ந்த சமுதாயம் குறித்த பரந்த பார்வை இருக்க வேண்டும். அவ்வகையில் சுயவரலாற்றுப் புனைவாக எழுதப்பட்ட நாவலே அ.ரவியின் “கொற்றவை பற்றிக் கூறினேன்” நாவல் யாழ்ப்பாண சமூகத்தின் கடந்த கால வரலாற்றினை எவ்வித பாசாங்குமற்று குறுக்கு வெட்டுமுகமாய் வெளிப்படுத்தி நிற்கிறது. அவருடைய காலம் ஆகி வந்த கதையின் விரிவே இந்நாவல் என்பதை இதனைப் படிக்கும் ஆசிரியர்கள் நன்குணர்ந்து கொள்வார்கள்.

கொற்றவை பற்றி கூறுகின்றேன் நாவல் யாழ்ப்பாணத்தில் 1974இல் நடந்தேறிய நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுடன் தொடங்கி 1983 ஆம் யூலைக் கலவரத்தோடு முடிவடைகிறது. நாவலில் இடம்பெறும் தொடக்கப் பகுதி கதைசொல்லியின் வாழ்வில் நிகழ்ந்தேறும் சிறுபிராய வாழ்வைக் காட்சிப் படுத்துகிறது. நாவலின் முதற்பகுதி தந்தையாருடன் கதை சொல்லி நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்குச் செல்வதனை எடுத்துக் கூறுகிறது. ஊர்வலங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மாநாடு கதை சொல்லியின் விபரிப்புக்கூடாகக் காட்சிப்படுத்தப் படுகிறது. அதன் இறுதிநாளன்று (1974.01.10) காவற்படையினரால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச்சம்பவங்கள் கதை சொல்லியும் அவருடைய தந்தையாரும் எதிர்கொண்ட அனுபவங்களுக்கூடாக விபரிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பண்பாட்டின் வேர்களை அதன் விழுதுகளோடு காட்சிப்படுத்தும் இந்நாவல் குடும் உறவுகள் கல்விசார் செயற்பாடுகளைக் கதைசொல்லியின் வாழ்வியல் அனுபவங்களுக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது. தவில். நாதஸ்வரம், யாழ்ப்பாண கீரிமலை கவுணாவத்தை நரசிங்க வைரவர் கோவில் வேள்வி, விழாக்கள் கிளிதட்டு முதலான பாரம்


பரிய விளையாட்டுக்கள், புரட்டாதிச்சனி, சமயஆசார அனுட்டானங்கள், தமிழர்களின் விருந்தோம்பல், பாட சாலைக் கல்விமுறை, கற்பித்த ஆசான்கள் வன் முறைக்கு பலியாகி இறந்த சம்பவங்கள், காதல், தமிழ் மக்களின் அரசியல், தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, 1958ஆம் ஆண்டு 1983ஆம் ஆண்டு இனக்கலவரம், தமிழர்களின் அகிம்சைப் போராட்டம் என நாவல் கதைசொல்லியின் வாழ்வை உயிர்ப்புடன் சித்திரிக்கின்றது. இக்கதையில் வரும் வெண்மங்கை என்ற பாத்திரம் யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுசன நூலகத்தையே குறித்து நிற்கிறது. இந் நாவலில் யாழ்ப்பாண கல்விக்காக இனிதுழைத்த பொது சன நூல் நிலையங்களின் பங்களிப்பினையும் ரவி பகிர்ந் துள்ளார். இலங்கைத்தமிழர்கள் எதிர்நோக்கிய இன்னல்களே தமிழ் மக்களை வன்முறையின்பாற் திருப்பியது என்பதையும் இந்நாவலில் எடுத்துரைக் கிறார். இலங்கை அரசு தமிழ் மக்களின் ஒரு பகுதி யினரைக் கோடாலிக்காம்பாய் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதையும் நாவல் உரைத்து நிற்கிறது. கதை சொல்லியின் தாயார் நாவலின் அடிநாதம் எனலாம். பிள்ளைகள் மீது அவர் கொண்ட பாசமும் மனித நேயமும் பொருளாதார தடைகள் அமுல்படுத்தப்பட்ட சூழலில் குடும்பத்தை நடாத்த அவர் படுகின்ற பாடுகளை யும் நாவல் போகிற போக்கில் சித்திரித்துச் செல்கிறது. பாடசாலையில் மகன் அநியாயமாகத் தண்டிக்கப்படும் போது அதனைத் தட்டிக் கேட்கும் ஒருவராகவும் அவர் காணப்படுகின்றார். பெண் தெய்வத்தின் குறியீடே ரவியின் கொற்றவை. கொற்றவை அன்பின் உறைவிடம். ஆதித் தமிழ்க்குடியின் ஆதார சுருதி. அக்கொற்றவை ரவியின் தாயாகவும் நாவலில் பரிணமிக்கிறார். ஈழத் தமிழரின் வாழ்வினை பால்ய, கதைசொல்லியின் பதின்ம, நடுத்தரப் பருவத்து அனுபவங்களை நனவிடை தோய்த லுக்கூடாக வெளிப்படுத்தும் இந்நாவல் ஈழப் போராட்டத் தின் ஆரம்ப கால வரலாற்று அம்சங்களை வெளிப் படுத்தி நிற்பதோடு ஈழத்தின் அரசியல் சமூகப் பொருளா தார நிகழ்வுகளையும் கதைசொல்லியின் வாழ்வுக்கூடாக உயிர்ப்புடன் காட்சிப்படுத்துகிறது. நாவலில் கையாளப் படும் வட்டாரமொழி நாவலுடன் வாசகனை ஒன்றறச் செய்கிறது. நாவலின் பலமும் இதுவெனலாம்.


**1958**

1958ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர் மீது ஏவப்பட்ட இனவன்முறை குறித்துப் பேசும் "1958" நாவல் அருணாசலம் மாஸ்டர், அவரது மனைவி சியாமளா அம்மாவுக்கூடாக வன்முறை நிகழ்ந்த நாட்களில் தமிழர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளையும் பேசி நிற்கிறது. 1958க்கு முன்னர் மினுவாங்கொடையில் உள்ள கல்லுலுவ கிராமத்தில் இன, மத பேதமின்றி வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் உறவுகளைக் காட்சிப் படுத்தும் இந்நாவல் அவர்கள் ஒன்றாக இருந்து நிலாச் சோறும் கூட்டாஞ்சோறும் உண்டு மகிழ்ந்த நிகழ்வு களையும் கண்முன்நிறுத்துகிறது. நோன்பு நாட்களில் முஸ்லிம் மக்களுடன் ஒன்றற இருந்து தமிழர்கள் விருந்துண்டு மகிழ்ந்த சம்பவங்களும் பொங்கலுக்கு முஸ்லிம் மக்கள் தாங்கள் தயாரித்த வெடிகளை தமிழ்க் குடும்பங்களுக்கு கொடுத்த நிகழ்வுகளும் கதைப் போக்கில் நாவலில் கூறப்படுகின்றன. இக்காலப்பகுதி யில் தமிழர்கள் பகுதியில் சிங்களவர்கள் திட்டமிட்டு குடி யேற்றப்படுவதும் தமிழருடைய நிலங்கள் அபகரிக்கப் படுவதும் அச்சந்தர்ப்பத்தில் தமிழர்கள் பிரச்சினைகள் பாராளுமன்றத்தில் கதைக்கப்பட்டு ஜி.ஜி.பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைப்பதும் இங்கிலாந்து சென்று தமிழ் மக்களின் உரிமைகளுக் காகப் பேசுவதும் நாவலில் ஆழ அகலமாகப் விளக்கப் படுகிறது. அதேய ஜி.ஜி.பொன்னம்பலம் டி.எஸ்சேன நாயக்காவின் அமைச்சரவையில் அமைச்சரான கதை யையும் நாவல் சித்திரித்துச் செல்கிறது. அச்சூழ்நிலை யில் செல்வநாயகம் ஆரம்பித்த சமஸ்டிக்கட்சி சிங்கள வர் மத்தியில் தமிழரசுக்கட்சியான கதையையும் நாவல் விளக்கிச் செல்கிறது. தமிழ்ப் பிரதிநிதிகளின் இரட்டை முகத்தையும் சிங்கள அரசியல்வாதிகளுடன் தமிழ்ப் பிரதிநிதிகள் கொண்டிருந்த நெருக்கமான உறவையும் காட்சிப்படுத்தும் இந்நாவல் கறுவாத் தோட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகளின் நிரந்தர வசிப்பையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இனக்கலவரம் நிகழும் காலத்தில் அருணா சலம் மாஸ்டரையும் அவரது மனைவி சியாமளா அம்மா வையும் நந்திமித்திர பவுத்த தேரர் காப்பாற்றி ஹாஜியார் வீட்டிற்கு வழி அனுப்பி வைப்பது மனத்தினைத் தொடும் வகையில் நாவலில் வந்து செல்கிறது. நந்தா, பெரேரா ஆகியோர் தமிழ் மக்கள் மீது கொண்ட பாசத்தையும் பரிவையும் நாவல் உணர்வுபூர்வமாக எடுத்துரைக்கிறது. நாவலில் வரும் நந்திமித்திர பவுத்த தேரர் கருணையின் வடிவமாகத் துலங்குகிறார். அன்பையும் ஜீவ காருண்ணி யத்தையும் வலியுறுத்தினாலும் அவரிடம் ஆழமான அரசியலறிவு காணப்படுகிறது. ஈழத்தமிழர்களின் விடுதலை எழுச்சி யையும் இலங்கையின் அரசியல் வரலாற்றையும் ஆய்வு நோக்கில் விமர்சிக்கும் 1958 நாவல் ஈழவரலாற்றின் பார்க்கப்படாத கவனிக்கப்படாத பக்கங்கள் பலவற்றை யும் எழுதிச் செல்கிறது.

தமிழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்கும் அ.இரவியின் நாவல்கள் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வையும் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால நிகழ்வுகளையும் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்க வல்லன. 1950களுக்குப் பின் வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்வை புறவய நோக்குடன் உண்மையாகவும் துல்லிய மாகவும் வெளிக்காட்டும் இந்நாவல்கள் கதைமாந்தர் களுக்கூடாகக் கடந்த காலச் சம்பவங்களையும் நிகழ்வு களையும் விவரிக்கவல்லன. அ.இரவி காட்டும் தேர்ந்த இடச்சூழலும் உறவுநிலை களும் மானுடச் சலனங்களும் மொழிவழக்கும் கதையை உயிர்ப்புடன் துலங்கச் செய்பவை. காலமாகிப் போன கதைகளின் தொடர்ச்சி யாக அ.இரவியின் எழுத்துக்கள் துலங்கினாலும் அவை காலத்தால் அழியாத எழுத்துக்களாக என்றும் நிற்க வல்லன.

சிவகுருநாதன் கேசவன்






# முகிழ்ப்புக் காலத்தின் ஒரு வாக்குமூலம் "வீடு நெடும் தூரம்"

**வ**ரலாறு புனைவாகுமா? புனைவு வரலாறாகுமா? புனைவின்றி வரலாற்றைப் பதிவுசெய்தல் சாத்தியமாகியுள்ளதா? என்பதான கேள்விகள் எழுவதனைத் தவிர்க்க முடியவில்லை. சார்பின்றிய வரலாற்றுப் பதிவு எத்துணை சாத்தியமானது என்பதும் வினாவே. வரலாறு என்பது காலங்கடந்தது மட்டுமல்ல. எமது ஒவ்வொரு அடிச்சுவடுங்கூட அதுதான். எங்களின் அனுபவங்களும் வரலாற்றின் அங்கங்களாகிவிடலாம். தனிமனிதன், சமூகம், குழுமங்கள், இனங்கள், உலகம் எனப்படுபவைகள் தமக்குள் கொண்டுள்ள உறவுகள் வரலாறாகின்றன.

பொதுவாகப் புனைவுகள் என்றால் அவற்றைக் கற்பனைகளின் தொகுப்பு என்றே கருதுகிறோம். பொய்யும் புளுகுகளும் நிறைந்தவைகளாகவே புனைவுகளைப் பார்க்கிறோம். ஆனால் "பொய்யும் கற்பனையும் அல்ல புனைவு. உண்மையின் சக பயணியே புனை" என்கிறார் ரவி(அ.இரவி). அவரின் கருத்தும் கவனிப்பிற்குரியதுதான். புனைவுக்குள் இருக்கும் உண்மைகளையோ வரலாற்றுச் சுவடு களையோ மறுதலித்துவிட முடியாது. பொதுவாக இலக்கியப் பனுவல்கள் என்றாலே அவை புனைவு களினாலேயே கட்டியெழுப்பப்படுகின்றன என்று கருதப்படுகிறது. அந்தப் புனைவுகளின் இடைவெளி களில் உண்மைகளும் நிஜங்களும் பொதிந்து வைக்கப்படுவதுமுண்டு. அது சாத்தியமானதே.

புனைவு இல்லாத படைப்புகள் சாத்தியமானவைதானா என்பது சிந்தனைக்குரியதுதான். வரலாறுகளுக்குள்ளிருந்து உண்மை வரலாற்றையும் புனைவுகளுக்குள்ளிருந்து நிஜத்தையும் தோண்டியெடுத்து வெளிக்கொணரவேண்டியது மானுட விடுதலையை இலக்காகக்கொள்கின்ற செயற்பாட்டாளர்களது பணியாகின்றது. வரலாறோ புனைவோ அதற்குள் இருக்கும் அரசியலைப் புறந்தள்ளுவது என்பதும் சாத்தியமற்றதுதான். எவ்வாறாயினும் அது வரலாறோ புனைவோ அல்லது இரண்டினதும் கலவையோ, அது எமக்குக் கற்றுத்தருவதற்கு; உணர்த்துவதற்கு எதையாவது கொண்டிருக்குமாயின் பயன்பாடுடையதாகிவிடுகிறது.

***

"வீடு நெடும் தூரம்" என்ற ரவியின்(அ.இரவி) படைப்பு வழமையான இலக்கியப் பனுவல் அல்ல. அது அனுபவங்களின் தொகுதி எனப்படலாம். சுயவரலாற்றின் ஒரு பகுதி என்றோ ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு காலகட்டத்திற்கான பதிவு என்றோகூட சொன்னாலுந் தவறில்லை. ஆனால்

அதன் எடுத்துரைப்புமுறையினால் அப்பிரதி இலக்கிய மாகிவிடுகிறது. அனுபவப் பூக்களை உதிரிகளாகச் சிதறடித்துவிடாமல் புனைவு என்ற நாரினால் தொடுத்து, அழகான மாலையாக்கித் தந்திருக்கிறார் ரவி. புனைவு என்ற நாரால் தொடுக்கப்பட்டிருந்தாலும் மாலையில் வரிசைகட்டி நின்று, அனுபவ மலர்கள் தரும் வரலாற்று வாசம் நிராகரிக்கப்படமுடியாதது. கற்றுக்கொள்ள நாம் தயாராக; தகுதியாக இருந்தால், "வீடு நெடும் தூரம்" எமக்குக் கற்றுத்தருவதற்கு ஏராளமான விடயங்களைப் பொதிந்து வைத்திருக்கின்றது. அது வெளிப்படையாகச் சொல்லியிருக்கும் விடயங்களுக்கு அப்பாலும். அனுபவக் குறிப்புகளை புனைவுமொழி கொண்டு நெறிப் படுத்தித் தந்திருக்கும் ரவியின் படைப்பாற்றல் வீடு நெடும் தூரத்தினை இலக்கியப் படையலாக்கியிருக் கிறது என்றால் மிகையல்ல.

தனது பிரதிபற்றி ரவி, "இதனைப் படைப்பு என்று கூறமுடியாது. எனது அரசியல் பயணத்தின் அனுபவப் பகிர்வே இது. பயணத்தில் பார்க்க வாய்க்காத இடங்களை புனைவின் மூலம் இட்டு நிரப்பினேன். பொய்யும் கற்பனையும் அல்ல புனைவு. உண்மையின் சக பயணியே புனைவு" என்று கூறியிருக்கும் கருத்தினை விளங்கிக்கொண்டால்த்தான், இப்பிரதியின் பெறு மானத்தைப் புரிந்துகொள்ளலாம். தமிழினத்திற்கான விடுதலையை இலக்காகக் கொண்டு அகிம்சை வழியில் தொடங்கப்பட்ட பயணம், ஆயுதப் போராட்டமாக முகிழ்க்கத் தொடங்கிய காலகட்டத்தை; அக்கால கட்டத்தில் ஒரே இலக்கு நோக்கிப் பயணித்தவர் களிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள், முரண்பாடு கள், மோதல்கள், கால்வாருதல்கள், இலக்குத் தவறல்கள், இலக்கு மாறல்கள் முதலியவற்றை ஒரு தனிநபரின் பார்வையாக, அழகாகப் பதிவிட்டிருக்கிறது வீடு நெடும் தூரம்.

அதிகாரத்திற்கெதிராகப் போராடப் புறப்பட்ட வர்கள் அதிகாரத்திற்காக முனைந்துநின்ற தருணத்தை; எதிரிகளை நோக்கி நீண்ட ஆயுதங்கள் சகபாடிகளை முத்தமிட ஆரம்பநாட்களை; அர்த்தமின்றி அவலமாகிப் போன தியாகங்களை; யதார்த்தங்களை உணரத் தலைப் படாத, ஏட்டுச்சுரைக்காய்கள் பரிசளித்த வரட்டுத் தனங்களின் விளைவுகளை; இலட்சியக் கனவுகளோடு புறப்பட்டு, சிதைந்த கனவுகளோடு அவலமாய் நின்றோர் தம் நிலைகளை எனப் பல்வேறு அம்சங்களைத் தனது அனுபவப் பகிர்வாக இப்பிரதியில் ரவி பதிவு செய்துள்ளார். 1972 தொடக்கம் 1986ஆம் ஆண்டு வரை யிலான பதினைந்து வருட ஈழத் தமிழ் தேசிய அரசியலின் குறுக்குவெட்டுத் தரிசனமாக இப்படைப்பு அமை கின்றது. தன்மைநிலையில் நின்று ஒருவர் கதை சொல்லியாக, கதையைக் கூறிச்செல்வதாக இப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது. அக்கதைசொல்லி நூலாசிராக இருக்கலாம். ரவி ஓர் அமைப்பினைச் சார்ந்து இயங்கிய வர். ஒரு கொள்கை சார்ந்தவர். அக்கண்ணோட்டத் திலேயே அவரது சிந்தனைகள் முளைவிட்டிருக்கும். அவரது கருத்துகளும் கற்பிதங்களும் அதன் அடிதொடர்பவையாகவே இருக்கக்கூடும். படைப்பில் அவரது சார்புநிலை செல்வாக்குச் செலுத்தியிருக்கும். இவற்றை மனங்கொண்டே "வீடு நெடும் தூரம்" என்ற படைப்பை அணுகவேண்டும். அவ்வாறான தெளிவுடன் தான், எழுத்தாளரது நிலைசார்ந்து இக்குறிப்பு எழுதப் படுகிறது. அதுவே நியாயமானதாக இருக்கும்.

இன்று சந்தி மட்டுமன்றி ஒழுங்கைகளும் சிரிக்கும் நிலையில் ஈழத் தமிழ்த் தேசிய அரசியல் இருக்கும் தருணத்தில், நம்பிக்கைகளோடு ஆரம்பித்து, தடம்மாறத் தொடங்கிய அவ்வரசியலின் ஆரம்ப காலத்தை வீடு நெடும் தூரத்தினூடாகத் தரிசிக்கின்ற போது நெஞ்சம் கனக்கிறது. அதில் எமது அவலத்திற் கான காரணங்களை இனங்காணமுடிகிறது. சுய விமர்சனமாக, சமூக விமர்சனமாக அது எம்மை எமக்குத் தோலுரித்துக் காட்டுகிறது. இந்நூலிலும் அனுபவங்கள், வரலாறுகள் பாடங்களாகிக் கிடக்கின்றன படிக்கத் தயாரில்லாதோர் மத்தியிலே.

***

"வீடு நெடும் தூரம்" என்ற படைப்பு 1972 தொடக்கம் 1986ஆம் ஆண்டுவரையிலான பதினைந்து வருடகாலத் தொடர்புடைய சம்பவங்களைத் தொடுத்து ஒரு கதைபோல; நாவல்போலத் தந்திருக்கிறது. படிப் போரை ஈர்த்து சுவாரஷ்யத்தோடு முன்னகர்ந்து செல்கிறது. அது ரவியின் படைப்பாளுமைக்குச் சான்று. அதேவேளை நூல் நெடுகிலும் உணர்த்தப்படும் முக்கிய விடயங்களைப் பகுத்து நோக்கினால் அவற்றை நான்கு பிரிவுகளாக நோக்கமுடியும். இப்படைப்பினை வர லாற்று நோக்கில் அணுக அத்தகைய பார்வை உதவக் கூடும். வீடு நெடும் தூரத்தின் உள்ளடக்கத்தினை சூழ் நிலைகளும் தூண்டிகளும், மனநிலையும் நம்பிக்கை களும், ஆரம்ப முயற்சிகள் - செயற்பாடுகள், அக முரண்பாடுகளும் சிதைவுகளும் என்ற அடிப்படையில் பகுத்து நோக்க முயற்சிப்போம்.

### 1. சூழ்நிலைகளும் தூண்டிகளும்

இந்த நூல் உள்ளடக்கும் காலப்பகுதியான 1972 1986 ஆண்டுகளுக்கிடைப்பட்ட பகுதியில் அதாவது போராட்டம் முகிழ்க்கத் தொடங்கிய காலகட்டத்தில் தமிழ்ப் பகுதிகளின், குறிப்பாக யாழ்ப்பாண நிலைமை கள் எவ்வாறு இருந்தன என்பதனை நூலில் நூலாசிரியர் பதிவுசெய்துசெல்கிறார். இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 1972ஆம் ஆண்டின் மே, 22ஆம் நாளில் வடபகுதியெங்கும் துக்க நாளாகிப்போன காட்சியை விவரிப்பதோடு வீடு நெடும் தூரம் ஆரம்பமாகிறது. தொடர்ந்தும், "கடைகள் அடிக்கடி அடைக்கப்பட்டன. கல்லால் எறிவாங்கிய பஸ்கள், பொலிஸ் ஜீப்பின் பாதுகாப்புடன் பணயம் செய்தன. நாங்கள் இடையிடையே பாடசாலை போவதை மறுத் தோம். ஹர்த்தால், கரிநாள், கடையடைப்பு, கத வடைப்பு என்ற சொற்கள் சாதாரணமாகப் புழக்கத்தில் வந்தன. யாவற்றிலும் மேலானது இவைதாம்" என அன்றைய நாட்களின் நிலையைப் பதிவிட்டுள்ளார்.

மேலும் "இலங்கை வானொலியில் ஒருசொல் அப்போது அனுமதிக்கப்படவில்லை. அது தமிழ். அச்சொல் ஒரு மாயமான வெட்டரிவாளாக சிங்கள அரசை பய முறுத்திக் கொண்டிருந்தது. தமிழ் என்ற அச்சொல் தப்பித்தவறி ஒலித்தால் தம் தலையில் வாள் இறங்குகிறது என்ற பயப்பிராந்தியில், சிங்கள அரசு திடுக்கிட்டது" என்று அன்றைய சூழலை வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

"அடுத்த தைப்பொங்கல் தமிழீழத்திலை. எங்கன்ரை தளபதி அதைச் சொல்கிறார். செய்வார். தளபதி அமிர்தலிங்கத்துடன் உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரமும் சேர்ந்து நிற்கிறார். அடங்காத் தமிழன் சுந்தரலிங்கமும் இதற்கு ஆதரவு. மட்டக்களப்பு சொல்லின் செல்வர் இராசதுரை எத்துணை வீரியமாய் நிற்கிறார். காசி ஆனந்தன் அண்ணனின் கவிதைப் பேச்சு, மங்கையர்க்கரசியக்காவின் வெண்கலக்குரல்...... இவை தமிழீழத்தைப் பெற்றுத்தரப்போதாதா?" என்ற (கானல் நீர்) நம்பிக்கைகளோடு மக்கள் உணர்ச்சி பூத்திருந்த அன்றைய நாட்களை; "தமிழீழம் அது எப்படி இருக்கும்? அதன் வளம் என்ன? நாங்கள் என்ன செய்யவேண்டும்? தமிழீழம் கிடைத்தவுடன் முதலில் செய்வது இருப்புப் பாதைகள் போடுவது. காரைநகரிலிருந்து அளவெட்டி ஊடாக பருத்தித்துறைவரை ..." என்றும் "ஏற்றுமதி செய்ய நெல்லும் மீனும் வெங்காயமும் மிளகாய் புகையிலையும் உள்ளன. மேலும் ஆசியாவிற்குள்ளேயே மிகத் திறமான இயற்கைத் துறைமுகம் திருகோணமலை யில். அதுவே தமிழீழத்தின் தலைநகர்..." என்றும் கட்டி யெழுப்பப்பட்ட கற்பனைகளோடும் அதன் விளைவான திட்டங்களோடும் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பூரித்து, செயற்பட முனைந்த அன்றைய நாட்களை வீடு நெடும் தூரத்தில் கனத்த இதயத்தோடு படிக்க முடிகிறது. அன்றைக்குத் தைப்பொங்கல், அண்மைய நாட்களில் தீபாவளி. பண்டிகைகளின் பெயர்கள் மாறினவே தவிர ஏமாற்றுவோரும் ஏமாளிகளும் மாறிவிடவில்லை என்பதையும் உணரமுடிகிறது.

தேர்தலின் மகா வெற்றியின் மூலம்; மக்களின் ஏகோபித்த தீர்மானத்தின் மூலம் எல்லாம் (நம்ப வைத்தவர்கள் "எல்லாம்" என எதனைத் திட்டமிட்டுக் கொண்டார்கள்?) சாத்தியமாகும் என நம்ப வைக்கப் பட்ட மக்கள், அதற்காக உழைக்கத் தலைப்பட்ட 1977ஆம் ஆண்டின் நிலைமையை இந்நூலில் காண்கிறோம். "வெறும் புள்ளடியா அது? இராமரின் அணைக்கு அணிலின் சிறு கல்லா? அப்படி ஏதும் அல்ல. இது ஒரு தவம். ஒரேயொரு வரம். தவம் இருக்கிறோம், வரம் கேட்கிறோம். அதற்கு ஆண்டவரின் காலடியில் இலட்சக்கணக்கான அர்ச்சனைப் பூக்களைச் சொரி கிறோம். அதில் ஒரு பூ எனது. அல்ல; அன்று நான் ஐந்து பூக்கள் சொரிந்தேன். சொரிகிற வயதும் எனக்கில்லை" என்பதில் அன்றைய மக்களின் குறிப்பாக இளைய தலை முறையினரின் மனோநிலையையும் செயற்பாடுகளையும் மட்டுமன்றி பரகசியமான பல இரகசியங்களையும் அறியமுடிகிறது. மக்களின் ஏகோபித்த தீர்ப்புகள் எனச் சொல்லப்பட்டவற்றைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டு கிறது. எதிர்பார்த்த அந்த மகா வெற்றியின் ஓராண்டு முடிவில் யாழ்ப்பாண நீதிமன்ற மதிலில் எழுதப் பட்டிருந்ததாக நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் "ஆண்டு ஒன்றாச்சு. நாடு இரண்டாச்சா", "கேட்டது தமிழீழம்; கிடைச்சது யப்பான் ஜீப்" போன்ற வாசகங்கள் உண்மையை உறைக்க உரைக்கின்றன. குட்டி இராஜாக் களும் சண்டியர்களும் உருவாகியதை நூல் அழகாகப் பதிவுசெய்திருக்கிறது. மேலே குறிப்பிட்ட தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கு முன்னர் அம்மாள் கோயிலுக் குச் சென்றுவந்ததாகக் குறிப்பிடும் கதைசொல்லி, தான் கோயிலில் இருந்து திரும்பிய காட்சியை பின்வருமாறு தருகிறார். "வீபூதி சந்தனம் அப்பி அப்படியே வீட்டை வந்தன். காதுக்கை பூவைக்க மறக்கவில்லை". இதில் "காதுக்கை பூவைக்க மறக்கவில்லை" என்பது குறிப்புப் பொருளாகி உணர்த்துவதனை உணர்வது சிரமமல்ல.

77 இனக்கலவரத்தின் அவலங்கள், பாதிக்கப் பட்டோர் "லங்காராணி" கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்புதல், அவர்களின் உணர்வுகள் என்பன படைப்பில் பதிவாகியுள்ளன. "எங்கள் நாட்டுக்கு வந்திட்டம் என்று அந்த அம்மா அழுதா. அதைச் சொல்லி அத்தான் அழுறார். அதைக் கேட்டு நான் அழுதேன். தோழர் செந்தில் இது ஒரு நாடு என்கிறார். பிரிவினைவாதம் பிற்போக்குத்தனம் என்றும் சொல்கிறார். தமிழர்கள் ஏன் கொல்லப்படவேண்டும் என்ற கேள்வி தோழர் செந்தி லிடம் இல்லை. அவர்களுக்கு அணியப்பட்ட கண்ணாடி அப்படித்தான் பார்க்கவைக்கிறது" என்ற கதைசொல்லி யின் சிந்தனை, தோழர் செந்திலின் கருத்திலிருந்து மாறு படுகிறது. அன்றைய சூழ்நிலையும் கட்டவிழ்த்து விடப் பட்ட வன்முறைகளும் அடக்குமுறைகளும் இவ்வாறான மோதல் சிந்தனைகளை மேலும் மேலும் வளர்த்தன என்பதனை இப்பிரதி தெளிவுபடுத்துகிறது. அவ்வாறான நிலைமையின் விளைவுதான், யாழ்ப்பாணம் உயனையில் பஸ் எரிக்கப்பட்ட சம்பவம். "அது யாருடைய பஸ். அரசாங்கத்தினுடையது. அரசாங்கம் யாருடையது? அது சிங்களவருடையது..." அதனால் பஸ் எரிகிறது. அது யாருடைய பஸ் என்று சிந்தித்தவர்களுக்கு, அது யாருக்கான பஸ் எனச் சிந்திக்கத்தோன்றவில்லை; சிந்திக்க உணர்வுவிடவுமில்லை.

"நாங்கள் வரட்டுத்தனமா எதையும் அணுகக் கூடாது. வளமாகப் பார்க்கவேண்டும். மார்க்சீயத்தை எங்கட மண்ணுக்கு ஏற்றமாதிரி, மண்ணுக்கு எப்படித் தேவையோ அப்பிடிப் பயன்படுத்த வேண்டும். லெனின் ரஷ்யாவில் அதைத்தான் செய்தார். மாவோவும் சீனாவில் அதையே செய்தார். அதுதான் லெனினிசம், மாவோயி சம் என்று வந்தது" என்ற கருத்து ஒருசாராரிடமிருந்ததை நூல் வெளிப்படுத்துகிறது. கொரில்லாப் போர் முறை எமது சூழலுக்குச் சரிவராது என அவர்கள் கருதினர் என்பதும் பதிவாகியுள்ளது. ஆனாலும் பின்னர் அப் போர் முறையைப் பிரயோகித்து சாத்தியமாக்கியவர்கள் அடுத்த கட்டத்தில், அடுத்தடுத்த தளத்தில் முன்னகர்த்து வதிலேயே தவறிப்போயினர் என்பது வேறுகதை.

**2. மனநிலையும் நம்பிக்கைகளும்**

சூழ்நிலைகளும் நெருக்கடிகளும் வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிக்கின்றன என்பதனை மறுப்பதற் கில்லை. அத்தகைய சூழ்நிலைகளும் நெருக்கடிகளும் மக்களின் மனநிலைகளில் செல்வாக்குச் செலுத்து கின்றன. சூழலை வெற்றிகொள்ளவும் நெருக்கடிகளி லிருந்து தப்பித்துக்கொள்ளவும் நம்பிக்கை களைக் கட்டியெழுப்பிக்கொண்டு அதைநோக்கிச் செயல்பட விளைகின்றனர். நம்பிக்கைகளை உருவாக்குவதில் அகச்செல்வாக்கினைக் காட்டிலும் புறச்செல்வாக்குகள் பெரும்பாலும் அதிக தாக்கஞ் செலுத்துகின்றன. அவ்வகையில் அக்காலகட்ட(1972 1986) மக்களின் மனநிலையையும் நம்பிக்கை களையும் இந்நூலில் தரிசிக்கமுடிகிறது.

தேர்தல் வழியிலும் அகிம்சை முறையிலும்



முயற்சித்த போதும், எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிலையில் வன்முறைசார்ந்த போராட்டம்தான் சாத்திய மான வழி என பெரும்பாலானோர் கருதிய நிலையையும் அதற்கு முன்னதாக அரசியல் வலுவூட்டல்; மனோபாவ மாற்றம் அவசியம் என நம்பிய சிலரின் எண்ணங்களை யும் இந்நூல் தெளிவாக அறியத்தருகின்றது. "எதுவும் முத்திப் பழுக்கவேணும். அப்பதான் அது இனிக்கும். விதையும் முளைக்கும்... ஒண்டை உணர்ந்துகொள். அரசியல் இல்லாத இராணுவத்தாலை ஒண்டும் செய்ய ஏலாது. அதே சமயம் இராணுவம் இல்லாமலும் அரசியல் போரை நடத்த ஏலாது" என்ற கருத்துகள் முனைப்புப் பெற்ற காலமாக ஆரம்ப காலம் இருந்ததை யும் காலப்போக்கில் அரசியல் தெளிவைப் பெறுவதை விட; பரவலாக்குவதைவிட இராணுவ முனைப்பு விரைந்து தீவிரம்பெற்றதையும் நூல் தெளிவாக்குகிறது. "அவங்கள் திட்டமிட்டிட்டாங்கள். தமிழரை மாத்திரம் அழிச்சாப் பத்தாது. தமிழர் நிலங்களைப் பறிச்சால் மாத்திரம் போதாது. தமிழன்ரை கலை, பண்பாடு, கலாச்சாரம் எல்லாவற்றையும் அழிக்கவேணும். அவர்கள் திட்டமிட்டு வேலை செய்றாங்கள். ... நாங்கள் கத்தியையும் தீட்டவேணும். புத்தியையும் தீட்ட வேணும். அதற்குரிய காலம் வந்திட்டுதெடா" என்பது அக்கால நிலைமையைத் தெளிவுபடுத்துகிறது. அதே வேளை "அங்குலம் அங்குலமாப் போனாலும் நாங்கள் ஆழமாகக் காலை ஊண்டிக் கொண்டு போவம்" என்ற தெளிவு பெரும்பாலானோரிடம் இருக்காமையையும் நூல் வெளிப்படுத்துகிறது.

"எழுபத்தேழு இனக்கலவரத்தை எடுத்துப் பாருங்கள். சிங்களவர்களால் கொல்லப்பட்ட தமிழர் களிலும் பார்க்க சிங்களவர்களால் காப்பாற்றப்பட்ட தமிழர்கள்தான் அதிகம். இன்னும் ஒன்றைக் கவனித்துப் பாருங்கள் சிங்களவர்களில் எவ்வளவு வீதம்பேர் தமிழர் களைக் கொல்ல வேண்டும் என்று அலைந்திருப்பார்கள்? ஒரு வீதம் பேர்? நான் அதிலும் குறைவு என்றுதான் நம்பு கிறேன். அந்த ஒரு வீதமான சிங்களவர்களுக் காக, மீதி தொண்ணூற்றொன்பது வீதமான சிங்களவர்களை நாம் வெறுக்க வேண்டுமா? அதற்காக நாட்டைப் பிரி என்று கோருவது எந்தவகையில் நியாயம்?..." எனத் தோழர் செந்தில் எழுப்பியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வினாக்கள் அன்றிருந்த பிறிதொரு விதமான சிந்தனையை வெளிப்படுத்து கின்றன. "பிரிவினை என்ற கோசமே பிற்போக்கானது. சிங்களத் தொழி லாளர் வர்க்கமும் தமிழ்த் தொழி லாளர் வர்க்கமும் இணைந்து போராடினால் பிறகு இனப்பிரச் சினை என்ற வார்த்தைக்கு இடம் ஏது? இவர்களை இணையவிடாத சூழ்ச்சி அரசியலைத் தான் சிங்களத் தலைவர்களும் தமிழ்த்தலைமைகளும் செய்கின்றன" என்ற மாற்றுச் சிந்தனை இருந்ததனையும் நூல் இனங்காட்டத் தவறவில்லை. அன்றிலிருந்து இன்று வரை ஒரு சாராரிடம் இக்கருத்து தொடரத்தான் செய் கிறது. வாய்ப்பாடாக அவர்களும் சொல்லிக் கொண்டு தானிருக்கிறார்கள். ஆனால் அது சாத்தியமான தாயிருந் திருக்குமா? அது நேர்மையாக வாய்ப்புப் பார்க்கப் பட்டதா? அதற்கான முயற்சிகள் ஏன் முன் னெடுக்கப் படவில்லை? அதற்கான வாய்ப்பிருக்க வில்லையா? என்பன விடைகாணவேண்டிய கேள்விகள். ஒருவேளை சாத்தியமாகியிருந்தால் இவ்வளவு அழிவுகளும் இழப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்குமே! தமிழர்கள் மட்டுமன்றி இலங்கையர் அனைவருமே சுபீட்சமடைந் திருக்கலாமே! மேலுள்ள கருத்துகளைப் படிக்கும் பொழுது, இவ்வாறான ஏக்கங்கள் மேற்கிளம்பு வதனைத் தவிர்க்கமுடியவில்லை.

"துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அதிகாரம்

பிறக்கிறது" என்ற மாசேதுங் கூறிய வாசகம் தன்னைச் சுட்டதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவர் அறிந்தோ அறியாமலோ தனது நூல் நெடுகிலும் துப்பாக்கிக் குழலிலிருந்து பிறந்த அதிகாரத்தை, ஏகாதிபத்தியத்தின் தோற்றுவாயைப் பதிவு செய்தே சென்றுள்ளார். ஈழத்தமிழர்களின் அரசியலை வலுப் படுத்தி வளப்படுத்தியது துப்பாக்கிக் குழலிலிருந்து பிறந்த அதிகாரம்தான். அதேவேளையில் சிதைத்து நாசப்படுத்தியதும் அதுதான். நூலில் பதிவாகியிருக்கும் மணியம் வாத்தியிடம் காசு பறித்த சம்பவம் இத்தகைய அதிகாரத்தால் விளைந்த சிறு சம்பவம். அதில் ஈடுபட்ட மனநிலையைக் கதைசொல்லி, "சாகசக் கடலில் கொஞ்சங் கொஞ்சமாக இறங்கினேன். மூழ்கி, எழுந்து, மூச்சுத் திணறி, கைகால் அடித்து, பத்து அடி எட்டும் வரை நீச்சல் கற்றேன்" எனப் பதிவுசெய்துள்ளார். அதே வேளை, "ஒன்றும் நியாயத்தின் கோட்டைத் தாண்டக் கூடாது. நீதியின் விளிம்பில் நிற்க வேண்டும். அது அறம்தான் என்று யாரும் சொல்ல வேண்டும். யார் சொல்கிறார்களோ இல்லையோ மனதும் காலமும் சொல்ல வேண்டும்" எனத் தம்மை நியாயப் படுத்திக் கொள்ள முற்பட்டதையும் நூலில் உணரமுடிகிறது. எது நியாயம் ? எது நீதியின் விளிம்பு? எது அறம்? அவை ஆளாளுக்கு மாறுபடு வனவா! மணியம் வாத்திக்கு நடந்தது சிறு சம்பவம்தான் ஆனால் பிற் காலங்களில் எத்தனை எத்தனை பெரிய பெரிய சம்பவங்கள் நிகழ்ந்து கழிந்தன. அதிகாரத் தாண்டவங் களின் ஆரம்பப் புள்ளி கள் இந்த நூலில் தெளிவாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன.

தேசிய விடுதலைப் போராட் டத்தோடை பெண்கள் விடுதலை, சாதி விடுதலை போன்றவையும் இணைந்தே செயற்படவேண்டும். சாதி ஒரு பிரச்சினை தான். விடுதலை அடைந்தபிறகு சாதிப் பிரச்சினையைத் தான் முதலில் கையில் எடுக்கவேணும். போராட்டத்துக் குள்ள ஒரு போராட்டம் என்ற மாதிரித்தான் அது. அவ்வாறு கூலி விவசாயிகளின்ர பிரச்சினையும்இருக்கு என்பதான சிந்தனைகளும் இருந்ததனை அறிய முடி கின்றது. "சுதந்திரமான ஒரு தேசத்திலை இருந்து எப்ப இதையெல்லாம் இரசிக்கப்போறமோ? " என்றவாறான ஏக்கத் தினையும் படைப்பு நெடுகிலும் இனங்காண முடிகிறது.

### 3. ஆரம்ப முயற்சிகள் - செயற்பாடுகள்

வரிந்துகொண்ட நம்பிக்கையை நோக்கி நகர எத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்பதனையும் நூலில் இனங்காணமுடிகின்றது. சுவரொட்டி ஒட்டுதல், பாடசாலைப் பரிசோதனைக் கூடங்களில் இரசாயனப் பதார்த்தங்களை திருடி வெடி பொருள் தயாரிக்க முயற்சித்தல், அடகுக் கடையிலும் வங்கிகளிலும் கொள்ளை அடித்தல், கொள்ளை யடித்தவற்றை கடல்வழியாகக் கொண்டுசென்று ஆயுதம் வாங்க முயற்சித்தல், வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்காகச் செல்லுதல் என்றவாறான ஆரம்பகாலச் செயற்பாடுகளை இந்நூல் பதிவுசெய்துள்ளது.

இராணுவம் தேடுவதும் அதற்காக ஓடி ஒளித்துத் திரிவதுமான பயமும் துயரங்களும் நிறைந்த அவல வாழ்க்கையை இந்நூல் உணர்வோடு பதிவு செய்திருக் கிறது. சுவரொட்டி ஒட்டச்சென்று, தப்பி ஓடிய சம்பவம், பெற்றோரைப் பார்க்க வந்து தாய் ஆசையாய்ச் சமைத்துக்கொடுத்ததை ஒருவாய் சாப்பிடமுடியாமல் தப்பியோடவேண்டி ஏற்பட்ட சம்பவம் ஆகிய தனது அனுபவங்களை ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஆனால் வாசிப்போரைப் பதறவைக்கும் வண்ணமாக கதை சொல்லி தந்திருப்பது அலாதியானது. அவ்வாறான ஒரு சம்பவத்திற்குப் பின்னர் "மனம் மிகவும் பதகளித்து விட்டேன். ஒரு குண்டு முதுகைத் துளைத்திருந்தாலும் அம்மா அப்பாவுக்கு மகன் இல்லை. என் தாய்த் தேசத் திற்கு ஒரு தனயன் இல்லை" எனக் குறிப்பிடுவதிலிருந்து அவரது உணர்வை வாசகர்களால் புரிந்துகொள்ள முடிகிறது. "தமிழீழத்தைக் காணாது செத்த பாவியருள் ஒருவனாயிருப்பேன்" என்று அவர் பயன்படுத்திய தொடர் அன்றைய காலத்திலிருந்த நம்பிக்கையையும் ஆவலையும் ஏக்கத்தையும் வெளிப்படுத்திநிற்கிறது. இன்று அத்தகைய நம்பிக்கைகள் காலவதியான நிலை யில் அத்தொடர் பிரதிபலித்திருக்கக்கூடிய உணர்வைப் புரிந்துகொள்வது சிரமமானதுதான். அவ்வாறே தப்பியோடி, ஒளித்து வாழும் பிள்ளைகள் தொடர்பில் வருந்தி ஏங்கிச் சிதைந்த பெற்றோர்களையும் இந்நூல் பதிவிட்டிருக்கிறது.

போராட்டத்தை மக்கள் மயப்படுத்துகிற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டமையையும் அறிய முடிகின்றது. "துவக்குத் தூக்கிறதுக்கு வேறை ஆக்கள் இருக்கினம். நீ படிக்கிறாய். நல்ல கலைஞன். அதை எங்கன்ரை அரசியல் வேலைகளுக்கு எப்படிப் பயன் படுத்தலாம் எண்டுதான் நீ பாக்கவேணும்" என்பதும்

> அதிகாரத்திற்கெதிராகப் போராடப் புறப்பட்ட வர்கள் அதிகாரத்திற்காக முனைந்துநின்ற தருணத்தை; எதிரிகளை நோக்கி நீண்ட ஆயுதங்கள் சகபாடிகளை முத்தமிட ஆரம்பநாட்களை; அர்த்தமின்றி அவலமாகிப் போன தியாகங்களை; யதார்த்தங்களை உணரத் தலைப் படாத, ஏட்டுச்சுரைக்காய்கள் பரிசளித்த வரட்டுத் தனங்களின் விளைவுகளை; இலட்சியக் கனவுகளோடு புறப்பட்டு, சிதைந்த கனவுகளோடு அவலமாய் நின்றோர் தம் நிலைகளை எனப் பல்வேறு அம்சங்களைத் தனது அனுபவப் பகிர்வாக இப்பிரதியில் ரவி பதிவு செய்துள்ளார்.

“முதலிலை மக்களை அமைப்பாக்கவேணும். அதுக்கு மக்களிடம் நாங்கள் கருத்துக்களைக் கொண்டுபோய் சிந்திக்க வைக்கவேணும். அதுக்கு நாடகங்கள் நல்ல வடிவம். வீதி நாடகங்கள் நிறையச் செய்யவேணும்” என்பதும் அத்தகைய முயற்சிகளைப் பிரதிபலிப்பன. “அர்த்தமில்லாத தியாகங்களைத் தவிர்க்க நாம் இயன்ற தனைத்தும் செய்ய வேண்டும்” என்ற மாசேதுங்கின் கருத்தை இந்நூல் குறிப்பிட்டுச் செல்வது கவனிக்கப் படவேண்டியது.

போராட்டத்திற்கான பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தோட்டம் செய்யும் முயற்சி முன்னெடுக்கப்பட்டமையையும் நூல் பதிவுசெய்துள்ளது. “குறுக்குவழி எதுவும் இல்லையெடாப்பா. போராட்டத் திற்காக கொள்ளையடிக்கிறது எண்டது குறுக்குவழி தான். எங்கன்ரை காலில தங்கி மக்களைச் சார்ந்து நிக்க வேணும் அவையளையும் மெல்ல மெல்லப் பங்காளி யாக்கவேண்டும்”, “உழைக்கிறதுக்கு எவ்வளவோ வழி யிருக்கு. அதைவிட்டிட்டு நாங்கள் கொள்ளையர்களாக மாற ஏலாது” என்றவாறான சிந்தனைகள் இருந்தமையை யும் காணமுடிகிறது. ஆனால் நிலைமைமாறி “இராணுவ வேலைகள் எண்டிறது உங்கினேக்கை செய்யிற சில் லறைக் கொள்ளைகள்தான். முந்திக் கொள்ளையடிக் கிறது பிழையெண்டு கதைச்சம். இப்ப தேவைவருது. அடிக்கிறம். அடிக்கிறது பிழையெண்டு நான் நினைக் கேல்லை” என்ற நிலைமை அதே அமைப்பிற்குள் ஏற்பட்டதையும் நூல் பதிவுசெய்துள்ளது.

“அவசர அவசரமாக அவன் சிவப்பு மட்டைப் புத்தகங்களை மனனம் செய்தான். நெட்டுருப் போட்டான். எதற்கும் சிவப்பு மட்டைப் புத்தகத்தை முன்னே விரித்தான். தோழர் என்று விளித்து பூர்ஷ்வா, குட்டி முதலாளியச் சிந்தனை, புரட்டல்வாதம், திரிபு வாதம், வெள்ளைப் பயங்கரவாதம், லும்பன்கள் என்ற சொற்களால் எதிராளிகளை அடித்து வீழ்த்தினான். தான் நிற்பதற்கு ஊன்றிக்கொள்ள மூன்றாவது காலாக மார்க்சீயம், லெனினியம், மாவோயிசம் ஆகியன அவனுக்கு ஆனது. எதுவும் அவனுக்குச் செமித்ததில்லை. இரத்தமாகி உடலில் சுவறியதில்லை. அதனால் வாந்தி யெடுத்து குப்பென முகத்தில் துப்பினான்” எனப் பிறி தொரு விதமான போக்கினையும் அவ்வாறான போக்கு முன்னிலைபெற்றபோது ஏற்பட்ட விளைவுகளையும் நூல் பதிவுசெய்துள்ளது.

**4. அக முரண்பாடுகளும் சிதைவுகளும்**

“வெண்ணை திரண்டுவருகையில் பானை உடைந்தது போல” என்று ஒரு தொடர் பயன்படுத்தப் படுவதுண்டு. ஆனால் இங்கு கடையத் தொடங்குகை யிலேயே பானை உடைத்தெறியப்பட்ட நிலையை நூல் பதிவிட்டுள்ளது. பல மத்துகள் இருந்ததனால் விளைந்த விளைவு. அதற்கான நியாயப்படுத்தல்களையும் கதை சொல்லியின் உடன்பாடின்மை யையும் நூல் பதி விட்டுள்ளது. விடுதலைக்காகப் போராடப் புறப் பட்டவர்கள் இலக்குக்காக என்று சொல்லி இலக்குத் தவறிப் பயணித்த சம்பவங்கள் பலவற்றை நூலில் காணலாம். “ஆயுதம் இருந்தால் எதுவும் செய்யலாம் எண்டு நம்பிற கும்பல் ஒண்டு உருவாகுது.... இதெல்லாம் எங்கன்ரை போராட் டத்தை எவ்வளவு சிதைக்கும் தெரியுமே?” என்ற ஐயத்தையும் பதிவு செய்திருக்கிறது இந்நூல். சிதைந்த இன்றைய நிலையில் அந்த ஐயத்தின் ஆழம் உணரப்பாலது. கருத்து முரண்பாடுகள், அதிகாரப் போட்டி கள் முதலியன சகோதர வேட்டையை நிகழ்த்திய கோரத்தை இந்நூலின் பல இடங்களில் கண்டு துயருறுவதனைத் தவிர வேறென்ன செய்யமுடியும்.

“யாருக்கு என்ன குற்றம் செய்தார்கள் இவர்கள்? எனக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை. மேசையிலிருந்து நட்புடன் பேசவேண்டியவர்களுடன் ஆயுதத்தால் பேசுகிறோம்” என தனது உள்ளக்குமுறலைப் பதிவு செய்துள்ளார் கதைசொல்லி. இரு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளின் விளைவாகச் சுழிபுரத்தில் ஏற் பட்ட மோதல்கள், அதன் எதிரொலியாக மானிப்பாயில் நிகழ்ந்த சம்பவம் என்பவற்றைத் தெளிவாக நூலில் பதிவுசெய்திருக்கும் நூலாசிரியர், “என்னத்துக்காகப் போராடி இப்ப என்னத்தில வந்து நிக்கிறம் தோழர்?”, “நெஞ்சில் பதட்டம் வந்தது. என்ன செய்யப்போகிறோம் நாம்?” என்ற வினாக்கள் எழுந்ததையும் சுட்டிக் காட்டுகிறார். எமது எதிரிகள் யார்?, எமது துப்பாக்கிகள் எம்மைக் குறிவைக்கின்றனவா?, அரசியல் இல்லாத துப்பாக்கிகள் என்று இதைத்தான் சொல்கிறார்களா? என்பதான குழப்பநிலைகள் இருந்ததனையும் இப்படைப்பு பதிவுசெய்துள்ளது. அமைப்புகளிடையே மட்டுமன்றி அமைப்புகளுக்குள்ளேயே முரண்பாடுகள் வலுப்பெற்றமையையும் நூலில் காணமுடிகின்றது.

முதலில் எதற்கெதிராக வலுவாகப் போராட வேண்டும் என்பதில் குறித்த அமைப்பிலிருந்த பலருக்குத் தெளிவிருக்கவில்லை என அனுமானிக்கமுடிகிறது. “என்ரை கவலை என்னெண்டால் பகை முரண்பாட்டைக் கையாளாமல் நேச முரண்பாடுகளுக்காகப் போராடு கிறோமோ எண்டதுதான். இதாலை தமிழ் மக்களிட்டை இருந்து நாங்கள் அந்நியப்படப்போறம்” என்னும் கவலை மேற்குறிப்பிட்ட தெளிவின்மை இருந்ததனை உறுதிப்படுத்துகிறது. துரதிஷ்டவசமாக அத்தெளிவற்ற வர்களே குறித்த அமைப்பில் வலுப்பெற்றவர்களாகி யிருந்தனர். இதன் விளைவாக குறித்த அமைப்புப் பிளவு பட்டதனை இந்நூல் பதிவுசெய்துள்ளது. “அமைப்பு எங்கே கட்டப்பட்டிருக்கிறது? அது இரண்டாக உடை கிறதா? காரணம் என்ன? வரட்டுத்தனம், தேசிய விடு தலைப் போரிலிருந்து விலகி நிற்றல், அதிகார அடா வடித்தனம். இவை மாத்திரம்தானா? வேறு ஏதும் இருக் கிறதா?” என்ற சிந்தனை நிலைமையைத் தெளிவாக்கு கின்றது.

ஒருகட்டத்தில், நிலமை கைமீறிப்போன பின்னர் முக்கியமான சிலர் பிழைகளை உணர்ந்துகொண்டமை அல்லது சுயவிமர்சனத்திற்கு உள்ளானமை பற்றியும் நூலில் காணலாம். “எனக்கென்னவோ நாங்கள்

வலுமோசமான பாதையைத் தேர்ந்திட்டம் போலை இருக்கு", "நான் பிழையான ஆக்களைப் பேய்த்தனமா நம்பீட்டன். அரசியல் கற்கவேணும், அரசியல் கற்க வேணும் எண்டு சொன்னமே ஒழிய, மக்களைக் கற் கேல்லை. லெனினோ மாசேதுங்கோ மார்க்சிடமிருந்து அரசியலைக் கற்ற அதேநேரம் மக்களிடமிருந்தும் கற்றினம். அதாலை மண்ணுக்கு ஏத்த மாதிரி அவையள் அரசியல் செய்தினம். நாங்கள் என்ன செய்யிறம் பார். தேசிய சக்திகள் எதோடையாவது அரசியல் செய்யிறமா? வறிய கூலி விவசாயிகள் எண்டு நிக்கிறம். வரட்டுத்தனம் மிதமிஞ்சிப் போச்சு…" என்ற வாக்குமூலம் அந் நிலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இந்தப் போராட்டத்தில் இந்தியாவின் வகிபாகம் தொடர்பாகவும் இந்த நூல் உணர்த்திச் செல்கிறது. "இந்தியா வைப் பகைச்சுக்கொண்டு எங்கன்ரை அரசியலை கொஞ்சமும் நகர்த்த ஏலாது" என்ற கருத்து வலுவாக இருந்த அதேவேளையில், "இந்தியா எமது போராட்டத் தைத் தனது நலன்களிலிருந்தே நோக்குகிறது" என்ற தெளிவு அக்காலத்திலேயே சிலரிடமாவது இருந்தமை யையும் இந்நூல் பதிவு செய்துள்ளது. "எங்களுக்கு இந்தியாவாலை ஒரு நன்மையும் வராது. இந்திய அரசு தனது நலன்களிலை இருந்துதான் ஈழத் தமிழர்களின்ரை போராட்டத்தை அணுகும். நாங்கள் நம்பவேண்டியது இந்திய மக்களை. குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களை. அவர்கள்தான் எங்களுடைய பலம். நாங்கள் எங்களுடைய முதுகெலும்பை நேராக வைத்திருந்தால் போதும்" என்ற கருத்து அதனைத் தெளிவுபடுத்துகிறது. பின்னர் இக்கருத்தை முன் வைத்தவர் கடல் பயணத்தில் மர்மமாக மரணித்ததையும் இந்நூல் பதிவுசெய்துள்ளது. அவரின் மரணத்திற்கான காரணம் முதுகெலும்பை நேராக வைத்திருந்ததுதானோ என்னவோ?

போராடப் புறப்பட்ட அனைத்து அமைப்புகளும் ஒன்றாக ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்ற சிந்தனையும் அன்றைய நிலையிலேயே மேலெழுந் துள்ளது. "இது ஒரு தேசிய விடுதலைப் போராட்ட மெடா. அதைப் புரியவேணும் முதலிலை. ஒரு ஐக்கிய முன்னணிக் குள்ளை எல்லா அமைப்புகளும் வராமல் போராட்டம் வெற்றிபெற ஏலாது… இனி ஐக்கிய முன்னணிதான் முக்கியம். "போராட்டத்துக்காக ஐக்கியப்படுவோம்; ஐக்கியத்துக்காகப் போராடுவோம்". இதுதான் எங் களுடைய கோசம்" என்பது ஒற்றுமையான செயற் பாட்டுக்கான விருப்பை வெளிப்படுத்துகிறது. கடைசி வரை - ஆயுதங்கள் மௌனிக்கப் பட்டதன் பின்னருங் கூட, அது சாத்தியமாகமல் போனது எமது சாபக்கேடு தான்.


"தக்கன அதாவது வலிமையானவை பிழைக்கும். அல்லன மடியும் அல்லது நலியும்" என்ற இயற்கை நியதிப்படி போலும் (?), வலிமையான அமைப்பு ஏனையவற்றைத் தடை செய்தமையையும் அழித் தொழித்த அவலத்தையும் இந்நூல் தெளிவாகப் பதிவு செய்துள்ளது. அதற்கான காரணம், நியாயம் அவர்களிட மிருந்ததையும் நூல் மேலோட்டமாகப் பதிவு செய் திருக்கிறது. அந்த வலுவான அமைப்பு "போராட்டத்தை நாங்கள் கையிலெடுக்கிறோம். இனித் தமிழ்மக்களைக் காப்பது எம்பொறுப்பு" என அறிவித்தமையையும், "யாரையும் கொல்லாமல் இதனைச் சொல்லியிருக்க லாம். வன்முறையைப் பிரயோகியாது, எவரையும் உயிருடன் நெருப்பில் எறியாது சொல்லியிருக்கலாம். அப்படிச்சொல்ல அவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை. யாவற்றுக்கும் காற்றே சாட்சி. மக்களின் மௌனமும் கூட" என்ற அந்த அறிவிப்புத் தொடர்பான கதை சொல்லியின் வருத்தத்தையும் நூலில் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகிறது. அந்த வலுவான அமைப்பின் உறுப்பினனான, தன்னுடன் பழகிய ஒருவருடன் "நான் என்ன மச்சான் செய்யவேணும் … நான் இஞ்சை இருக்கலாமா? இருக்கிறது பயமில்லையா? அல்லது வெளியிலை ஓடட்டா? அல்லாட்டி உங்களிட்டை சரணடையட்டா? என்ன செய்யவேணும்? சொல்லு" எனக் கதைசொல்லி கேட்டுநின்ற அவலம்; போராட, இலக்கு நோக்கிச் சாதிக்கப் புறப்பட்ட ஒருவனின் கையறுநிலை உணர்வுகளைத் தொடுகின்றது.


நூலின் முடிவு கண்களைப் பனிக்கச்செய்கிறது. தேசத்துக்காக என்று போராடப் புறப்பட்ட ஒருவன்; இலட்சியங்கள், கனவுகள், நம்பிக்கைகளைச் சுமந்த ஒருவன், ஆரம்பத்தில் சாகசங்கள் புரிவதாக உணர்ந்த ஒருவன் தனது போராட்ட வாழ்வை சொந்த மக்களுக்கே மறைக்க விளையும் அவலத்தைக் காண்கிறோம். "கிளியக்கா உங்கன்ரை டேவிட் தம்பி எப்பவோ செத்துப் போனான். அவனை இனித் தேடாதையுங்கோ…" என அழுதுநிற்கும் அவனைத் தரிசிக்கையில் வாசகரையும் வெறுமை தொற்றிக்கொள்கிறது. இந்தப் பூமிப்பந்து சுழன்றுகொண்டிருப்பதுதானே. காலமும் அப்படித் தான். தாமதமாகவென்றாலும் சுழன்றுதான் இருக்கிறது என்பதை இன்று உணரமுடிகிறது.

***

தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் ஆரம்ப காலத்தில் செயற்பட முனைந்த ஒருவரின் அனுபவப் பகிர்வாக, சுய வரலாறாக அமைந்த "வீடு நெடும் தூரம்" அது ஒரு தனி மனிதனின் பார்வை சார்ந்து இருந்தாலும் - எமது வரலாற்றின் சான்றாக அமையக்கூடிய படைப் பாகிறது. அமைப்பு ஒன்றைச் சார்ந்து இயங்கிய ரவியின் கொள்கைகள், சிந்தனைகள், விருப்பு வெறுப்புகள் என்பனவும் அவரது அரசியல் சார்பும் இப்படைப்பில் விரவிக்கிடக்கலாம். அவரது தீர்மானங்கள் அழுத்தம் பெற்றிருக்கலாம். ஆனாலும் போராட்டம் முகிழ்க்கத் தொடங்கிய காலகட்டத்தின் செயற்பாட்டாளர் ஒருவரது வாக்குமூலம் என்றவகையில் இப்படைப்பு வரலாற்று முக்கியத்துவமுடையது என்பதனை மறுப்ப தற்கில்லை. ரவியின் படைப்பாளுமையும் மொழியாட்சி யும் "வீடு நெடும் தூரம்" என்ற படைப்பை இலக்கிய மாக்கித் தந்துள்ளன. வீடு (இலக்கு) அருகில்தான் என்ற நம்பிக்கையோடும் ஆவலோடும் புறப்பட்ட ஒரு வனுக்கு, அப்படியல்ல அது வெகு தூரத்தில்; சாத்திய மாகாத தூரத்தில் என்ற உண்மை உறைக்கின்றபோதான மனநிலையை இப்படைப்பில் தரிசிக்கமுடிகிறது.

"இந்த கதைகள் யாவற்றிலும் காலம் ஒரு பாத்திரமாக வாசகனுடன் ஊடாடுகிறது. ஆனால் எல்லா கதைகளிலும் காலம் ஒன்றாக இல்லை. அவரது கதைகளை ஓவியங்களாக கொண்டால் காலத்தின் வெவ்வேறு வர்ணங்களை இந்த கதைகளில் வாசகன் தரிசிக்கலாம்."



# அ.இரவியின் ஆயுத வரி

திருஞானசம்பந்தன் லலிதகோபன்

ஒரு காலமிருந்தது வேர் மண்ணை பற்றியிருப்பதற்கு காரண காரியங்கள் ஏதுமில்லை. அது இயல்பிலாலானது."பிழைத்திருத்தல்" என்ற அர்த்தத்தின் வழியே இது நடைபெறுகிறது. அப்போது வினவுதல்கள் என்பதுமில்லை. விடைகளும் எதிர்பார்க்கப்படுவதுமில்லை.ஆனால் பிற்காலத்தில் வேரினை அறுத்தல் (வன்) செயலாகிப்போனது. அதன் பின்பே பல்வேறு கேள்விகளும் விடைகளுமாக விவாதங்களின் களம் விரிந்தது. எந்த மண்ணில் எந்த வேர் என்பதுவும், வேருடன் நீடிப்பதற்கான காரண காரியங்களும் அதிகாரங்களின் வசப்பட்ட விடயங்களாகி போயின இந்த நாட்களில்.

பிறந்த மண்ணை தொலைத்து புலம்பெயர்தலும் அதன் நினைவுகளில் சுயத்தை தொலைப்பதுவும் நம் மண்ணின் இயல்புகளாகி போன காலத்தினை நான் வேர்களுடன் ஒப்பு நோக்குகிறேன்.சொந்த மண்ணில் வேரறுந்த போதிலும் இன்னோர் மண்ணில் "பிழைத்திருத்தல்" காலத்தின் தீர்ப்பாகிறது. வேரறுந்த கனவுகட்கும் பிழைத்திருக்கும் நனவுகட்குமான இடைவெளியில் நகர்கிறது அ. ரவி அவர்களின் "ஆயுத வரி".

இந்த கதைகள் யாவற்றிலும் காலம் ஒரு பாத்திரமாக வாசகனுடன் ஊடாடுகிறது. ஆனால் எல்லா கதைகளிலும் காலம் ஒன்றாக இல்லை. அவரது கதைகளை ஓவியங்களாக கொண்டால் காலத்தின் வெவ்வேறு வர்ணங்களை இந்த கதைகளில் வாசகன் தரிசிக்கலாம். உண்மையில் காலம் என்பது மனிதர்கள் மனதின் வழியே உணர்வதாக இருப்பது ஒரு விதமாயின், பூமியில் காலத்தின் நகர்வு (நேரம், திகதி, ஆண்டு ) வேறொரு விதம். புனைவுகளில் இந்த இருவிதமான ஊடாட்டங் களையும் காண முடியும். கதையின் களம் பூமியின் நகர்வுடன் ஒத்தியங்க , உலவும் பாத்திரங்கள் காலத்தை தங்கள் மனதின் வழியே அமைத்துக்கொள்கின்றன. உதாரணமாக மிகவும் மகிழ்ச்சியான நேரத்தில் காலத்தின் வேகத்தை வேகமாகவும், துயரார்ந்த வேளைகளில் காலத்தின் நகர்வை

மெதுவாகவும் உணரும் பாத்திரங்களை நாம் கதைகளில் காண்கிறோம். இது யதார்த்தத்தின் பிரதிபலிப்பு. ரவி அவர்களின் கதைகளிலும் காலத்தின் இரு போக்குகளை யும் அவர் கட்டமைக்கும் புனைவின் வழியே தரிசிக்க முடியும்.

இவற்றை நெடுங்கதைகள் என அறிமுகம் செய்கிறார் அவர். கதைகள் இன்று சிறுகதைகள், குறுங்கதைகள் மற்றும் நெடுங்கதைகள் என பல்வேறு பெயர்களில் எழுதப்படுகின்றன. இவற்றை வரைவிலக் கணங்கள் மற்றும் கோட்பாடுகளுடன் ஆராய்வதை தவிர்த்து அவை கதைகளாக இருக்கின்றனவா என நோக்குவதே எனது வாசகநிலை சார்ந்த பார்வையா கிறது. அந்த வகையில் ஐந்து கதைகளை கொண்ட இந்த தொகுதியினை ஒவ்வொரு கதைகளாக நோக்கலாம்.

**அ. ஆயுத வரி.**

இந்த பூமியில் உயிரின பல்வகைமையின் வரலாற்றினை ஆராய்கையில், சில உயிரினங்கள் நீரிலிருந்து நிலத்திற்கு வந்தன. சிலவைகள் நிலத்திலிருந்து நீருக்கு சென்றன. உயிரினத்தின் தொடர் இருப்புக்காக இவ்வாறான புலம்பெயர்தல்களை இயற்கையே அமைத்துக்கொடுத்தது. இயற்கையின் ஏற்பாட்டை ஏற்று முந்திய உயிரினங்கள் பிழைத்து கொண்டன் பிந்தியவைகள் அழிந்து போயின.

போர் என்பது மனிதர்களினால் ஏற்படுத்திக் கொள்ளபட்ட ஒன்றாயினும்,இனத்தின் இருப்புக்காக போரினை தேர்வு செய்தல் மனித குல வரலாற்றின் வழியாக கடத்தப்பட்டு வந்த ஒரு விடயமாகும். ரவி அவர்களின் “ஆயுத வரி” கதையானது இனத்தின் இருப்புக்காக தமிழ் இளையோர் போரினை தேர்வு செய்த காலத்தில் நிகழ்ந்த கதையொன்றாகும். விடுதலை அமைப்பு ஒன்றின் கருக்காலத்தில், அதனை அழிக்க முயலும் “தமிழின அடிவருடியை” முந்திக்கொண்டு அழித்தலே இந்த கதை.

விடுதலை அமைப்பொன்றை அழிக்க எதிரி கையாளும் ஆயுதங்கள் இருவகை. ஒன்று அமைப்புக்குள் உளவு வேலைகள் மூலமாக துரோகிகளை உருவாக்குதல். மற்றொன்று போராடும் இனத்தை சேர்ந்த மனிதர்களை தனது அதிகார அமைப்புக்குள் வைத்துக்கொண்டு விடுதலை அமைப்புக்குள் சீர்க்குலைவுகளை மேற் கொள்வது. இதுவே அடிவருடித்தனம். இவ்வகையாக பணி புரிவோர், தங்கள் ஊதியத்திற்காகவே சொந்த இனத்தின் மனிதர்களை துவம்சம் செய்கின்றனர். கூர்மை யாக அவதானிக்கையில் அடிவருடித்தனம் பிழைப்புக் கான ஒரு வழியாக, துரோகத்தினை விடவும் சற்றே விடம் குறைந்த ஒன்றுதான். ஆனால் இறுதியில் பாதிக்கப்படுவது இனம் மற்றும் இலட்சியம் என்றள வில், விடுதலை கோரி போராடும் அமைப்புக்களுக்கு இரண்டுமே “ஒரே குட்டையிலான மட்டைகளே”.

இந்த கதையின் பிரகாரம் விடுதலை அமைப்பின் உறுப்பினரான ஒருவரை, உளவாளி பின் தொடர்கிறார். உளவாளியை கைதுசெய்யும் விடுதலை போராளியும் அவனது நண்பரும் உளவாளியை கொல்வதற்கான காரணத்தை நியாயப்படுத்துவதே கதையாகிறது. கதை யில் பிரதான பாத்திரமாக வருகின்ற “அவன்” என்ற விடு தலை போராளிக்கு இதுவே முதலாவது “களையெடுப்பு” அனுபவமாக கூட இருந்திருக்கலாம். ஏனெனில் இந்த சம்பவத்திற்கு முன்பதான “அவனுக்கு”ஏற்படும் தடுமாற்றம் முதல் அனுபவத்தின் தடுமாற்றமே.

கதை நகர்வின் பிரகாரம், இது ஒரு தன்னிலை அனுபவமாக கதையின் இறுதியே ஆரம்பமாக கொண்டு எழுதபட்டிருக்கலாம்(வாசகன் அவ்விதமாக கூட வாசிக்க முடியும்). ஆனால் ஒரு செயலுக்கான காரணத்தை ஒழுங்கு முறையாக கூறுவது போல் இந்த கதையின் அமைப்பு தேர்வு செய்யப்பட்டிருப்பதும், வேறொரு நபரின் பார்வையினூடே கதையினை நகர்த்துவதும் கூட கதையின் இறுக்கத்தினை பேணும் ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் இந்த கதையில் “அவனின்” பிரத்தியேக வாழ்வு தொடர்பான இரு சம்பவங்கள் வருகின்றன. ஒன்று வள்ளி என்ற பெண் போராளியின் மீதான காதல் மற்றது தாயின் இழப்பு. தன்னிலையினூடு இந்த கதையினை நகர்த்தியி ருப்பின் வாசகனை இந்த சம்பவங்களின் கனதிக்குள் சற்றே ஆழமாக இழுக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் அவனுக்கு இப்போது காலம் தந்திருப்பது வேறொரு பணி. இதில் சொந்த வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகள், வெறும் சம்பவங்களாகவே சுருங்கி விடுகின்றன. இதனை வாசகனுக்கும் கடத்த வேண்டுமென்பதற்காகவே இவ்வாறான கதைக்கூறல் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கதையில் வரும் எல்லோருக்கும் பெயர் உள்ளது. ஆனால் “அவன்”, அவனாகவே கதையில் வருகின்றான். இதுவும் கதாசிரியரின் உத்திதான். ஏனெனில் இது போன்ற அனுபவங்கள் விடுதலை போரில் பொதுமை யானவை. இனத்தின் மீட்சிக்காக சொந்த வாழ்வினை ஆகுதியாக்கிய ஆயிரமாயிரம் அவன்களுக்கு இந்த அவன் ஒரு உதாரணம்.

இந்த கதையில் வரும் வெவ்வேறு சம்பவங்கள் வாசகனுக்கு வெவ்வேறு அனுபவங்களை தருவதுடன், இது எந்த வகையான கதை என்பதை தீர்க்கமாக கூறாது தவிர்ப்பதையும் காண முடிகிறது. நண்பன் பாலாவின் கதையும், அவனின் சொந்த வாழ்வியலும் சமூகத்தின் அங்கமாக அமைகின்றன. வள்ளியின் மீதான நேசம் காதலின் வாஞ்சையை தருகிறது. உளவாளியின் நடமாட்டமும் , அவனின் கைதும் ஒரு “திரில்லர்” கதை யொன்றை போல நகர்கிறது. இதில் பாராட்டப்பட வேண்டிய விடயம் யாதெனில் நான் சுட்டிய எல்லா விடயங் களும் “கறிக்கு உப்பு போல்” அளவாக இருப்பது தான்.

ஒரு ஆயுதப்போரில் ஈடுபடும் தனியன்கள், ஏன் இந்த பாதையினை தேர்வு செய்தனர்தொடர்கின்ற பயணத்தில் தங்களை நிலைப்படுத்திக்கொள்வதன் நியாயங்கள் இடர்களை களைந்து இலட்சியம் ஒன்றுக் காக அர்ப்பணிப்பு செய்தலின் அறம் என்பவற்றை காலத்தின் நகர்வினூடே பேசி செல்கின்ற கதையாகிறது “ஆயுத வரி”.

**ஆ. கானல் வரி.**

சில தலைப்புக்களை கண்டதுமே நமது மனம், பழக்கப்பட்ட ஒன்றுக்கு தாவி விடுவது வழமை. கானல் வரி என்ற தலைப்பும், அவ்விதமே நமக்கு சிலப்பதி காரத்தினை நினைவூட்டுவதனை தவிர்க்க முடியாது.

கானல் என்ற சொல்லின் பொருள் இயல்பிலும் வாசிப்பிலும் இருமை தரக்கூடிய ஒன்றுதான். கோடை காலத்தே ஒளியின் இயல்பினால் தூர தெரிகின்ற நீர் கானல் நீராக கொள்ளப்படுகிறது. அது தோற்ற மயக்கமாயினும் கூட, கண்கள் காணும் கணத்தே உளதான ஒன்றுதான். எனவே அதனை மாயம் என்று ஒதுக்கவும் முடிவதில்லை.கானலானது உளதாகவும் சம காலத்தே இலாததாயும் இருமையுடன் நீள்கிறது அதன் இருப்பு.

சிலப்பதிகாரத்தில் கானல் வரி எனப்படுவது கடற்கரை சோலையில் வசந்த நீராடல் நிறைவுற்றதும், கோவலனும் மாதவியும் பாடுவது. இதில் கோவலன் மாதவியை புகழ்ந்தே பாடுகிறான். ஆனால் அது, கோவலனுக்கு வேறு காதலிகள் இருப்பதாக மாதவி யினால் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த புரியாமையின் விளைவே கண்ணகியை கோவலனுடன் இணைப்பதுவும், மாதவிக்கு துன்பத்தை தருவதுமாக அமைகிறது. எனவே கானல் வரி என்பது ஒரே நேரத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் தரும் இருமையாக உள்ளது.

கானல் வரி என்கிற இந்த கதையும் விஜயன் மற்றும் ரதியிடையிலான காதலை கூறுகின்ற கதையா கவே இருக்கிறது.இந்த கதை நகரும் காலம் "நிறம் மாறாத பூக்கள்" எனும் திரைப்படம் வெளிவந்த காலப்பகுதி. அந்த திரைப்படத்தின் பின்னணியில், அதில் வருகின்ற கதாபாத்திரங்களின் பெயர்களுடன் கதையினை புனைந்திருப்பது சிறப்பு. அன்பின் அதீதத்தில் ரதியினை விஜயன் "மாம்பழம்" என்பதும் ரதி விஜயனை "துரை" என்பதும் இரசிக்க வைக்கிறது.

ரவி அவர்களின் இந்த தொகுதி முழுவதிலுமான கதைகளில் இருக்கும் சிறப்பு யாதெனில், கதையின் மைய கரு ஒன்றாக இருந்தாலும், கிளைக்கதைகளாக பல்வேறு கருப்பொருட்கள் கதை முழுவதுமாக நிரம்பியிருப்ப தாகும். தந்தையின் கண்டிப்பு, குடும்ப கட்டுப்பாடுகள், நட்பு, புலம்பெயர்ந்த மக்களின் துயரம் மற்றும் சமகால ஈழப் பிரச்சினையென நிறைய விடயங்கள் இந்த கதையில் இருக்கின்றன.

ரதியின் அம்மாவை காதலித்து கரம் பிடித்த அவளின் அப்பா, காதலித்து கரம் பற்றியதால் பெற்றோரின் ஆசீர்வாதத்தை இழந்தோம் என்ற குற்றவுணர்வுடன் வாழ்வதும், அவர் தனது பெண் பிள்ளைகட்கு ஒரு இறுக்கமான தந்தையாக இருப்பதுமே ரதியின் காதல் நிறைவேறாமல் போனதற்கான காரண மாகிறது. மறுபுறத்தே தனது மகனின் விருப்புக்காக குறுக்கு வழியிலேனும் (மாந்திரீகம் ) சென்று அதனை நிறைவேற்ற துடிக்கும் தந்தையாக விஜயனின் அப்பா.

இந்த கதை கானல் வரியென பெயரிட்டமைக்கு காரணமாக சிலப்பதிகாரம் கூறும் கானல் வரிகளை விடவும், கோடை காலத்து தூரத்து நீர் என்ற ஒளியின் தோற்றப்பாடே வெகு பொருத்தமாக வருகிறது. ஏனெனில் விஜயனோ அல்லது ரதியோ அடைய முடியாத நீராகி போனது,அவரவர் ஆசைகள். மறு புறத்தே இந்த கதையின் முடிவில் வாசகன் மனதில் மிஞ்சி நிற்கும் பாத்திரங்களாக இருப்போர், ரதியோ அல்லது விஜயனோ அன்றி, அவர்களின் தந்தையராகவே உள்ளனர்.

ஈழப்போரின் தாக்கம், போரில் நேரடியாக ஈடுபடாத ஒருவனின் வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதற்கு விஜயனின் பாத்திரம் சாட்சியமாக எஞ்சுகிறது. ஏனெனில் அவன் விரும்பிய வாழ்வு கிடைக்காமைக்கு காரணம், ஈழப்போரிலிருந்து தமது இளைய தலைமுறையினரை காக்க விரும்பும் பெற்றோரின் விருப்பு. அதே நேரம், பெற்றோரினால் பேசப்பட்ட திருமணம் நிறைவேறாமைக்கும் காரணம், ஈழப்போருக்கு ஆகுதியாக அவனின் தந்தையின் உயிர் பறிக்கப்பட்டமையே.

இந்த கதையினை கூறிச்செல்லும் கதைசொல்லி யினை, உபகதைகள் மூலமாக அறிமுகம் செய்கிறார் கதாசிரியர். கதை நகரும்போது ஒரு பாத்திரமாக கதை சொல்லியினை முன்மொழியாது, இடையில் புகுத்தி யமைக்கு காரணம் கதையின் பாதையில் தேவையற்ற இடையூறுகள் ஏற்படாமல் இருப்பதற்கே. இதுவும் ஒரு வகை உத்தியே.

இந்த கதைசொல்லியினை காலமாகவும் நாம் வாசிப்பு செய்யலாம். ஏனெனில் நான் முன்பே கூறியதன் பிரகாரமாக காலம் எல்லா கதைகளிலும் ஒரு பாத்திர மாக இருக்கிறது. எனவே காலத்தின் நனவோடையில் மிஞ்சி கிடக்கும் ஒரு காதல் கதையாக இதனை கூற முடியும்.

**இ. எழுந்த ஞாயிறு விழுந்ததன் பின்.**

ரவி அவர்களின் கதைகளிலேயே புலத்தினை தளமாக கொண்டு எழுதப்பட்ட கதை இதுவென கூறலாம். எல்லா விடுதலை போராட்டங்களின் போதும் எழுதப்பட்ட கவிதைகளிலும், ஒளி ஒரு படிமமாக இருப் பதை காணலாம்.இந்த ஒளியின் மூலமாக கருதப்படுவது சூரியன். என்னதான் சுதந்திரம் இரவில் பிறக்கின்ற குழந்தையாக இருந்தாலும், அந்த குழந்தை சிரிப்பதும் ஜொலிப்பதும் ஞாயிற்றின் ஒளியில்தான்.எனவே விடுதலையின் அடைவினை ஞாயிற்றின் உதித்தலுடன் ஒப்பி டுதலில் தவறுகள் இல்லையென கூற முடியும்.

இந்த கதையில் இரு முனைகளை திறந்து விடு கிறார் கதாசிரியர். ஒரு முனை ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் ஈழ தமிழராகிய கதைச்சொல்லி யினுடையது. மற்றைய முனை பங்களாதேஷ் விடுதலைக் காக போராடிய முக்திபாகினி இயக்கத்தின் முன்னாள் போராளியாகிய அன்சாரியினுடையது. ஈழத்திற்கும் பங்காளாதேஷ் நாட்டுக்குமான ஒற்றுமை யாதெனில், இந்த இரண்டு தேசத்தின் விடுதலை போராட்டங்களும்,


இந்திய தேசத்தின் செல்வாக்கினுள் அகப்பட்டிருந் தமையே. ஒரு வகையில், எழுபதுகளில் இந்திய தேசத்தின் தலையீட்டின் காரணமாக பங்களாதேஷ் நாட்டின் விடுதலை பெற்றமையே,எண்பதுகளில் ஈழ மக்களும் விடுதலை இயக்கங்களும் இந்தியாவின் மீது அதீத நம்பிக்கை வைக்க காரணமாக அமைந்தது. ஆனாலும் புதிய ஒழுங்குகளுக்குள் உலகம் நுழைந்தமை யின் நிமித்தமாக, இந்திய தேசத்தின் மீதான நம்பிக்கை வெற்று நம்பிக்கையாகவே போயிற்று.இதில் குறிப்பிடத் தக்க விடயம் யாதெனில், இவ்வாறான நம்பிக்கையின் செல்லுபடியற்ற தன்மை குறித்து, ஈழ விடுதலை இயக்கங்களில் ஒன்றாகிய உமாமகேஷ்வரன் தலைமையி லான "புளட்" அமைப்பானது, "வங்கம் தந்த பாடம்" என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டமையே.

அன்சாரியின் உணவகத்தில் பகுதி நேர பணி புரியும் கதைச்சொல்லிக்கு, சொல்ல முடியாத அளவுக்கு பொருளாதார பிரச்சினை. மனைவியின் நோய் நிலையும், அவளின் பணிக்கு செல்ல முடியாத நிலையும் வீட்டில் பிள்ளை களுக்கு கூட சரியான உணவு அளிக்க முடியாத நிலைக்கு கதை சொல்லி யினை தள்ளி விடுகிறது. சம காலத்தே மனைவியை இழந்து, மகனாலும் ஒதுக்கப் பட்ட அன்சாரி, தனது உணவகத்தை கதைச்சொல்லி யிடம் விலை பேசுகிறார். கதைசொல்லி தனது இயலாமையினை கூறி இரந்து கேட்கும் நிலையிலும் இல்லை. கதா சிரியருக்கு அவ்வாறான அனுதாபங் கள் மற்றும் இரங்குதலை வாசகனி டம் யாசிக்கும் தேவையிருப்பதாக தெரியவில்லை.

கதையின் நகர்வினை பொறுத்து, கதாசிரியர் திறந்து விட்ட இருமுனைகளுமே உரையாடல் ஒன்றின் மூலமாக தங்களை வாசகனுடன் இணைகின்றன. ஆனால் கதையின் முடிவிலும் கூட, அந்த முனைகள் அவ்விதமே உள்ளன. ரவி அவர்களின் முன்னைய கதைகள் போல இதற்கும் முடிவுகள் எதுவும் இல்லை. அதாவது திறந்து கிடக்கும் குழாயின் அமைப்பினை ஒத்த கதை. வாசகன் குழாயின் முனைகளினூடே உடபுகுந்து வெளியேறி செல்லலாம்.இதில் காலம் தற்கணமாக உள்ளது. இந்த கதை முன்வைக்கும் உரையாடல் சற்றைக்கு முன் நகர்ந்து சென்ற காலத்துக்குரிய தெனலாம்.

அன்சாரி ஒரு முன்னாள் போராளியாக, அவரின் உரையாடலை முன்வைக்கிறார். ஒரு விடுதலை போராளி யாக அவர் ஆயுதங்களை "ஆட்டுக்குட்டிகளின் சுதந்திரத் துக்காக ஓநாய்களின் காதுகளுக்குள் குண்டுகளை வைப்பதற்காக" ஆயுதங்களை நேசித்தார். எனினும் சுதந்திரம் பெற்றவுடன் முன்னாள் போராளிகள் குறித்த தெளிவுகள் எதுவும் அரசுக்கு இல்லாததான் காரணமாக அவர் வங்கத்தை விட்டு வெளியேறுகிறார். அவரின் வெளியேற்றத்தின் பின்னணி குறித்து, இந்த கதையில் தெளிவான தகவல்கள் இல்லாதபோதும்,அவர் மீண்டும் நாட்டுக்கு செல்ல முடியாதவாறு சில தடைகள் உள்ளன. இருந்தும் அதிகாரத்தின் மறதி என்ற காரணியை முன் வைத்து தனது எஞ்சிய வாழ்நாட்களை தாய் மண்ணில் கழிக்க விரும்பும் ஒருவராக அன்சாரி எஞ்சுகிறார்.

விடுதலை வேண்டி போரிட்ட தேசத்தின் மாந்தர்களை பின்னப்பட்ட கதை. வழமையான நமது கதைகளில் வருவதற்கு மாறாக, இன்னோர் நிலத்தினை சேர்ந்த ஒருத்தருக்கு தாயக நினைவுகளும், போராட்ட பாதையின் மலரும் எண்ணங்களுமாக இந்த கதை பின்னப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் வரும் ஈழத்தவன் முற்றிலும் பொருளாதாரப்பிரச்சினையை எதிர்கொள்ளும் ஒருவனாகவே சித்திரிக்கப்படுகிறான். இது ஒரு வகையான யதார்த்தமும் கூட. ஆனால் குறித்த




இரு தேசங்களும், இப்போது எதிர்கொள்ளும் பொருளா தார பிரச்சினை கூட ஒரு வகையில் இரு தேசங்களுக்கும் உறவுப்பாலம் ஒன்றினை அமைத்து விடுகிறது.

**ஈ. அதிகாரி**

"என்ன நடந்தது?" என்று கேட்கிறேன். "என்னத்தை தம்பி சொல்ல? " என்றா. வாழ்வு தின்ற மனிதர்கள் யாவரும் "என்னத்தை சொல்ல? " என்ற கேள்வியுடன் தான் தங்கள் துக்கத்தை சொல்ல தொடங்குகிறார்கள். (பக்.119)

இந்த கதையில் ரவி அவர்கள் தெரிவு செய்திருக்கும் களம் முற்றிலும் புதுமையானது. அநேகமான, ஈழ நிலம் சார்ந்த கதைகளில் எழுதப்படாத ஒரு விடயத்தை கையில் எடுத்திருக்கிறார் கதாசிரியர். இந்த கதை நகரும் காலம் இந்திய இராணுவ காலத்துக்குரியது. வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்யும் அரச சார்பற்ற ஊழியன்

ஒருத்தனின் அனுபவமாக கதை விரிகின்றது.

பொதுவாக, இந்த பணி செய்யும் ஊழியர்கள் களத்தில் நின்று மக்களின் துயரங்களை கதைகளாக அறிபவர்கள். உண்மையில் இவர்கள் அதிகாரிகளா கவோ அல்லது ஊழியர்களாகவோ இருப்பதற்கு பதிலாக, சக மனிதர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களும் கூட, பாதிக்கப்பட்ட சமூகத்தின் உறுப்பினர் களே. ஆனால் எல்லா பணியாளர்களும் அப்படியில்லை என்பது முருகய்யாண்ணன் என்ற பாத்திரம் மூலமாக கூறப்படுகிறது.

தன்னிலையாக கதை சொல்லி செல்லும் இந்த கதையின் நாயகன் தனது பணியை திறம்பட செய்யும் ஒருவனும்,மக்களின் கதைகளை காது கொடுத்து கேட்கும் ஒருத்தனும்தான். ஆனால் அவனின் பிரச்சினை என்பது வேறு. களத்தில் பணி செய்கையில் பயனாளர் களை தேர்வு செய்கையில் அவனின் தனிப்பட்ட உணர்வுகள் எவ்விதமாக செல்வாக்கு செலுத்துகின்றன என்பதே கதை. தான் செய்வது சரியா என மனதுள் புழுங்கும் ஒருவனாகவே கதைசொல்லியாகிய “நான்” இருக்கின்றான்.

இந்திய இராணுவத்தின் கொடுமைகளும், அவர்களின் காலத்தில் யாழ். குடாநாட்டின் வாழ்விய லும் கதையூடே கூறப்படுகிறது. இந்திய இராணுவம் மனிதர்களை வேட்டையாடிய கதைகள் பாத்திரங் களினூடே கூறப்படுகையில் வாசகனும் கூட அதற்குள் இழுத்து செல்லப்படுகிறான். முன்னால் கூறப்பட்ட கதைகளை மூன்றாம் நபராக படித்ததை போலன்றி, இந்த கதையினை வாசகன் கதையினுள் நுழைந்து பாத்திரங் களுடன் ஒன்றித்து பயணிக்கும் விதமாக கதையின் ஓட்டம் இருக்கிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் கள பணி செய்வதற்கு உதவியாளர்களும்இருக்கின்றனர். அவர்களின் மூல மாகவே பயனாளர்களை அணுகுவதும் நடைபெறு கிறது. இது களப்பணி செய்வோருக்கு அவசியமானதும் கூட. ஆனால் பிரச்சினை என்னவெனில் இவ்வகை உதவியாளர்களிடம் இருந்து சாப்பாடு, கள்ளு போன்ற உபசாரங்களையும் ஏற்றுக்கொள்வதுதான். சக மனிதர்கள் என்ற வகையில் அது பிரச்சினைக்குரிய ஒன்றல்ல. எனினும் குறித்த உதவியாளர்கள் தங்களுக்கு வேண்டிய நபர்களுக்கு உதவியினை பெறுவதற்கு, இந்த உபசாரங்களை பாவிப்பதுதான். இந்த நிலை மங்களேஸ் அண்ணா என்ற பாத்திரம் மூலமாக காட்டப்படுகிறது.

கதையின் நாயகனாகிய “நான்” திருமண வயதிலிருக்கும் ஒரு வாலிபன். அவனுக்கான பிரச்சினை இரு பெண்களினால் வருகிறது. இந்த பெண்கள் குறித்த குழப்பமே கதைச்சொல்லியின் மனமாகி கதை முழுவ தும் பயணிக்கிறது. முதலாவது பெண், தனமக்கா என்கிற பாலியல் தொழிலாளி. குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக இந்த தொழிலை தேர்வு செய்யும் தனமக்கா, இந்திய இராணுவம் மற்றும் அதனோடி ணைந்த குழுக்கள் காரணமாக தனது தொழிலை கைவிட்டு கிராம வாழ்வுக்கு திரும்பி, இராணுவ வன்முறைக்கு தாயையும் பறிகொடுத்து வாழும் ஒருத்தி. விடலை பருவத்தில் தனமக் காவின் பின்னால் அலைந்த கதைச்சொல்லிக்கு, உபகாரம் ஒன்றினை செய்வதன் மூலமாக தனம் நெருக்கமாகி தன்னையே தர துணி கிறாள். இதனை ஏற்பது பொதுவான பார்வையில் பாலியல் இலஞ்சமாக கொள்ள முடியும். ஆனால் அதனை தனம் அளிக்கும் விதமும், கதைச்சொல்லி அதனை முழுவதும் ஏற்றுக்கொள்ளது இருப்பதுவும் அந்த கணத்தின் அவரவர் மனநிலை.

மற்றைய பெண் மல்லிகா. இருபத்தொரு வயதில் விதவையாகிய அவளுக்கு கதை சொல்லியின் அறிமுகமும், அவன் மூலமாக கிடைக்கும் சிறிய பணியும் வாழ்வில் பற்றுதலை தருகிறது. மனதில் பட்டதை வெளிப்படையாக கூறும் வெகுளி பெண்ணாக வரும் மல்லிகா, கதைசொல்லியின் மனதில் சலனத்தை விதைக் கிறாள். இந்த சலனத்தை காதலாக உணரும் கதை சொல்லி தனது காதலை வெளிப்படுத்துவதற்காக தருணத்தை எதிர்பார்த்திருக்கையில் மல்லிகா முந்தி விடுகிறாள். அவளுக்கும் உறவுக்கார பையனுக்குமான திருமணம் குறித்த செய்தி, கதைச்சொல்லிக்கு ஏமாற் றத்தை தருகிறது. மல்லிகாவுக்கும் கதைசொல்லிக்கு மான வேலியாக யாழ். சமூகத்தில் காணப்படும் சாதிய ரீதியான பிரிப்பு உள்ளது. இதனையே மல்லிகா “எங்கள் வீட்டில் நீங்கள் கோப்பையில் சாப்பிடுவீர்களா?” என வினவுகிறாள். மல்லிகா என்ற பாத்திரம் யதார்த்தம் தெரிந்த ஒரு பெண்ணாக படைக்கப்பட்டிருப்பது சிறப்பு.

மல்லிகாவினால் ஏற்பட்ட ஏமாற்றத்தினை, ஆற்றுப்படுத்தும் மருந்தாக தனமக்கா அமைகிறாள். இந்த கதை முழுவதுமே கதைசொல்லி தனது செயல்கள் சரியானதா என அலையும் ஒருத்தனாகவே சித்தரிக்கப் படுகின்றான். அவனது மன குழப்பத்திற்கு சிறந்த உதாரணம் மல்லிகாவின் திருமண செய்தி கிடைத்த பின் பும் கூட அவளுக்கு உதவி செய்வதற்காக கோழிக்குஞ்சு களை வாங்கும் அவன், பின்னர் மேலதிகாரிக்கு மல்லிகாவின் திருமணத்தை காரணம் காட்டி இந்த உதவி விண்ணப்பத்தினை நிராகரிக் குமாறு கோருகிறான். அவனின் பணி ரீதியில் இது சரியானதாக இருந்த போதிலும், தனமாக்கா விடயத்தில் அவனின் “சரிக் கட்டுதல்கள்” இருந்தன என்ற வகையில் கதைச்சொல்லி யிடம் நூறு வீத நியாயம் இருந்ததாக கொள்ள முடியாது. எனவே கதைச்சொல்லிக்குள் இருந்த வன்மமே மல்லிகா விடயத்தில் மேலெழுவதாக கூற முடியும்.

இந்த கதையில் வெறுமனே வாசகன் என்ப தற்கும் மேலதிகமாக, கதைசொல்லியாகிய “அவனின்” மனதை “உளப்பகுப்பாய்வு” செய்யும் பணியும் வாசகனுக்கு தரப்படுகிறது. அவன் நியாயவானா என்பதை வாசகன் முடிவு செய்யும் வகையில் கதையின் முடிவு அமைகிறது.

ஒவ்வொரு கதையினையும் வெவ்வேறு விதமாக எழுதி செல்லும் ரவியின் திறன் இந்த கதையில் உச்சமாக வெளிப்படுகிறது.

உ. சக பயணி.

ஈழ விடுதலை போரின் ஆரம்ப கட்டத்தில் ஆயிரக்கணக்கான இளையோர் தங்கள் சுகங்களையும் நலன்களையும் துறந்து போராட்டத்தில் இணைந்தனர். கண்ணீரும் செங்குருதியுமாய் வளர்த்த மரமே விடுதலை மரம். இந்த மரத்தின் துயரம் யாதெனில் வேர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு பிரிந்து சென்றமையே. ஈழ மக்களின் விடுதலை பயணம் தனது இலக்கினை அடையாமல் போனமைக்கு, இயக்கங்களின் பிளவுகள் பிரதான காரணமாகியது. "துரோகி" என்ற பதம் அதிக மாக பாவிக்கப்பட்டதும் ஈழ விடுதலை போரில்தான் என்பதும் குறிப்பிடத்தகுந்த விடயம். அவ்வாறான துரோகியை அடையாளம் காண்பதற்கான ஒரு பாதையும் பயணமுமே இந்த கதையாக விரிகிறது. ரவி அவர்களின் "ஆயுத வரி" கதையிலோ அல்லது பின்வந்த கதைகளிலோ வருகின்ற, விடுதலை அமைப்புக்கள் சார்ந்த பாத்திரங்கள் எந்த அமைப்பு சார்ந்தது என்ற தகவல்கள் கதையில் வரவில்லை அல்லது பொதுவாக போராளிகள் என்ற நிலையிலேயே அந்த பாத்திரங்களின் விபரிப்புக்கள் அமைந்திருந்தன. ஆனால் இந்த கதையில் குறித்த பாத்திரங்கள் எந்த இயக்கங்கள் என அடையாளம் காணக்கூடிய வகையில் பாத்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பொதுவாக விடுதலை அமைப்புக்கள் மக்களுக்கான விடுதலையினை இலக்காக கொண்டவையாக கட்டமைக்கப்பட்டிருந்தாலும், அமைப்புக்குள் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து தீர்மானம் எடுக்க கூடிய வகையில் சனநாயக வெளி இருந்ததா என்பது கேள்விக் குறியே. ஏனெனில் இந்த விடுதலை அமைப்புகள் பெரும் பாலும் இராணுவ அமைப்பையே கொண்டிருந்தன. அரசியல் அமைப்புக்கள் பெயரளவிலேயே செயற் பட்டன.

சில அமைப்புக்களில் அரசியல் உறுப்பினர் களை, இராணுவம் சார்ந்தோர் கணக்கெடுக்காத நிலையும் இருந்தது. இராணுவம் என்ற ரீதியில் அங்கே கொடுக்கப்படும் கட்டளையினை நிறைவேற்றுவதே பிரதானமானது. ஏன் என்ற கேள்விக்கு அங்கு இடமிருப்ப தில்லை.

- ஆர் என்ன சொன்னாலும் அதை மனசுக்குள்ளே விசாரிச்சு பாருங்கோ. விசாரணையில் இருந்து தொடங்குங்கோ. முடிவு எடுங்கோ. நம்பிக்கையில இருந்து தொடங்கி முடிவு எடுக்காதையுங்கோ"(அருணன் சேர் பக்.143)

- நம்பிக்கையில் இருந்தல்ல விசாரணையில் இருந்துதான் தொடங்க வேண்டும். அருணன் சேரின் மீதான விசாரணையிலிருந்து"(யசோ என்ற உளவுப்போராளி பக்.143)

இந்த கதையானது மேலே குறித்த இரண்டு பாத்திரங்களை பிரதானமாக கொண்டே பின்னப் பட்டுள்ளது. இந்த இரண்டு பாத்திரங்களுக்குரிய முரண்பாடுகளும் இவ்விதமே கட்டியெழுப்படுகிறது. இந்த முரணின் அடிப்படையிலேயே இந்த கதையின் மையம் நகர்கிறது.

யசோ என்ற பாத்திரத்தின் கனதியானது, அவள் போராட்டப் பாதையினை தேர்ந்தெடுத்துக் கொண்ட தன் நியாயங்கள் மற்றும் போராட்டத்தின் மீதான அவளின் பற்றுதியின் மூலமாக கட்டமைக்கப்படுகிறது. அருணன் சேர் அவர்களின் பாத்திரமானது, முன்னாள் போராளி என்ற நிலையிலிருந்து, மாணவர்களுக்கான கற்பித்தலை சரியாக செய்வதனூடே சமூக போராளியாக, அவரின் நடைமுறை அரசியல் நகர்வதாக காட்டப் படுகிறது. எனினும் மக்களுக்காக புறப்பட்ட தனது பணி முற்றாக முடிவடையவில்லை என்ற புழுக்கமும் அவருள் இருக்கிறது. இதுவே அவர் சரோ அக்கா பாத்திரத்தினை சந்தித்ததன் பின்பாக வெளிப்படுகிறது.

இந்த கதையில் அருணன் சேர் அவர்கள் "களையெடுக்கப்பட வேண்டிய" ஒருவராக கருதப்பட்டு, மிகவும் நிதானமான முறையிலேயே அவரின் மீதான நடவடிக்கை திட்டமிடப்படுவதாக காட்டப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இவ்வாறு நிதானமான ஆய்வுகள் இருந்ததா என்பது கேள்விக்குறியே. அவ்வாறு இருந்திருப்பின் அநியாய உயிரிழப்புக்கள் சிறிதளவிலேனும் குறைகப்பட்டிருக்கலாம் என்பது நிதர்சனம்.

கதையின் முடிவில் அருணன் சேர் தனது கொள்கையில் இயங்குவதை தவிர்த்து, இனம் அல்லது போராட்டத்துக்கு முரணாக இயங்கவில்லை என்பதை கண்டறியும் யசோ, அவரை விடுதலை பாதையில் ஒரு சக பயணியாக ஏற்றுக்கொண்டு தனக்கு ஒப்படைக்கப் பட்ட பணியில் இருந்து விலகிக் கொள்கிறாள். இது நல்லதொரு முடிவாக அமைகிறது. இந்த கதையில் அருணன் சேரின் இயல்புகளிலேயே வாசகனின் மனது, பெருமளவில் கவனத்தை ஈர்த்தாலும், அருணன் சேர் அவர்களின் உயிர் பறிக்கப்படாமைக்கு பிரதான காரணமாக அமைவது யசோவின் திறன் மிகுந்த புலனாய்வே. இந்த தொகுதியின் ஏனைய கதைகள் ஆண் பாத்திரங்களின் பார்வையில் நகர்ந்தாலும், இந்த கதையானது பெண்ணின் தன்னிலையான கதை கூறலாக இடம்பெறுவதும், கதையின் மைய பாத்திரமாக யசோ என்ற பெண்ணே மிஞ்சி நிற்பதுவும் குறிப்பிடத்தக்கது.

முடிவாக....

ஈழப்போரில் பேசப்படாத கதைகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த கதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து கதைகளை அ. ரவி அவர்கள் தேர்வு செய்து இந்த நூலை எழுதியிருக்கிறார்.

வெவ்வேறு காலங்களில் நடைபெற்ற கதைகளாக இவைகள் அமைகின்றன.

புதிய களங்களும் அறியப்பட வேண்டிய சம்பவங்களுமாக இந்த சிறுகதை தொகுப்பு வாசகனுக்கு சிறந்த வாசிப்பு அனுபவத்தை தருகின்றன என்றால் அது மிகையல்ல.

# ஒரு அனுபவத் திரட்டாய் மனதில் உறையும் அ.இரவியின் "பாலைகள் நூறு"





கந்தர்மடம் அ.அஜந்தன்

எழுத்தாளர் அ.இரவி அவர்கள் எழுதிய "பாலைகள் நூறு" என்ற சிறுகதைத் தொகுதி மார்கழி 2011இல் வெளியிடப்பட்டது. 1981இல் இருந்து 2003வரையில் எழுதப்பட்ட 18 கதைகளை உள்ளடக்கிய கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. "இரவியின் சுவடுகள் மென்மையானவை வாழ்வின் ரம்மியங்களைத் துய்ப்பதற்கான வேட்கையில் இருந்து எழுபவைதான் அவரது கதைகள்" என்று பதிப்புரையில் எஸ்.ரஞ்சகுமாரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.முத்துலிங்கத்தின் "அக்கா" சிறுகதைத் தொகுப்பு, கே.டானியலின் "பஞ்சமர்" நாவல், கே.வி.நடராசனின் "யாழ்ப்பாணக் கதைகள்" சிறுகதைத் தொகுப்பு போன்ற நூல்களின் வாசிப்பு அனுபவமே அவரது படைப்பிலக்கிய வெளிக்கான விதையைத் தூவியிருப்பதாகவும், பல சிறந்த படைப்பாளர்களின் நட்பும் அவர்களின் ஆதரவும் தன்னைத் தொடர்ந்து படைப்புக்களை உருவாக்க உந்துசக்தியாக இருந்ததாகவும் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1980 காலப்பகுதியில் எழுதப்பட்ட "தூண் மறைக்கும் துயரம் பெரிது", "புழுதி", "ஒரு மழை நேரத்துச் சோகம்போல" போன்ற கதைகள் போர் வாடையின்றி கிராமிய வாசனை வீசுவனவாகவும், இயற்கைபற்றிய வர்ணனைகளாகவும், இளமையின் வனப்பையும் காதல் துடிப்பையும் அவை பேசிச்



இக் கதைகளில் பெரும்பாலான கதைகளும் உண்மைச் சம்பவங்களும் உண்மையில் நடமாடிய பாத்திரங்களாகவுமே இருக்கமுடியும். பல இடங்களில் மிகவும் ரசனைக்குரியதாகவும், ஆழமானதாகவும், அழுத்தமானதாகவும் அமைந்த வரிகளின் கோர்வை கதைகளின் புரிதலை உணர்த்தி நிற்கின்றன. ஒரு படைப்பாளியின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் இவ்வாறான இடங்கள் வாசகரின் ஆழ்மனதில் குடிகொண்டு விடுகின்றன.

செல்கின்றன. மின்விளக்கற்ற ஒரு காலகட்டத்தில் பெற்ரோமாக்ஸ் ஒளியில் உறவுகளைத் தரிசித்த அனுபவங்களும், அன்று பாவனையில் இருந்த பல பொருட்களின் பெயர்களும் அன்றைய வாழ்வின் வளம்மிக்க தமிழ்ப் பாரம்பரிய வாழ்க்கைமுறைக்கு எம்மை அழைத்துச் செல்கின்றது.

"தூண் மறைக்கும் துயரம் பெரிது" என்ற இந்த நூலின் முதற்கதையில் தன் வயதையொத்த பெண்ணின் கணவனின் இழப்புத்துயரை அவளின் திருமணதினத்தின் நினைவுகளோடு ஒப்பிட்டு வர்ணிக்கும் பாங்கு ஒரு விதவைக் கோலத்தின் மனத் தோற்றத்தையும் நடத்தைக் கோலத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. தந்தையின் பாசத்தை இழக்க மறுக்கும் குழந்தையின் தவிப்பு அந்தக் கதையின் இதயத்துடிப்பு. உறவுகளின் தேடல்களும் ஒத்திசைந்த வாழ்வும் தன்னிறைவான பொருளாதார முன்னெடுப்பு களும் உழைப்பும் கடந்த கால வாழ்வியலை அசைபோட வைக்கின்றன. ஒட்டுறவோடு வாழ்ந்த சமூகக் கட்டமைப்பினூடாக யதார்த்த வாழ்வியலை விளக்கும் எளிமையான வசன அமைப்புக்கள் அ.இரவியின் சமூக அவதானிப்பின் சான்று.

இக் கதைகளில் பெரும்பாலான கதைகளும் உண்மைச் சம்பவங்களும் உண்மையில் நடமாடிய பாத்திரங்களாகவுமே இருக்கமுடியும். பல இடங்களில் மிகவும் ரசனைக்குரியதாகவும், ஆழமானதாகவும், அழுத்தமானதாகவும் அமைந்த வரிகளின் கோர்வை கதைகளின் புரிதலை உணர்த்தி நிற்கின்றன. ஒரு படைப்பாளியின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் இவ்வாறான இடங்கள் வாசகரின் ஆழ்மனதில் குடிகொண்டு விடுகின்றன.

"இலாம்பிலிருந்து மஞ்சள் வெளிச்சம் உமிழ்வது போல துயர் உமிழ்ந்து கொண்டிருந்தது. கல்லெறி பட்ட நாயின் அனுங்கலைப்போலத் துயர் அனுங்கிற்று. பெருமழையின் பின் மண்தரை ஈரக்கசிவுபோலத் துயர் கசிந்தது. ஓட்டைக் கூரைவழி மழைநீர் ஒழுகுவது போலத் துயர் ஒழுகிற்று". இந்த வரிகளோடு ஆரம்பிக்கும் 1985இல் எழுதப்பட்ட "பாலைநிலம்" என்ற கதை அதே வரிகளோடு முடிவுற்றிருப்பது சிறுகதைக்கு ஒரு புதுவடிவத்தைக் கொடுத்ததுபோல் இருந்தது. 2003இல் எழுதப்பட்ட "யாவும் கற்பனை" என்ற கதையும் அவ்வாறான ஒரு கட்டமைப்பிலே உள்ளது. பொது வெளியுரையில் ஒரு விடயத்தையோ அல்லது பொருளையோ வைத்து ஆரம்பித்து பின்பு உரையின் முடிவிலும் அதே விடயத்தையோ அல்லது பொருளையோ வைத்து நிறைவு செய்வது சிறந்த வழி என்று பிரபல பேச்சாளர்கள் குறிப்பிடுவர். அந்த உத்தியை இந்தக் கதைகளில் காணமுடிந்தது.

1985 இற்கு பின் எழுதப்பட்ட கதைகளில் போரின் நெடி தொற்றிக்கொள்கின்றது. அது எழுத்தாளனின் தவறல்ல அந்தக் காலகட்டத்தின் படிமமாகவே அவை தோற்றம் பெற்றிருந்தன. "இப்படியும் ஒரு காலம்" என்ற கதையோடு அந்தக் கதைகள் ஆரம்பிக்கின்றன. அந்நியத்தின் துரத்தல் களும் தப்பியோடுவதுமான போர் ஆரம்பித்த அச்சம் படர்ந்த காலப்பகுதியை மனபாரத்தோடு பதிவிடும் கதைகள். அவை உண்மையான அனுபவங்களின் வெளிப்பாடு என்பதை உள்மனம் உணரும்வகையில் அமைந்துள்ளன.

"செத்துப்போனான் என்பதும் வெறும் வார்த்தை. இது சும்மா ஒரு சொல்லில் சொல்லிவிட்டுப் போகமுடியாது. பேய்களுடன் நடனமாடியவன், பேய் களைக் கண்டு அஞ்சாது நின்றவன். அவன் கணுக் காலில் சூடுபட்டு காதினுள்ளும் ஒரு குண்டு பாய்ந்து இது வரைகாலமான பட்டிமேய்த்தலில் களைத்துப் போனவனாக இறந்து வீழ்ந்தான். அவனுக்கு ஏணை கட்டி தாலாட்டுப் பாடித்தான் தாய் தூங்க வைத் திருப்பாள். மெத்தென்ற தன் நெஞ்சில் பால் சுரக்க வைத்திருப்பாள்".

மரணம் பற்றிய வலியை வரிகளுக்குள் வரிந்துக் கட்டி ஒவ்வொரு வாசகனும் அந்த வலியை உணரும் வகையில் அந்த மரணத்தையும் தாயின் பரிதவிப்பையும் உணர்வூட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறான படைப்பாற்றல்மிக்க வெளிப்பாடுகளை பல கதை களிலும் காணமுடிகின்றது. இயற்கையின் வனப்பும், உன்னத உறவுகளின் அணிவகுப்புமான கதைகளைக் கடந்து அச்ச இழையோடும் சூழலாக மாற்றம்காண்பது நம் இனத்தின் ஆரம்ப அவலங்களின் அடையாளங்கள் ஆகின்றன.

காதலுக்கும் அரசியலுக்கும் இடையில் ஊசலாடும் இளமைவாழ்வின் விம்பங்களாய் "ஒரு சிட்டுக்குருவி அல்லது அணில்குஞ்சு" என்ற கதை அமைந்துள்ளது. காதல், மரணம், இளமை, வயலும் வரப்பும், உணர்வுருகும் உறவினர்கள் பெரும்பாலான கதைகளில் வரும் பொது அம்சங்களாக அமைந் துள்ளன. புத்தன் சொன்னதுபோல் மரணம் நிகழாத வீட்டில் கடுகெடுப்பது போல அ.இரவியின் கதையில் மரணமில்லாத கதையெடுப்பதும் கடினமானதாகவே உள்ளது. ஐயாவின் மரணத்தை அடிக்கடி நினைவூட்டம் அத்தர் மணமும் சந்தணக்குச்சி மணமும் பாலனின் மனதில் விதைக்கும் சோகத்தையும் ஐயா பற்றிய நினைவுகளையும் சுமந்து இழப்பினுள்ளும் அவரின் இருப்பைத்தேடும் ஒரு உளவியல் பார்வையாக "கரிகொள் இருள்" அமைந்துள்ளது. இதிலுள்ள யதார்த்தமானதும் மிக நுணுக்கமானதுமான அத்தர் மணத்திற்கும் இழவிரக்கமுள்ள மனத்துக்குமான ஒரு போராட்டத்தைக் காண்பித்திருப்பது அ.இரவியின் வாழ்வியல் மீதான கூர்ந்த அவதானிப்பை எடுத்துக் காட்டியுள்ளது.

ஒரு விதவையின் மனச்சஞ்சலமும் வறுமையும் போட்டியிட அதனைப் பயன்படுத்தும் இளைஞன் மீதான விருப்பும் வெறுப்பும் மறுமுனையில் போட்டியிட தன் மகன்மீதான தாய்ப் பாசத்தால் தன்னை பாவத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் சமகாலச் சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய கதையாக "அந்த அணிலின் கடைசிக்



கணத்துக் கவிதை” என்ற கதை அமைந்துள்ளது. விரக மின்றிய எழுத்துக்களால் கதையின் கருப் பொருளை விளக்கும் பாங்கு அ.இரவியின் படைப்பாற்றலின் இன்னொரு பரிமானம்.

“குயில்கூட்டின் மேலால் பறந்த ஒன்று” என்ற கதை ஒரு மாறுபட்ட அனுபவமாக அமைந்தது. ஆசிரியப் பணியில் இணைந்த காலகட்டத்தில் இளம் ஆசிரியை மீதான காதலுக்கும் தனது மாணவிக்கு தன்மீதுள்ள ஈர்ப்பிற்கும் நடுவில் உள்ள கயிற்றில் நடக்கும் அல்லது கத்தியில் நடக்கும் இளமையின் இயல்புநிலையை மையமாகக் கொண்ட கதையது. காதலுக்கும், பிரதேசவாதத்திற்கும், ஆசிரியப் பணிக்குமிடையிலான சஞ்சலப்போர் சொல்லும் கதையாக அமைந்தள்ளது. இடமாற்றங்களும் புலம்பெயர்வுகளும் ஏற்படுத்தும் தாக்கங்களைச் சொல்லும் சில கதைகளும் இந்நூலில் இடம்பிடித்துள்ளன.

பெரும்பாலான இவர்களின் படைப்புக்கள் அங்கு நிலவிய தனிமை, தவிப்பு, கடின உழைப்பு, சூழல்மாற்றம், விரக்தி என்பவற்றின் தூண்டுதலால் எழுதப்பட்ட கதைகளாக அமைகின்றன.


“யாவும் கற்பனை” என்ற இறுதிக்கதை கதை எழுதுவது பற்றிய சம்பாசணைகளை உள்ளடக்கியது. இந்தக் கதை இக்கதைத் தொகுப்பின் முடிவுரைபோல் அமைந்துள்ளது. ஏன் கற்பனையில் கதை எழுத வேண்டும்?. எம் தேசமும் தேசத்தவரும் பட்டபாடுகள் இன்னமும் சொல்லப்படாமல் கிடக்கின்றதே. எனவே ஏன் கற்பனைக்குள் காணாமற்போவான்?. காணாமற் போன நம்மவர் கதை சொல்லலாம், சொல்லாமற்போன காதலைச் சொல்லலாம், புலம்பெயர் வாழ்வின் அனுபவத்தைச் சொல்லலாம். புண்பட்ட உள்ளத்தைச் சொல்லலாம், பண்பட்ட அந்நாளின் நம் தேசத்தைச் சொல்லலாம். இன்னும் எத்தனை உண்மைகள் ஊமை யாகிக் கிடக்கின்றன அவற்றுக்கு உயிர்கொடுக்கலாம். அ.இரவியின் கதைகள் அவற்றையே செய்ய முயல்கின்றன.

கதைகளின் தலைப்பிடும் கலை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இது கதைக்குள் எம்மை ஈர்க்கும் சக்தி கொண்டது. இவற்றில் சில தலைப்புக் களை மஹாகவி, வ.ஐ.ச.ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன் ஆகியோரின் கவிதைகள் தந்ததாக தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு தலைப்பின்கீழும் கதை எழுதப்பட்ட ஆண்டு குறிப்பிடப் பட்டுள்ளமை கதையைக் காலத்தின் கண்ணாடி கொண்டு வாசிக்க உதவுகின்றது. பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகை மற்றும் ஆண்டு ஒவ்வொரு கதைகளின் ஈற்றிலும் குறிப்பிட்டிருப்பது கதையின் காத்துக் கிடப்பினையும் உணர்த்துகின்றது.

கதாபாத்திரங்களும் அவை பற்றிய விபரிப்புக் களும் மனிதர்களோடு ஊடாடிய அனுபவத்தின்வழியும் பிறரின் அனுபவப் பகிர்வின் வழியும் கிடைக்கப்பெற்ற திறனாகவே பார்க்க முடிகின்றது. இவற்றில் மூன்று கதைகள் பிறரது கதைகளை தனது வியாக்கியானத் தோடு புனைவின் மொழியில் புத்துருவாக்கம் செய்த கதைகளாக அமைந்துள்ளது. பல கதைகளை அத்தியா யங்களாகப் பிரித்து எழுதுவது கதையின் முக்கிய கட்டங்களை வரையறை செய்து வாசிக்க உதவுவதா கவே நான் உணர்கின்றேன்.

யதார்த்தங்கள் எமது வாழ்வியல் வரலாற்றைச் சொல்ல வல்லவை, காலத்தை கண்முன் நிறுத்துபவை, காரிருள் சூழ்ந்த காலப்பகுதியை ஒளிகொண்டு தேடு பவை எனவே யதார்த்தங்கள் கதைகளின் கருப் பொருள் களாகும்பொழுது கதை உயிர்பெறுகின்றது. அ.இரவி யின் கதைகளுக்குள் இந்தப்பொதுத் தன்மையைக் காணமுடிகின்றது.

■ கௌசி



# அ.ரவியின் 1958

**காலம் என்னும் காற்று எமைப் புரட்டிப் போட்டாலும்
வாழ்க்கை என்னும் சூழல் எமை வதைத்து நின்றாலும்
தமிழென்னும் கைத்தடி கொண்டு தடுமாறா மனம் கொண்டு
எழுத்தால் என்றும் எழுந்து நிற்போம்**

*1958* என்னும் பெயருடன் வழமையான அணிந்துரை, வாழ்த்துரை பதிப்புரை, போன்ற அம்சங்களின்றி சாதாரணமாக ஆசிரியர் முன்னுரையுடனே வெளிவந்துள்ள இந்நூலின் ஆசிரியர் இரவி அருணாசலம் அவர்கள் மிகப் பிரபல்யம் ஆனவரே. புதிசு, சரிநிகர், புலம், ஒரு பேப்பர் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் ஒருவராக இருக்கின்றார். ஐபிசி தமிழ் வானொலி, டிடிஎன் தமிழ் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக பணியாற்றியுள்ளார். இது இவருடைய *5* ஆவது நூல். *50* க்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கிறார். இவர் கதை சொல்லும் அநுபவம் பெற்றோரிடம் இருந்து இவருக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது என்னால் அறியப்படுகின்றது. இந்நூல் ஒரு நாவல். காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியீடு செய்யப்பட்டிருக்கும் இந்த நூல் மூலம் நான் வாழாத ஒரு இடத்திற்கு, ஆண்டுக்கு ஆசிரியர் இரவி அவர்கள் என்னை அழைத்துச் சென்றிருக்கின்றார். *1958* ஆம் ஆண்டு நானும் வாழ்ந்ததில்லை ஆசிரியர் இரவி அவர்களும் வாழ்ந்ததில்லை. இங்குதான் எழுத்தாளன் தலை நிமிர்ந்து நிற்கின்றான். வாழ்ந்த காலத்தையும் வாழாத காலத்தையும் கண்ட சம்பவத்தையும் காணாத சம்பவத்தையும் ஒரு நிலைக்கண்ணாடி போல் வாசகர் முன் நிறுத்தக் கூடிய வலிமை எழுத்தாளனுக்குத்தான் உண்டு என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். இதனால்தான் எழுத்தாளன் பிரம்மா எனப்படுகின்றான்.

இந்நூலின் பிரம்மா ஆகிய இரவி அவர்கள், *1958*ம் ஆண்டின் பல்வேறு அநுபவங்களுடன், பல்வேறு செய்திகள் காணப்பட பல்வேறு பாத்திரங்களின் பண்புகளையும் வாழ்க்கை முறைகளையும் அவற்றுக்கிடையே நடைபெறும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தி இந்த *1958* என்னும் நூலிலே எமக்குக் கோர்த்து தந்திருக்கின்றார். நூலின் பெயரைக் கேட்டவுடன் எல்லோர் மனதிலும் தோன்றுகின்ற எண்ணமே இந்த நூலில் தெளிவுபடுத்தப்படுகின்றது. "*1958* ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர் மீது ஏவப்பட்ட இன வன்முறை குறித்துப் பேசுகின்ற புதினம் இது. இன வன்முறை நிகழ்ந்த நாட்களிலும் அதன் பின் வந்த நாட்களிலும் மனநிலை ரீதியாக ஒரு தமிழ்க் குடும்பம் சந்திக்கும் நெருக்கடிகளை சித்திரிக்கிறது. மொழி நடையினாலும் கதை சொல்லும் உத்தியினாலும் சிறப்புப் பெற்றிருக்கின்றது" என நூலின் பின்புறம் சாராம்சத்தை உணர்த்துகின்றது. புத்தகம் என்பது புதிய அகம். அந்த வீட்டினுள் புகுந்து வெளிவருபவர்கள் ஒரு புதிய அநுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். அந்த அநுபவங்களை இந்நூலின் மூலம் நான் பெற்றேன். வாசகர்களும் பெறப் போகின்றார்கள்.

ஒரு நாவல் என்னும்போது பல்வேறுபட்ட அநுபவங்கள், செய்திகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இவை அடங்கிய வாழ்க்கைமுறை முழுமையாகவோ அல்லது அதன் பகுதி வாழ்க்கையோ விளக்கமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். கதாபாத்திரங்களின் பண்புகள், வாழ்க்கைமுறைகள், அவற்றுக்கிடையே நடைபெறும் நிகழ்ச்சிகள், இந்தப் பாத்திரங்கள் சமூகத்தோடு எவ்வாறு உறவு கொண்டுள்ளன போன்றவற்றை ஒழுங்குபடுத்திக் கதையாகத் தொகுத்துத் தரவேண்டும். கதாபாத்திரங்களை உருவாக்குவதிலும் அவற்றை வழிநடத்துவதிலும் தான் ஒரு நாவலின் வெற்றி தங்கியிருக்கின்றது. கதாபாத்திரங்கள் பிறரோடு உரையாடும் உரையாடல்கள்

பாத்திரங்களின் வளர்ச்சிக்கு துணையாக அமைந்து விடுகின்றன. வாசகர்கள் பாத்திரங்களின் செயல்கள் மூலம் கதையை உணர்ந்து கொள்ளுகின்றனர் அல்லது ஆசிரியர் பாத்திரங்களின் நடவடிக்கைகளை தனது கூற்றாகக் கூறுவார். இங்கு ஆசிரியர் இரவி அவர்கள் தனது கூற்றாகப் பாத்திரங்களைச் சம்பவங்களை வழி நடத்திச் செல்லுகின்றார். இது இந்நூலுக்கு சிறப்பம்ச மாகப்படுகின்றது பாத்திரங்களின் உரையாடலின் போது வட்டாரச்சொற்கள் பிறமொழிச்சொற்கள் கலந்து வரலாம். ஆனால், ஆசிரியர் கூற்றின்போது எழுத்து வழக்கு நிச்சயமாக இருக்கவேண்டும். எனவே நாவல் என்னும் இலக்கிய அமைப்பில் ஆசிரியர் வெற்றி பெறு கின்றார். இந்தக் கதையிலே அவரும் அக்காலத்தில் வாழ்ந்து பாத்திரங்களையும் வாழவைத்திருக்கின்றார்.

இந்த நூலிலே கல்லுலுவ, மினுவாங்கொட. குணுப்பிட்டி, வவுனியா, யாழ்ப்பாணம், கீரிமலை அள வெட்டி இவ்வாறு நகரங்கள் வாழ்ந்திருக்கின்றன. சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்கள் ஆகிய மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்திருக்கின்றன. ஒவ்வொரு இனத்தவர்களின் அடையாளங்கள், வாழ்க்கை முறைகள் அழகாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. பெனியன் தெரியத்தக்கதாக ரெர்லின் சேர்ட்டை உள்ளேவிட்டு, சாரக்கட்டின்மேல், பேர்ஸ் வைத்த அகலப்பாம்புத்தோல் பெல்ற்றை கட்டியிருத்தல் பெரேரா அடையாளம். இவ்வாறு ஒவ்வொரு இனத்தவர் களின் அடையாளங்கள் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. இஸ்லாமிய பெண்கள் தமது தலைமயிரை வெளியே தெரியவிடாது முக்காடிற்றுக் கொள்வார்கள். தலைமயிர் ஒரு மனிதனுக்கு அழகைக் கொடுக்கும். அது ஆண்களுக்கு தெரிதல் அவர்கள் மனதைக் கெடுக்கும் என்பதனால்தான் தலைமயிர் தெரியாது முக்காடிடப்படு கின்றது என்று நான் அறிந்தேன். ஆனால், வான் வெளியில் தலைமயிர் தெரிந்தால் இபிலீசு என்னும் சாத்தான் இறங்கிவிடுவான். இபிலீசு என்னும் சாத்தான் குடியிருக்க ஆசைப்படும் இடம் தலைமுடி மயிர்க் கற்றைகள். அதனாலேதான் மயிரை மூடிமறைக் கின்றார்கள், இன்னும் ஓர் இடத்தில் என்று மதத்தைக் கற்று எமக்குத் தந்திருக்கின்றார். மூவினங்களும் ஒற்றுமையாய் வாழ்ந்த ஒரு சூழலிலேதான் எனது இளமைப்பருவங்கள் இன்பமாக அமைந்திருந்தன. அதனால், இந்நூலை வாசித்தபோது என் பல நினைவு கள் மீட்டிப்பார்க்கப்பட்டன.

ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு கதை இருக்கும். நாமெல்லாம் கடந்து வந்த உலகத்திலே கண்ணீர் உண்டு, கவலைகள் உண்டு, ஓட்டம் உண்டு, அநுபவங்கள் உண்டு, விரக்தியுண்டு, வேதனை உண்டு என்று அடுக்கிக் கொண்டு போகலாம். இந்நூலிலே வேதனைகளும் உண்டு, அந்தக்கால வாழ்க்கை முறை களும் உண்டு. நம்பிக்கைகள் உண்டு, பக்தியுண்டு, பண்பாடு உண்டு, காதல் உண்டு, வீரம் உண்டு. இந்நூலை வாசித்தபோது ஒரு திரைப்படம் பார்க்கும் போது ஏற்படுகின்ற உணர்வுகள் என் முன்னே நிழலாடியது. பல பல விடயங்கள் இந்நூலிலே நான் கற்றுக் கொண்டேன்.

வெடி பற்றி. அதன் வகைகள் புரிந்திருக்கிறதா உங்களுக்கு மூலவெடி, ஹனுமான் வெடி, சாண்டோ வெடி, புஸ்வானம் என விரிகின்றது. ஏன் ஓலைப்பெட்டி வகைகள் பெட்டி, கடகம், பட்டை, நீத்துப்பெட்டி, மடிப் பெட்டி, கொட்டைப்பெட்டி, நீத்துப்பெட்டி, அடுக்குப் பெட்டி என பெட்டி வகைகள் சொல்லப்பட்டிருக் கின்றன. கள்ளின்பருவங்கள் சித்திரைக்குச் சிதறு கள்ளு, பங்குனிக்குப் பரவுகள்ளு, ஆனிக்கு அரிபனைக் கள்ளு, ஆடிக்கு அருந்தள் கள்ளு, ஆவணிக்குக் காய்வெட்டிக்கள்ளு என்றிருக்கின்றன.


இதில் பல நம்பிக்கைகளை எடுத்துக்காட்டு கின்றார். ஹஜ்ரத்துல்முன்தஹா என்பது சொர்க்கத்தி லிருக்கிற ஒரு மரம். இந்தமரத்தில் கோடிக்கணக்கான இலைகள் இருக்கின்றன. உலகத்தில் இருக்கின்ற அத்தனை உயிர்களின் பெயர்களும் அதில் எழுதப் பட்டிருக்கும். காற்றடிக்கும் போது சில இலைகள் உதிரும். அப்போது இலையில் பெயரிடப்பட்டவர்கள் மண்ணில் மரித்தவர்கள் ஆகின்றார்கள். இந்த ஹஜ்ரத்துல்முன்தஹா என்பது ஒரு நம்பிக்கை. இதே போல், இன்னுமொரு நம்பிக்கை. இதனையும் நம்புவதா என்பது போல் இருக்கும் பலி கொடுத்தல். குட்டிக் கிடாயை மாடாக்குவதற்கு மரையாக்குவதற்கும் செய்யும் பிரயத்தனங்களும் அதனை பின் வேள்வியில் பலி கொடுப்பதும் மனதுக்கு கசப்பான உணர்வைத் தந்தது. இவையெல்லாம் நம்பிக்கைகள். இரவி அவர்கள் என்ன செய்யமுடியும். இது மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டவைதானே. கடலைத்துவையல் கொடுத்து, தவிடு புண்ணாக்குக் கொடுத்து, அவை உண்டது செமித்துக் கொடுக்க சாராயம் சிறிதளவு கலந்து கொடுத்து பலா விலை, ஆலமிலை எடுத்து அதற்குள் கடலைத் துவையல், தவிடு பிண்ணாக்குக் குழையல் வைத்து நாலாக மடித்து கிடாயின்தாடையை நெருக்கிப்பிடித்து வாயைத் திறக்க வைத்து நாலாக மடித்ததை உள்ளே அதக்குவார்கள். பத்துத் தடைவை அப்படிப்போன பின் கிடாய் மற்றவற்றை உண்ண பஞ்சிப்படும். அப்போது ஒரு பொல்லெடுத்து அதன் உணவை உள்ளே தள்ளு வார்கள். அது தொண்டைவரை போய்விடும். இந்தக் கிடா நடக்கக்கூடாது, என்ன கொடுமை! இக்கிடாயை வேள்வியில் பலி கொடுப்பார்கள். மூட நம்பிக்கையில் உயிர்கள் பலிக்கடாவாகுவதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆசையாக பயன்படுத்தும் வாகனம் பழுதுபட்டால் விற்பதற்கே மனம் கலங்கும் மக்கள் மத்தியில், இவ்வாறான உயிர்க் கொலைகள் மதம் என்ற பெயரில் மதம் பிடித்திருப்பது அருவருப்பைத் தந்தது.

இதைவிட பேய்களின் நம்பிக்கை. உதாரணத் திற்கு ஒரு பேய் வாய்க்காலுக்கு தண்ணீர் இறைக் கின்றது. பேய் வருகின்றது கையைப் பிடிக்கும் போது குளிர்கின்றது. இதுவெல்லாம் 1958 ஆம் ஆண்டு. இந்தப்பேயெல்லாம் இப்போது எங்கே போனவையோ தெரியாது. இதுபோல் சாத்திரம் பற்றி ஓரிடத்தில்

கூறுகிறார். கோள்களினதும் கிரகங்களினதும் சொற்படி தான் உலகம் இயங்குகின்றது. அதனுள் மனிதர்களும் அடங்குகின்றனர். அவற்றின் பார்வையிலிருந்து யாரும் தப்ப முடியாது. பூரணைக்கு ஏன் கடல் பொங்குகின்றது. அமாவாசைக்கு ஏன் அடங்கிக் கிடக்கின்றது. சிலர் பூரணை நாட்களில் தன்பாட்டில் சிரிக்கின்றனர். அமாவாசை நாட்களில் வலிவந்தாற்போல் துடிக் கின்றனர். இவையெல்லாம் கோள்களின் பலன்களே என்பது பற்றிக் கூறுகின்றார். உண்மைதான் இதில் நீங்களும் அநுபவப்பட்டிருப்பீர்கள். அறிந்திருப்பீர்கள்.

அருணாசலம், ஹாஜியார், சித்திலெப்பை, ஆரிபு, தேர, பெரேரா, நோனா, பத்மாவதி, மிருணா, சுவாம்பிள்ளை, இப்படிக் கதாபாத்திரங்கள் இக்கதை யிலே நடமாடுகின்றன. ஒவ்வொரு கதாபாத்திரங்களி னூடாகப் பல சமூகசீர்திருத்தப்பண்புகள், நெற்றியில் அடித்தாற்போல் சிற்சில வார்த்தைகள், படிப்பினைகளை விதைத்துச் செல்கின்றார். நாம் யதார்த்தைச் சிந்திக்க வேண்டும். மனிதனுக்குத் தேவையானது அன்பு, துவக்கினால் ஆகக் கூடியது என்ன செய்துவிட முடியும். உயிர்களைப் பலி எடுக்கலாம். அன்பை அதனால் விதைத்துவிட முடியுமா? நாம் கற்பதற்கு நிறைய உண்டு, மனதில் கள்ளம் இல்லாமல் பக்கம் சாராமல், தேடவேண்டும். தேடல்தான் திறனை வளர்க்கும்., திணிப்பு வேறு, விருப்பம் வேறு. எதனையும் யாருக்கும் திணிக்கமுடியாது. அவர்கள் விரும்பி ஏற்கவேண்டும். இப்படிப் பல என் நெஞ்சைத் தொட்ட வார்த்தைகள் இதனுள்ளே அடங்கிக் கிடந்தன. ஒரு பிக்குவின் வார்த்தைகளாக யாரும் காந்தி அல்ல மகன். காந்தி துன்பப்பட்ட மக்களின் விளிம்புநிலையில் நின்றார். யாவரினது துயரத்தையும் தன் துயர் ஆக்கினார். மக்களிடையே ஒருவரான பயணம் அவருடையது. தாழ்த்தப்பட்ட மக்களை மேல்சாதி ஒடுக்கும்போது, மேல் சாதிமீது அவர் கோபப்பட்டார் அல்லர். அதன்பின் நிமித்தம் அவர்களை வென்றெடுக்கலாம் என்று நம்பினார். மேற்சாதி தாழ்த்தப்பட்மோரைக் கோயிலுக் குள் விடவில்லை என்றவுடன் தாழ்த்தப்பட்டோர் தமக்குக் கோயிலைக்கட்டி அதில் அவர்கள் வழி பாடியற்றட்டும் என்றுதான் காந்தியால் வழிகாட்ட முடிந்தது. அதுதான் சரி. யாரும் யாருக்கும் நோகாத வாழ்க்கை வாழ வேண்டும். வார்த்தைகளை வாசிக்கின்ற போது ஒரு மனிதன் உடனடி யாகத் திருந்தாது விட்டாலும் மூளைப் பதிவிலே உறைந்து சிற்சில சமயங்கள் அவனுக்கு உறுத்தலைத் தரும் அல்லவா. இவ்வாறான வார்த்தை உறுத்தல்கள் தான் மனிதனைச் சீர்ப்படுத்தும் அதனால், இவ் வாறான நூல்களை நீங்கள் வாசிக்கின்ற போதுதான் மனமென்கின்ற மாயையை உங்களுக்குக் கட்டிப்போட முடியும்.

104ம் பக்கத்திலிருந்து 115 ஆம் பக்கம் வரை வாசிக்கும் போது நான் இங்கில்லை என் நினைவுகளை மீட்டவைத்து கண்களைக் குளமாக்கின. நான் பட்ட துயர், அதற்கான காரணங்கள் எல்லாம் வந்து ஒரு வெறுப்பைத் தந்தன. படித்துப் பாருங்கள் உங்களுக்கும் இவ்வாறு பல இடங்கள் மனதிலே படும்.



இப்போது கதைக்கு வருகின்றேன். ஒரு ஆசிரியர் தோட்டத்தொழிலாளியாக மாறியகதை. கதா சிரியர் இரவி அருணாச்சலம் அவர்களின் உண்மைக் கதைபோல் தெரிகின்றது. இதுபற்றி கதாசிரியர்தான் சொல்லவேண்டும். கல்லுலுவ என்னும் சிங்களக் கிராமத்தில் வாழுகின்ற ஒரு தமிழ்க்குடும்பம் அதாவது ஒரு ஆசிரியர், மனைவி, ஒரு பெண்கைக்குழந்தை மூவரும் அங்குவாழ்ந்த இஸ்லாமிய, தமிழ், சிங்களக் குடும்பங்களுடன் அன்பாகவும் ஒருத்தருக்கொருத்தர் ஆதரவாகவும் வாழ்ந்து 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்ததால் சிங்கள, இஸ்லாம் என்ற இரண்டு இனங்களின் ஒத்துழைப்புடன் காப்பாற்றப்பட்டு சொந்த ஊர் கீரிமலை நாடி வந்து தோட்டத்தொழிலில் ஈடுபட நாட்டங்கொள்வதுவே கதை. இக்கருவைக் கொண்டு கதையோட்டம் செல்கின்றது. கதை தொடர்ந்து செல்லப் பின்னணி நினைத்துப் பார்க்கப்படுகின்றது. நினைக்கும் சமயத்தில் கதைஓட்டம் மாறுபடுகின்றது. வாசிக்கும் நிகழ்வு நிறுத்தப்பட்டு அச்சம்பவத்திற்கான எடுகோள்கள் வேறு சம்பவத்தை விளக்கிச் செல் கின்றது. இது சிலருக்கு மயக்கத்தைத் தரலாம். ஆனால், அவ்வவ் சந்தர்ப்பங்களிலேயே இவற்றை விளக்க வேண்டிய அவசியம் கருதியே இக்கதையை ஆசிரியர் கொண்டு செல்கின்றார். ஏனென்றால், எதை எவ்விடத் தில், எப்படிச் சொல்லவேண்டுமோ அதை அவ்விடத்தில் அப்படியே சொல்வதுதான் சிறப்பு. அதைத்தான் கதாசிரியர் கூறியிருக்கின்றார். ஏனென்றால், இரவி அவர்களுக்கு 10 வருடங்கள் இலங்கையில் கற்பித்த அநுபவம் இருக்கின்றது.

"ஆடு அழுகிறதே என்று அள்ளிக்குழை போட்டோம், வாழை வாடுகிறதே என்று வாய்க்கால் வெட்டி நீர் வார்த்தோம், நாய்க்குக் கல்லெறிந்து கதறி யழப் பார்த்ததில்லை" போன்ற அடிக்கடி வந்துபோகும் அழகான வரிகளுடன் இந்நூலை அலசியதில் நான் கற்றுக் கொண்டது அன்பு என்பது எல்லோருடைய இதயங்களிலும் இருக்கின்றது. சந்தர்ப்பமும் சூழ்நிலை யும் விதைக்கின்ற சம்பவங்கள் அன்பை மீறி மனித மனங்களை மாற்றிவிடுகின்றன. என்பதுதான் உண்மை. எல்லா வகையான இனங்களிலும் மனிதனும் உண்டு, மிருகமும் உண்டு. உலகில் அனைவரும் புத்தனும் இல்லை காந்தியும் இல்லை. பழகிய உறவுகளும் வாழ்ந்த இடமும் மனிதன் உயிருள்ளவரை மனம் விட்டு அகலாது. இந்த உண்மைகளே எனக்குள் சப்பாணியிட்டு அமர்ந்து கொண்டன. 215 பக்கங்களுடன் வெளியாகியுள்ள இந் நூலைப் படிப்பவர்கள் நிச்சயம் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

# எழுத்தாளர் அ.இரவியின் “கொற்றவை பற்றிக் கூறினேன்”

■ வ.ந.கிரிதரன்

கதாசிரியரின் வயதினையொத்த பருவத்தினர் எவருக்கும் இந்நாவல் தம் வாழ்க்கை அனுபவங்களை விபரித்துச் செல்லுமோர் அனுபவத்தைத்தரும். கோயில் திருவிழாக்கள், அங்கு நடைபெறும் நாதஸ்வர, தவில் கச்சேரிகள், நகரத்துத் திரையரங்குகள்,அங்கு ஓடும் அபிமான நடிகர்களின் திரைப்படங்கள், மாமா போன்ற குடும்ப உறவுகளினூடான சுவையான அனுபவங்கள், வருடம் முழுவதும் அவ்வப்போது பின்பற்றும் பல்வகை விழாக்கள், நம்பிக்கைகளுடன் கூடிய நிகழ்வுகள், படித்த கல்விக்கூடங்கள், அங்கு கற்பித்த ஆசிரியர்களுடனான அனுபவங்கள்... இவ்வித மான அனுபவங்கள் கதாசிரியரின் அனுபவங்கள் மட்டுமல்ல, எல்லோருடைய அனுபவங்களும்தாம். வாசகர்களுக்குத் தம் வாழ்க்கை அனுபவங்களை மீண்டுமொருதடவை அசைபோட வைக்கும் விபரிப்பு களை உள்ளடக்கிய சம்பவங்களை நாவல் உள்ளடக்கி யுள்ளது.

எழுத்தாளர் அ.இரவியின் “கொற்றவை பற்றிக்கூறினேன்” பெருநாவலை வாசித்தேன். ஆகுதி பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள நாவல். எழுத்தாளர் அ.இரவியின் கடந்தகாலப் படைப்புகளூடு அவரது மண் வாசனை மிக்க, வாசகர்களை ஈர்க்கும் எழுத்து நடை பற்றி அறிந்திருந்தேன் புரிந்திருந்தேன். அப்புரிதலுடன் இந்நாவலை வாசிக்கத்தொடங்கினேன். பொதுவாக எனக்கு எழுத்தாளர்களின் சுய சரிதைப் பாதிப்புள்ள நாவல்கள், அதுவும் பெரு நாவல் களென்றால் மிகவும் பிடிக்கும். என் அபிமான எழுத் தாளர்களில் ஒருவரான எம்.டி.வாசுதேவன் நாயரின் நாவல்கள் பலவற்றில் அவரது சொந்த வாழ்வின் பாதிப்புகளிருக்கும், ஃபியதோர் தத்யயேவ்ஸ்கியின் நாவல்களிலெல்லாம் அவரது சொந்த வாழ்வின் அனுபவப் பாதிப்புகள் நிறையவே இருக்கும். டால்ஸ்டா யின் நாவல்களும் இத்தகையவையே. தமிழ் எழுத்தாளர் அகிலனின் “பாவை விளக்கு” நாவல் அவரது சொந்த வாழ்வு அனுபவங்களை உள்ளடக்கிய நாவலென்று அவரே கூறியுள்ளதை வாசித்திருக்கின்றேன்.

இவ்விதமான சொந்த வாழ்வின் அனுபவங் களின் பாதிப்புகளை உள்ளடக்கிய நாவல்கள் ஒருவகை. இன்னுமொரு வகையோ எழுத்தாளர்களின் சுயசரிதை அனுபவங்களையே பிரதானமாகக் கொண்டு சிறிது படைப்பாற்றல் மிளிரும் கற்பனையையும் தூவிப் படைக்கப்படும் நாவல்கள். இதில் இரவியின் “கொற்றவை பற்றிக் கூறினேன்” நாவலை இரண்டாவது வகை நாவலாக நான் கருதுவேன். என் “அமெரிக்கா”, “குடிவரவாளன்” இத்தகைய வகை நாவல்களே. இவ்வகை நாவல்கள் எனக்குப் பிடிப்பதற்கு முக்கிய காரணங்களிலொன்று, என் சொந்த எழுத்தனுபவத்தி லிருந்து கூறினால், எழுத்தாளர்கள் தாம் அடைந்த அனுபவங்களை, அவை விளைவித்த எண்ணங்களைத் தாராளமாக, அனுபவபூர்வமாக, உணர்வு பூர்வமாக, மனதொன்றி எழுத முடியும் மட்டுமல்ல, அவ்வகை எழுத்துகளுக்கு அவர்களே முதல் வாசகர்களாகவும் இருந்து விட முடியும் தன்மையால்தான். என் அனுபவங் களைப் பிரதிபலிக்கும் என் நாவல்கள் பலவற்றை நானே மீண்டும், மீண்டும் விரும்பி வாசிப்பதுண்டு. அவ்வேளை



களிலெல்லாம் என் மனம் அக்காலகட்டங்களுக்கே சிறகடித்துச் சென்று விடும். உள்ளத்தில் இன்பத்தைப் பெருவெள்ளமெனப் பாய வைக்கும். எனவே இவ்வகையான நாவல்கள் வாசகர்களுக்காக எழுதப்படும் அதே சமயம் அவற்றை எழுதும் எழுத்தாளர்களுக்காகவும் எழுதப்படுகின்றன என்பது என் எண்ணம். எவ்விதம் எம் ஒருகாலப்புகைப்படங்கள் எமக்குக் அக்காலகட்டப் பிரதிபலிப்புகளாக இருக்கின்றனவோ அவ்விதமே இவ்வகையான நாவல்களும் ஒரு கால அனுபவ, உணர்வுப் பிரதிபலிப்புகளாக இருந்து விடுகின்றன.

எவ்விதம் மனம் சோர்ந்திருக்கும் தருணங்களில் பாரதியார் போன்றவர்களின் எழுத்துகள் சோர்ந்திருக்கும் உள்ளங்களைத் துள்ளியெழ வைக்கின்றனவோ அவ்விதமே இவகையான சுயசரிதைப் பாங்கான நன விடை தோய்தல்களாக அமைந்திருக்கும் நாவல்களும் இருந்து விடுகின்றன.

இந்நாவலுக்கான தனது முன்னுரையில் அ.இரவி கூறியிருக்கும் கருத்துகளிலிருந்து இந்நாவலானது ஏற்கனவே வெளிவந்த அவரது “காலமாகி வந்த கதை”யின் விரிவு என்பதை உணர முடிகின்றது. இது புனைவா அல்லது சுயசரிதையா என்பதைப்பற்றியும் அவர் தன் முன்னுரையில் கூறியிருக்கின்றார்.

மேற்படி நாவல் மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது:

1. முதலாம் அத்தியாயத்திற்கு முன்
2. 1-24 வரையிலான நாவல்
3. இறுதி அத்தியாயத்தின் பின்

முதலாம் அத்தியாயத்திற்கு முன் 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினைப்பற்றியும், அதன் இறுதிநாளன்று காவற்படையினர் கட்டவிழ்த்து விட்ட வன்முறை பற்றியும், அங்கு கதை சொல்லிக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் விபரிக்கின்றது. என்னைப்பொறுத்தவரையில் இதனை முதலாம் அத்தியாயத்திற்கு முன் என்று பிரித்திருப்பதை விட, முதலாம் அத்தியாயமாகவே கொண்டு நாவலை ஆரம்பித்திருக்கலாமென்று தோன்றுகின்றது.

அடுத்த இருபத்து நான்கு அத்தியாயங்களும் கதைசொல்லியின் பால்ய காலத்து அனுபவங்களை, அவர் வாழ்வில் எதிர்பட்ட பல்வேறு ஆளுமைகளை, அவரது குடும்ப உறவுகளை விபரிக்கின்றது. நாவல் முழுவதும் கதை சொல்லியின் தாயார் வியாபித்து நிற்கின்றார். நாவலின் இறுதி அத்தியாயம் வாசிக்கையில் வாசிப்பவர் உள்ளங்களை அதிர வைத்துவிடும் வகையில் எழுதப்பட்டுள்ளது. அது கதை சொல்லியின் தாயாரின் மரணத்தை விபரிக்கின்றது,அதை வாசிக்கையில் நாவலின் தலைப்பான கொற்றவையில் வரும் கொற்றவை யாரென்பது புரிந்துவிடுகின்றது. கதை சொல்லியின் தாயாரே கொற்றவை என்றுணர்ந்தேன்.

“இறுதி அத்தியாயத்தின் பின்” என்னும் கடைசி அத்தியாயம் நாவலுக்குத் தேவையற்ற ஒன்று. இன்னுமொருவர், தென்னிலங்கையில் பிறந்து வடகிழக்கை அறியாமல் சிங்கள மக்களுடன் வாழ்ந்த ஒருவர், 83 கலவரத்தைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் அகதியாகத் திரும்புவதை விபரிக்கின்றது. அவ்விதம் எதற்காக நாவலின் கதைசொல்லியைத் தவிர்த்து இன்னுமொரு கதை சொல்லியின் கதையாக அவ்வத்தியாயத்தை கதாசிரியர் எழுதினாரோ என்று எண்ணினேன். அதற்குப் பதில் “கொற்றவை பற்றிக் கூறினேன்“ நாவலின் கதை சொல்லியின் அனுபவமாக 83 கறுப்பு ஜூலை அனுபவங்களையும் விபரித்து, அதனை நாவலின் இறுதி அத்தியாயமாக எழுதியிருக்கலாம். அவ்விதம் எழுதியிருந்தால் 74 தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த வன்முறையுடன் ஆரம்பித்த நாவல் 83 கறுப்பு ஜூலையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையுடன் முடிவுறுவதாக இந்நாவல் அமைந்திருக்கும்.

இவ்விதம் நாவல் கட்டமைக்கப்பட்டிருந்தால்




அதில் நிச்சயம் முக்கியமானதோர் அர்த்தம் பொதிந் திருக்கும். ஏன்? 74இல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் நிகழ்ந்த தமிழர்கள் மீதான வன்முறைதான் உரும்பிராய் சிவகுமாரனை ஆயுதமேந்த வைத்துத் தமிழர் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தது. அதுபோல் 83 கறுப்பு ஜூலையில் தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையே இலங்கைத் தமிழர்களின் ஆயுதபோராட்டத்தை உபகண்டப்பிரச்சனையாக உருமாற்றிப் பற்றியெரிய வைத்தது. தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தின் முக்கியமான இரு வரலாற்று நிகழ்வுகள் அவை. இது இந்நாவலை வாசிக்கையில் எனக்கேற்பட்ட எண்ணம். ஏனையோர் எண்ணங்களும் இவ்வாறே இருக்க வேண்டுமென்பதில்லை.

நாவலின் முக்கிய அம்சங்களாக நான் கருதுவது : மண் வாசனையுடன் கூடிய எழுத்து. புகலிடத்தமிழர் ஒருவரின் பால்ய, பதின்ம மற்றும் நடுத்தரப் பருவத்து அனுபவங்களை நனவிடை தோய்தலினூடு விபரிக்கும் எழுத்து. வாசிப்பவர் எவராகவிருந்தாலும் அவருக்கு இன்பத்தை, இழந்த நினைவுகளைப்பற்றிய நனவிடை தோய்தல் தரும் இன், தண் உணர்வுகளைத் தரும் எழுத்து. அவ்வப்போது நூலை எடுத்து அப்பகுதிகளை வாசித்து இன்பமடைய வைக்கும் எழுத்து.

கதாசிரியரின் வயதினையொத்த பருவத்தினர் எவருக்கும் இந்நாவல் தம் வாழ்க்கை அனுபவங்களை விபரித்துச் செல்லுமோர் அனுபவத்தைத்தரும். கோயில் திருவிழாக்கள், அங்கு நடைபெறும் நாதஸ்வர, தவில் கச்சேரிகள், நகரத்துத் திரையரங்குகள்,அங்கு ஓடும் அபிமான நடிகர்களின் திரைப்படங்கள், மாமா போன்ற குடும்ப உறவுகளினூடான சுவையான அனுபவங்கள், வருடம் முழுவதும் அவ்வப்போது பின்பற்றும் பல்வகை விழாக்கள், நம்பிக்கைகளுடன் கூடிய நிகழ்வுகள், படித்த கல்விக்கூடங்கள், அங்கு கற்பித்த ஆசிரியர்களுடனான அனுபவங்கள்... இவ்வித மான அனுபவங்கள் கதாசிரியரின் அனுபவங்கள் மட்டுமல்ல, எல்லோருடைய அனுபவங்களும்தாம். வாசகர்களுக்குத் தம் வாழ்க்கை அனுபவங்களை மீண்டுமொருதடவை அசைபோட வைக்கும் விபரிப்பு களை உள்ளடக்கிய சம்பவங்களை நாவல் உள்ளடக்கி யுள்ளது. ஆனால் அவ்வனுபவங்களை உணர்வுபூர்வ மாக, சுவையாக, வாசிப்பவர் நெஞ்சங்களை வருடிச் செல்லும் வகையிலான எழுத்தில் வடித்திருக்கின்றார் கதாசிரியர்.

இவ்விதமான புகலிடத்தமிழர் ஒருவரின் நனவிடை தோய்தல் கூடவே இன்னுமொரு விடயத்தை யும் எவ்விதப் பிரச்சாரமுமின்றிப் பதிவு செய்கின்றது. அது இலங்கைத் தமிழர்கள் மேல் அவ்வப்போது புரியப்பட்ட அடக்கு, ஒடுக்குமுறைகள், அவற்றாலேற் பட்ட நூலக எரிப்பு, படையினரின் நில அபகரிப்பு போன்ற நிகழ்வுகள், அவை ஏற்படுத்திய உணர்வுரீதியான பாதிப்புகள். இவற்றைப் பதிவு செய்வதன் மூலம் அவற்றை "கொற்றவை பற்றி கூறினேன்" ஆவணப் படுத்துகின்றது.




இலங்கைத் தமிழர்களின், குறிப்பாக வட பகுதித்தமிழர்களின் வட்டார வழக்குகளையும் நாவலில் வரும் விபரிப்புகள், உரையாடல்கள் பதிவு செய்திருக் கின்றன, "அழாப்பி, "துலைக்கோ", "நைய்க்க" போன்ற சொற்கள் நிறையவே இந்நாவலில் வருகின்றன. அவைதாம் இந்நாவலுக்கு உயிர்த் துடிப்பைத் தருகின்றன.

ந.செ. என்பவனின் அனுபவமாக விரியும் இறுதி அத்தியாயம் என் வாசிப்புக்கு இடையூறாக, ஒட்டாம லிருக்கின்றது. ந.செ.வின் அனுபவத்தை இன்னுமொரு நாவலாக எழுதலாமென்று தோன்றியது. அதற்குப் பதிலாக ந.செ.வின் அனுபவத்தைக் "கொற்றவை பற்றிக்கூறினேன்" நாவலின் ஒரு பகுதியாக, அதனைக் கூறும் கதாசரியரின் அனுபவமாக மாற்றி உள்ளடக்கி யிருந்தால் இன்றும் சிறப்பாக இருந்திருக்குமென்று தோன்றியது. ஆனால் அதே சமயம் இவ்விதமாக முதல் இருபத்திநான்கு அத்தியாயங்களுடன் ஒட்டாமல் இருந்தாலும், அது "கொற்றவை பற்றிக் கூறினேன்" நாவலின் தரத்தை எவ்விதத்திலும் சிறுமைப்படுத்தி விடவில்லை.

எவ்விதம் டால்ஸ்டாயின் "புத்துயிர்ப்பு" நாவலின் முடிவில் வரும் மதமே மனிதரின் அனைத்துப் பிரச்சனைக்கும் தீர்வு என்று முன்வைக்கப்பட்ட கருத்து அதற்கு முன் விரிந்து கிடக்கும் நாவலைச் சிறுமைப் படுத்தவில்லையோ, எவ்விதம் தத்யயேவ்ஸ்கியின் "குற்றமும் தண்டனையும்" நாவலின் இறுதியில் மானுடரின் பிரச்சனைக்கு மதமே தீர்வு என்று திணிக்கப்படும் கருத்து அதற்கு முன் விரிந்திருக்கும் பெரு நாவலைச் சிறுமைப்படுத்தவில்லையோ, அது போலவே இறுதியில் முன் விரிந்திருக்கும் பெரு நாவலான "கொற்றவை பற்றிக் கூறினேன்" நாவலையும், அதன் இறுதியில் அப்பெருநாவலுடன் ஒட்டாம லிருக்கும் ந.செ.வின் அனுபவங்களும் சிறுமைப்படுத்த வில்லையென்று நிச்சயமாகக் கூறலாம்.

# நேர்காணல்

அ.இரவி ஈழத்தின் மிக ஆளுமை மிகுந்த படைப்பாளி. பல அருமையான நாவல்களை இலக்கிய உலகிற்கு தந்தவர். இவரது மொழி தனித்துவமானது. புதுசு சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இயங்கியவர். ஈழத்து இலக்கியத்தின் அடையாளங்களில் ஒருவர்.




இரவி அருணாசலம்
சந்திப்பு : பரணீ

**பரணீ:**

**உங்கள் பிறந்த இடம், பெற்றோர், பாடசாலைக் கல்வி... அறிந்து கொள்ள விரும்புகிறோம்?**

**அ.இரவி :**

*பிறந்த இடம்: அளவெட்டி. அப்பா: அருணாசலம் (ஆசிரியர்). அம்மா: பரமேஸ்வரி. அக்கா: சியாமளா.*

*பாடசாலைக் கல்வி: அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாசாலை, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.*

**பரணீ:**

**படித்த காலத்தில் உங்களுக்குள் ஊன்றிய இலக்கியத் தாக்கம் பற்றி? இலக்கிய விதையைத் தங்களிடம் ஊன்றியவர்கள் பற்றி?**

**அ.இரவி :**

*அப்பாவும் அம்மாவும் நிறைய வாசிப்பார்கள். வீட்டுக்குத் தினசரி பத்திரிகை வரும். எங்கிருந்தோ வாசிப்பதற்கென அப்பா நிறையப் புத்தகங்கள் கொண்டு வருவார். நானும் அம்மாவும் அப்பாவும் மாறி மாறி வாசிப்போம். அப்போது வீட்டில் மின்சாரம் இல்லை. அப்பா, கைவிளக்கைத் தூக்கி வைத்து, புத்தகம் வாசித்த சித்திரம் இப்போதும் என் நெஞ்சில் நிழலாடுகிறது. நான் கல்விக்காகப் படிக்கிற புத்தகத்தில் உள்வைத்துக் கதைப்புத்தகம் வாசிப்பதுண்டு. அப்படி வாசித்த புத்தகங்களில் இப்போதும் என் நினைவில் நிற்பவை: அ.முத்துலிங்கம் எழுதிய "அக்கா"(சிறுகதைத் தொகுப்பு), கே.டானியல் எழுதிய "பஞ்சமர்"(நாவல்), கே.வி.நடராசன் எழுதிய "யாழ்ப்பாணக் கதைகள்" இப்படைப்புகளில், நான் வாழ்ந்த யாழ்ப்பாண வாழ்வை, எழுத்துச் சித்திரமாக திருப்பி எனக்குத் தந்த அவர்களது எழுத்து வல்லமையை நான் வியப்பதுண்டு. எனது பிஞ்சு மனசில் எழுத்து விதையை என்னை அறியாமல் எனக்குள் ஊன்றிவிட்டார்கள். அப்போது என் வயது: ஏழு!*

*மகாஜனாக் கல்லூரியில் இருந்த நூலகம்தான் என்னை வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆற்றுப்படுத்தியது. வகுப்பில் பாடம் நடந்தாலும் நான் நூலகத்துக்குள் நுழைந்து ஒளித்து இருந்து வாசிப்பேன். அப்போது வாசகர் வட்ட வெளியீடாக வந்த "மணலும் புனலும்"(அ.மாதவன்), "கடலோடி"(நரசையா), "சாயாவனம்"(சா.கந்தசாமி) "ஒரு புளியமரத்தின் கதை"(சுந்தர ராமசாமி), "பள்ளி கொண்ட புரம்"(நீல பத்மநாபன்)ஆகியன முக்கிய படைப்புகள். அந்நூலகத்தில் ஜெயகாந்தனின் சிறுகதைகளை ஒன்று விடாது வாசித்தேன். லா.சா.ராமாமிர்தம், அசோகமித்திரன், தி.ஜான கிராமன், இந்திரா பார்த்தசாரதி.... போன்றோர் முக்கிய படைப்பாளிகளாக அப்போது எனக்குப்பட்டனர். சோவியத் யூனியனின் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட படைப்புகள் என்னை உந்துதல் நிலைக்கு ஆளாக்கின. குறிப்பாக அன்ரன் செக்கோவ், சிங்கிஸ் ஐத்மாத்தவ்... போன்றோர் தந்த படைப்புகள்.*

**பரணீ:**

**உங்களது முதல் படைப்பு? வெளியான ஊடகம்? அப்போதைய மனநிலை? நண்பர்கள் கருத்து?**

**அ.இரவி :**

*அச்சில் வெளியான எனது முதற்படைப்பு: "மேற்கோள் போலி" என்ற சிறுகதை. அதற்கு முதலே சிறுகதைகள் சில எழுதியுள்ளேன். அனைத்தும் ஜெயகாந்தனின் சிறுகதைகள் தந்த பாதிப்பில் எழுதப்பட்டவை. அக்கதைகளை இப்போது யோசித்தாலும் வெட்கமாக இருக்கும்.*

*எனது முதல் சிறுகதை வெளியான ஊடகம்: "புதுசு" என்று நண்பர்களுடன் நான் நடத்திய சஞ்சிகை. நாங்கள் நடத்திய சஞ்சிகை என்பதனால் அதில் எனது சிறுகதை வெளியானதில்லை. நண்பன் விஜிக்கு (இளவாலை விஜயேந்திரன்) சிறுகதையைக் காட்டியபோது வாசித்துவிட்டு "சோக்காயிருக்கு..." என்றான். சேரன் (கவிஞர் சேரன்), "புதுசு"விலேயே இச்சிறுகதையைப் போடலாம்... அவ்வளவு தரமா இருக்கு" என்றான். அதனால் "புதுசு"வில் வெளியாயிற்று. என்றாலும் எனது அப்பா, அம்மா அச்சிறுகதையை வாசித்தபோது, எனக்கு ஏற்பட்ட வெட்கத்துக்கு அளவில்லை. ஏனென்றால் அஃதொரு ஒருதலைக் காதல்கதை. என்றாலும்*

சிறுகதை எழுத வருகிறது என்பது எனக்குப் பெருமிதமாக இருந்தது.

**பரணீ:**

**"புதுசு"வின் வரவு? அதில் தங்களது பங்களிப்பு?**

**அ.இரவி :**

"புதுசு"வில் பங்காற்றிய விஜயேந்திரன், என் சொந்த மைச்சான். பாலசூரியன், மைத்துனன் முறையானவன். சபேசன் நெருங்கிய நண்பன். கலை, இலக்கியம் பற்றிய உரையாடல் எங்களிடம் எப்போதும் இருப்பதுண்டு. அப்போது கலை, இலக்கியம் பற்றிய எங்களது தேடலுக்கு வழிகோலியவர்கள் ஆதவன், சேரன் ஆகியோர். எமது வாழ்விடமான அளவெட்டி, கலை இலக்கியத்தில் முதன்மையான கிராமமாக இருந்தது. அவ்வாறே நாங்கள் படித்த மகாஜனக் கல்லூரியும். அங்கு ஒவ்வொரு வருடமும் சிறுகதை, கவிதைப் போட்டி நடைபெறுவதுண்டு. நாம் பங்கேற்போம். அத்துடன் மகாஜனாக் கல்லூரியின் நூலகம், நிறைந்த தரமான நூல்களால் ஆனது. ஒவ்வொரு வாரமும் இரண்டு பாடவேளைகளை நாம் நூலகத்தில் பயன் படுத்துவது கட்டாயமாக்கப் பட்டிருந்தது. நூல்களை வீட்டுக்கும் எடுத்துச் சென்று வாசித்துவிட்டு, கொண்டு வந்து வைக்கலாம். பொறுப்பாக நூலகர் ஒருவர் இருந்தார்.

மஹாகவி, அ.செ.முருகானந்தம்... முதலான ஈழத்தின் உன்னதப் படைப்பாளிகள் எமது அயலில் வாழ்ந்தனர். மஹாகவி, சிறுவயதிலேயே காலமாகியமையால் எங்களுக்கு அவர் அவ்வளவு பரிச்சயமற்றவர். ஆனால் அவரது கவிதை நூல்கள் மிகமிகப் பரிச்சயமாக இருந்தது. எங்களூரவர் எனும் பெருமிதமும் அதனுள் அடங்கும். அ.செ.மு. அவர்களை ஒவ்வொருநாட் பின்னேரங்களிலும் சந்தித்துக் கொண்டோம்.

மகாஜனாக் கல்லூரியில் எங்களது விஞ்ஞான ஆசிரியராக இருந்த மயிலங்கூடலூர் பி.நடராசன், எங்களுக்கு உற்ற வழிகாட்டியாக இருந்தார்.

"சிறுபிள்ளை வேளாண்மையாக" ஒரு சஞ்சிகை தொடங்குவமோ என்று யோசித்தோம். அப்படி யோசிக்கவைத்தவன் சபேசன். அதுவரை நாங்கள் கையெழுத்துச் சஞ்சிகைக்கு அப்பால் யோசித்த தில்லை. கையெழுத்துச் சஞ்சிகைகள் இரண்டு, மூன்று வெளியிட்டுமிருக்கிறோம்.

அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து மல்லிகை, அலை, சமர் ஆகிய சஞ்சிகைகள் வெளியாகின. நாங்கள் தொடங்கப்போகும் சஞ்சிகை, அவற்றிலிருந்து வேறுபட்டதாக இருக்கவேண்டும். அதேசமயம் "புதுசாக" இருக்கவேண்டும். எமது கல்லூரியின் நூலகத்தில் வைத்து நான்தான் "புதுசு" என்று சஞ்சிகைக்குப் பெயர் வைத்தேன். உடனே விஜ யேந்திரன் "சோக்காயிருக்கு" என்றான். அப்படியாயிற்று நமது சஞ்சிகையின் பெயர்.

"புதுசு" 1980, யூன் மாதத்தில் முதலாவது இதழ் வெளியாயிற்று. முதலாவது பிரதியை அளவெட்டி, கூட்டுறவாளர் வீதியில் – ஜெயா அச்சகத்தின் முன்னால் – வைத்துப் பெற்றுக்கொண்டவர், மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்கள். அது மதியமாகக் கடும் வெய்யில் எறித்த நேரம்!

அளவெட்டி ஜெயா அச்சகத்தில் ஐநூறு பிரதிகள் அச்சிட்டோம். அப்போது அது பெருந்தொகை தான். அசட்டுத் துணிச்சல் என்றுதான் அதனைச் சொல்லவேண்டும். "புதுசு"வைத் தொடங்கியதே ஒரு வகையில் அசட்டுத் துணிச்சல்!

1987, மார்ச் மாதத்தில் "புதுசு"வின் 11வது இதழ் வெளியாயிற்று. வெளியாகி ஒரு கிழமையிலேயே அதுதான் இறுதி இதழ் என்பது எனக்குத் தெளிவாயிற்று. அதற்குப் பின்னணியில் ஓர் அரசியல் உண்டு. அது இங்கு, இப்போது தேவையற்றது.

"புதுசு"வைத் தொடங்கிய நால்வரில் மூவர் ஒவ்வொருவராக நாட்டைவிட்டு வெளியேறினர். நான் தனித்துப் போனேன். ஆயினும் ஐந்தாவது இதழிலிருந்து பதினோராவது இதழ் வரை நான் தனித்தே "புதுசு"வை நடத்தினேன். பட்ட சிரமம் சொல்லுந்தரமன்று. அதை இப்போது சொல்லப் "பஞ்சி"யாக இருக்கிறது.

ஈழத்து இலக்கிய உலகில், என்னைச் சிறு கதைப் படைப்பாளியாக அறிந்ததிலும் பார்க்க, "புதுசுரவி" என அறிந்தோர் அதிகம் என்பேன்!

**பரணீ:**

**ஈழத்து இலக்கிய வரலாற்றில் "புதுசு" சஞ்சிகை ஏற்படுத்திய மாற்றம்?**

**அ.இரவி :**

தேசிய இன முரண்பாடு கூர்மையடைந்த காலத்தில் (எண்பதுகளில்) "புதுசு" வெளியாகின்றது. இன்னும் சொல்லப் போனால் ஆயுதப்போராட்டம் முகிழ்த்த காலம் என்றும் அதனைச் சொல்லலாம். மிதவாத அரசியல் தலைமைகளின் போலித்தன்மை துகிலுரியப்பட்ட காலம் அது. ஈழத்தமிழர் வரலாற்றில் எண்பதுகள் மிக முக்கியமானதொரு காலம். புதுசுகளைப் பொறுத்து அது ஒரு முதிராப் பருவம். ஆயினும் போலியற்று, உண்மைக்கு நெருக்கமாக நின்றோம். அதனால் நாம் அரசியல், கலை இலக்கியம் என்ற இரண்டிலும் எம்மிடம் இருந்த இரண்டு கால்களையும் வைத்தோம். எனவே கலை இலக்கியச் செயற்பாடுகளுக்குச் சமாந்தரமாக அரசியற் செயற் பாடும் எம்மிடையே இருந்தது. இது "புதுசு" சஞ்சிகை யிலும் பிரதிபலித்ததாக, பேராசிரியர் நா.சுப்பிரமணிய அய்யர், "ஈழநாடு" பத்திரிகையில்(1985) தொடராக எழுதிய ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுவர்.

இலங்கைத் தமிழில் வெளியான முக்கியமானதொரு கவிதைத் தொகுப்பு, "மரணத்துள் வாழ்வோம்" (1985) என்பதாகும். அதில் வந்த அனைத்துக் கவிதைகளும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பானவையே. முருகையன், இராமலிங்கம், சண்முகம் சிவலிங்கம், வில்வரத்தினம், ஜெயபாலன், சேரன்... முதலான ஈழத்தின் முக்கியமான கவிஞர்களின் கவிதைகள் அந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்புக்கான அதிக கவிதைகளைத் தந்தது, "புதுசு" சஞ்சிகையே. அத்தொகுப்பு வெளி வந்தபோது, "புதுசு"வின் ஏழு இதழ்கள் மாத்திரமே வெளியாகியிருந்தன. ஏழு இதழ்களிலிருந்து அதிக கவிதை தந்தது என்பது இலேசான காரியமல்ல. எம்முள்ளிருந்த அரசியல் உணர்வே அதன் காரணம்

என்பேன்.

இனப்பிரச்சினை தொடர்பான கவிதைகளை வெளியிட்டது மாத்திரமல்ல, புதிய கவிஞர்களாகப் பலரை அறிமுகப்படுத்தியிருந்தது, “புதுசு”.

**பரணீ:**

**“புதுசு” சஞ்சிகையை ஏன் தொடர்ந்து கொண்டுவர முடியாமல் போனது?**

**அ.இரவி :**

*1980, யூன் மாதத்தில் முதலாவது இதழ் வெளியாயிற்று. 1987, மார்ச் மாதத்தில் “புதுசு”வின் 11வது இதழ் - இறுதி இதழ் - வெளியானது. ஆறாவது இதழிலிருந்து “புதுசு” வெளியாவதற்கு நான் மாத்திரமே பொறுப்பாக இருந்தேன். விளம்பரம் சேகரித்தல், மலிவாகத் தரமாக அச்சிட்டுத் தரும் அச்சகம் தேடுதல், ஆக்கங்களைத் தேடி ஓடுதல், அச்சகம் செல்லல், விநியோகித்தல்... என்று அனைத்து வேலைகளும் என் தலையில் பொறிந்தது. இராணுவ அச்சுறுத்தல், ஷெல்லடி, விமானக் குண்டுவீச்சு, பீரங்கித் தாக்குதல்.... இவற்றிற்கிடையே விளம்பரம் சேகரிப்பதும் அச்சகம் செல்லலும் சஞ்சிகையை விநியோகம் செய்வதும் விளம்பரம் தந்தோரிடம் சென்று பணம் வாங்குவதும் இலேசான காரியமல்ல. சஞ்சிகைக்குரிய ஆக்கங்கள் பெறுவதும் எளிதல்ல. அதனால் பின்னைய இதழ்களில் மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் பெரிதும் பிரசுரமாகின.*

*இவற்றுக்கும் அப்பால், இச்சஞ்சிகை வெளியாவதின் தடையாக இரண்டு தவிர்க்கமுடியாத காரணங்கள் இருக்கின்றன. அவற்றைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அக்காரணங்கள் என்னை வந்தடைந்தபோது மிகவும் மகிழ்ச்சியுற்றேன். காரணம், அவ்வளவு களைப்பு எனக்கு.*

**பரணீ:**

**உங்கள் முதல் நூல், அதன் தோற்றம்?**


**அ.இரவி :**

*“காலம் ஆகிவந்த கதை” அச்சில் வெளியான எனது முதலாவது படைப்பு. 2003இல் புதுக்குடியிருப்பில் இருந்த செவ்வானம் பதிப்பகம் அதனை வெளியிட்டது. ஓரிரு மாதங்களிலேயே தமிழ்நாடு விடியல் பதிப்பகம் அதனது இரண்டாவது பாதிப்பை வெளிக்கொணர்ந்தது. இந்நூல் வெளிவர கவிஞர் கருணாகரனின் ஆர்வமும் உழைப்பும் முக்கிய காரணம் என்பேன். அதற்கு இப்போதும் நன்றி சொல்கிறேன்.*

*1980இல் எனது முதலாவது சிறுகதை வெளியாயிற்று. அதன் பிறகு சுமார் இருபது சிறுகதைகள் எழுதிப் பிரசுரமாயிற்று. ஆயினும் தொகுப்பு எதுவும் வரவில்லை. தொண்ணூறுகளின் பிற்பாதியில் நான் புலம்பெயர்ந்த பின்னர், என்னுள் ஏதோ ஒரு வெறுமை குடிகொண்டது.*

*படித்த படிப்புக்கு உரிய வேலையில்லை. ஐபிசி தமிழ் வானொலி, ரிரிஎன் தொலைக்காட்சி ஆகியவற்றில் தயாரிப்பாளராக இருந்த பின்னர், அநேகமாகக் கூலிவேலைகளில் ஈடுபட்டுத்தான் எனதும் எனது குடும்பத்தினரினதும் வயிற்றைக் கழுவினேன். அக்காலத்தில் விரக்தியில் உழன்றது என் மனசு.*

*இன்னுமொன்று, ஊரை நாட்டைப் பற்றிய ஏக்கம் என் மனசுல வியாபித்தது. சின்ன வயசு*



*சிறுகதைத் தொகுப்புகள் என்றுதான் சொல்கிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை.*

*நாவல் எழுவதிலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளேன்.*

**பரணீ:**

**பண்பாடு, கலைஞர், கிராமியம் சார்ந்த கட்டுரைகளை எழுதியுள்ளீர்கள். அவை நூலுருப்பெற்றனவா?**

**அ.இரவி :**

*இல்லை.*

**பரணீ:**

**ஈழத்து இலக்கியம் பற்றி?**

**அ.இரவி :**

*வாசித்தது குறைவு. என்றாலும் வாசித்த அளவில் சொல்கிறேன், நவீனத்துவமான படைப்பினைக் காண முடிகிறது. ஆனால் எழுதுபவர்கள் குறைவு என்றே நினைக்கின்றேன். பிரசுரகளம் குறைவு என்பது அதன் காரணமாக இருக்கலாம். நிறைய வாசிக்கவேண்டும். தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் வலிமையைப் பெற வேண்டும். புலம்பெயர் தேசங்களில் ஈழத்துப் படைப்பாளிகள் ஓரளவு எழுதுகிறார்கள் என்பது என் கருத்து.*

**பரணீ:**

**ஈழத்து இலக்கியத்தை வளம்பெறச் செய்ய என்ன செய்யவேண்டும்?**

**அ.இரவி :**

*எனக்கு இதுகுறித்து எதுவும் சொல்ல விருப்பமில்லை. ஈழத்தில் இருக்கும் படைப்பாளிகள்தாம் அதுகுறித்துச் சிந்திக்கவேண்டும். ஈழத்தில் நிறையப் புத்தகசாலைகள் உருவாகியிருப்பது ஆரோக்கியமானது என்பது என் கருத்து.*

**பரணீ:**

**எந்தத் துறையில் ஈழத்து இலக்கியம் கொடிகட்டிப் பறப்பதாகக் கருதுகிறீர்கள்?**

**அ.இரவி :**

*சந்தேகமில்லாமல், கவிதைத்துறை! இலக்கியமல்லா விடினும் நாடகம், அரங்கியல் துறைகளையும் குறிப்பிட லாம். ஆனால் இப்போது இவற்றைக் குறிப்பிடலாமோ என்று தெரியவில்லை.*

**பரணீ:**

**புலி எதிர்ப்பு இலக்கியம் பற்றி?**

**அ.இரவி :**

*அது ஒருவகை நோய். படைப்பு, உண்மையிலிருந்து, மனதிலிருந்து எழ வேண்டும். காழ்ப்பு உணர்விலிருந்து எழுவதனை இலக்கியமாக நான் கருதுவதில்லை.*

**பரணீ:**

**இன்றும் ஈழத்தில் உள்ள சாதிய அமைப்புகள், கட்டமைப்புகள் பற்றி?**

**அ.இரவி :**

*தமிழ்நாட்டுடன் ஒப்பிடுகையில் ஈழத்தில் அவை வலுவிழந்து இருப்பதாகக் கருதுகிறேன். ஆனால் இல்லை என்று சொல்லமாட்டேன்.*

**பரணீ:**

**உங்களுடைய மாஸ்ரர் பீஸ்?**

**அ.இரவி :**

*இன்னும் வரவில்லை.*

**பரணீ:**

**இன்னும் எழுதவேண்டும் என்று நினைத்துள்ள ஏதேனும் உண்டா?**

**அ.இரவி :**

*நிறைய உண்டு.*

*இப்போது எனக்கு வாலாயமாக வரக்கூடிய படைப்பு என்றால் அது நாவல்தான். ஈழத்தமிழர் வாழ்வின் நெருக்கடிகள், போராட்டங்கள், பண்பாட்டு விழுமியங்கள்... என்று பல உள்ளன.*

*எழுதவேண்டும்.*

*அது முக்கியம்.*

*அதேசமயம் கலைத்துவமாகவும் அவை அமைய வேண்டும்.*

*எழுத்தே சிறந்த ஆவணம். எனக்குக் கிடைத்த, நான் உணர்ந்த அனுபவங்களை எழுதுவேன். அதே போல எழுதத் தெரிந்த எல்லோரும் எழுத வேண்டும் என்பது என் பெருவிருப்பு.*



அ.இரவி

# ஒரு மழை நேரத்துச் சோகம்போல

*மழைநேரத்துச் சோகம் அறிவாயோ?*

*மழைநேரத்தைப்பற்றி உனக்கு அதிகம் தெரியும். வெள்ளம் அளைந்திருப்பாய், வழுக்கி விழுந்திருப்பாய். ஆனால் மழைநேரத்தில் வரும் சோகத்தை நீ எப்படி அறிவாய்? நெஞ்சார எப்படி உணர்வாய்?*

*அதனை எப்படி நான் உனக்குப் புரியவைப்பேன்?*

*ஒரு மழைக்காலத்து மாலைப்பொழுதில் புல்வெளியில் நடந்திருக்கிறாயா? அப்பொழுதில் வாகை மரத்தின் கீழே இருந்திருக்கிறாயா? இலையிலிருந்து விழும் ஒவ்வொரு துளியும் உன் தலையில் சொட்டி யிருக்கிறதா? மழைச்சாரலுடன் கூடிய ஈரக்காற்று உன் நெஞ்சைத் தடவியிருக்கிறதா? மப்பான வானம் கவிந்து உலகை மூடியதைப் பார்த்திருக்கிறாயா?*

*கொஞ்சம் கவனி!*

*இந்த இடத்தில் ஒரு மெலிதான சோகம் உன்னை உசுப்பி யிருக்குமே. உன் தனிமையை அது உனக்கு உணர்த்தி யிருக்குமே. "யாருமே எனக்கில்லை" எனும் வெப்பியாரம் அப்போது வந்திருக்குமே. வானின் கறுப்புத் திரட்சி யாவும் உன் நெஞ்சில் கவிந்திருக்குமே....*

*ஏன் அதிகம் போவான்?*

*மழை பெய்து ஓய்ந்த ஒரு பின்னேரத்தில் தனித்திருந்த படி, காதலில் தோய்ந்த கதையொன்றினை (அன்ரன் செக்கோவின் "மாடவீடு" ஞாபகமிருக்கிறதா?) வாசித்துப் பார்!*

*அப்போது உணர்வாய் அந்தச் சோகத்தை!*

*நெஞ்சை நிறைக்கிற சோகம்!*

*மழைக்காலம் அழகானது என்பது பற்றி நான் எதுவும் வாதிக்க வரவில்லை. மிகமிக அழகு!*

*தூறலும் சிணுங்கலும் துமியும் சீறலும் கொட்டு மழையும் கூரையின் சடசடப்பும் வெள்ளமும் வடிந்தோடும் வேகமும்...*

*வெள்ளக்காடும் குளத்துநீர்ப் பெருக்கமும் பெருக் கெடுக்கும் ஆறும் ஆழக்குமுறிக் கொந்தளிக்கும் கடலும்...*

*மின்னலும் இடியும் முழக்கமும்...*

*ஊரே பச்சையாகப் பூத்துக் குலுங்குகிற இரம்மியமும்...*

*மழைநாட் பின்னேரத்துக்குச் சுடச்சுட றொட்டியும் வெறும் தேத்தண்ணியும்...*

*குளிரும் நடுக்கமும் போர்வைக்குள் குடங்கிப் படுத்த நித்திரையும் விடிய எழும்பவிடாத வெடவெடப்பும்...*

*மழைநாட்கள்போல் ஒன்று வருமா நமக்கெல்லாம்?*

*ஆதலால் மழைநாட்களை நான் வெறுப்பேனா? யார் வெறுப்பார்?*

*ஆயினும் அதிலுள்ள சோகத்தைத்தான் நான் குறிப்பிடு கிறேன். அதுகூட நினைத்து நினைத்துச் சிலிர்க்கக்கூடிய சோகம்! மனதின் மெலிதான நரம்புகள்மீது தொடர்ந்து ஓர் அதிர்வு இருக்குமாப்போல, நெஞ்சை விம்மவைக்கும் ஒரு சோகம்!*

*இந்த அனுபவம் இதுவரை உனக்குக் கிட்டவில்லையா?*

*பரவாயில்லை, இனிவரும் மழைக்காலத்தைக் கொஞ்சம் கவனி.*

***

மீரா... ம்... வாடைக்காற்று குளிரக்குளிர வீசும் கடலின் கரையுள்ள சிறு பட்டினத்திலிருந்து அவள் வந்திருக்கிறாள். சோளகம் உசுப்பும் தோட்டங்கள் நிறைந்த கிராமத்திலிருந்து நான் வந்திருக்கிறேன்.

ஆங்கில வகுப்புடன் ஆரம்பமாகிறது. எட்டுக் குழுக்கள். ஆக ஆங்கிலம் தெரிந்தவர்கள் முதலாம் குழு.

புஷ்பலதா, சேவியர், அரசன், சுகந்தி, மோகனா...

நான்... மீரா...இன்னும் சிலர்... பன்னிரண்டு பேர்!

மூன்றுமாத ஆங்கில வகுப்பு முடிகிறது. பிறகு மூன்று பிரதான பாடங்கள் எடுக்கவேண்டும். ஓராண்டுப் படிப்பு அது. பிறகு அதில் ஒரு பாடத்தில் சிறப்புப் படிப்பு. அப்படிப்பில் பின்னும் மூன்றாண்டுகள் கழியும்.

நான்கு வருடங்கள் முழுதாக நான்கு வருடங்கள்!

மீரா நேற்று வந்தாள், இன்றைக்கு வந்தாள்... என்பதை விட நாளைக்கு வருவாள், இன்னும் நான்கு வருடத்திற்கு வருவாள்!

முழுதாக நான்கு வருடங்கள்!

முதலாம் வருடம். இருவருக்கும் பிரதான பாடங்கள் மூன்றும் ஒன்றாயிருந்தது. அரசியல், பொருளியல், சமூகவியல்!

"வெரி குட்..." என்றாள். திட்டமிட்டு எதுவும் நிகழவில்லை. என்னுள் எதுவோ பொங்கிப் பூரித்தது. அவளது ஒரு கையை எனது இரண்டு கைகளில் பொத்தினேன். மேற்கண்ணால் என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

இருவரும் ஒன்றாகவே அத்தனை விரிவுரை வகுப்பு களுக்கும் சென்றோம். அவளாக என் அருகில் அமர்ந்தாள்.

எனக்குப் பல்கலைக்கழகம் இனித்தது, வாழ்வு இனித்தது.

ஒருமுறை கையைப் பிடித்துச் சாத்திரம் பார்த்தாள். "எனக்கு உதிலை நம்பிக்கை இல்லை.." என்றேன். "எனக்கு நம்பிக்கை இருக்கு... விடுங்கோவன்..." என்றாள்.

"நல்லாய் படிப்பியள்... கெட்டிக்காரன்... கலியாணம்.. ம்... உங்களோட படிக்கிற பிள்ளைதான்... காதல் கலியாணம்... இடையில கொஞ்சம் பிரச்சினை வரும்... அந்தப் பிள்ளை உங்களைவிடக் கொஞ்சம் கெட்டிக்காரி..." அவளது சிரிப்பில் குறும்பு இருந்தது.

"உங்கன்ரை சாத்திரமும் நீங்களும்..." என்று கையை உதறி எழுந்தேன். அவள் இன்னும் சிரித்தாள்.

"சிரிக்காதையடி.." என்று மனசு சொல்லிற்று.

விரிவுரை முடிந்த பின்னேரங்களில் அவள் நூலகம் செல்கிறாள். மோகனாவும் கூடப் போகிறாள். இருவரும் ஓர் அறையைப் பகிர்ந்தவர்கள். அந்த அறை ஒரு வீட்டின் மேல்மாடியிலிருக்கிறது. கீழே தார்வீதி இருக்கிறது. அந்தத் தார்வீதியில் நான் சைக்கிள் ஓடி என் அறைக்குச் செல்வேன்.

மேல்மாடிவீடு வந்தவுடன் என்னை அறியாமலே

மேல்நோக்கிப் பார்க்கின்றேன். அநேகமான நேரங்களில் அவள் கண்களும் கீழே தாழ்த்தி இருக்கின்றன.

ஒரு சிரிப்பு, ஒரு கையசைப்பு, ஒரு தலையாட்டல்.

அறைக்கு வந்து குதூகலித்து நானொரு குளியல் போடுவேன். பின்னேரத்தில் மீண்டும் ஒரு புதியநாள் எனக்குப் பிறக்கிறது.

ஒன்பது மணிக்கு விரிவுரை என்றாலும் ஏழு மணிக்கே பல்கலைக்கழகம் வந்து நூலகம் சென்றுவிடுவாள். அப்படிப் போவதற்கு அவள் காரணமா மோகனா காரணமா தெரியாது.

மோகனாவை நூலகத்தில் விட்டுவிட்டு எட்டு மணியளவில் அவள் வெளியே வந்துவிடுவாள்.

அவள் கண்களால் என்னைத் தேடுவாள். கண்கள் அங்கும் இங்கும் என அலைபாயும். என்னைக் கண்டவுடன் அவள் கண்களில் ஒரு முற்றுப்புள்ளி! பிறகு ஒரு புன்னகை. அதன்பிறகு கண் தாழ்த்தி ஒரு காதல் பார்வை!

அவள் கண்களில் அதனை நான் கண்டேன். எனக்குப் பெருமையாக இருந்தது. என் நெஞ்சில் நான் நெக்குருகி நின்றேன். ஓர் அழகிய சின்னப்பெண், காதல் ததும்பி வழியும் கண்களால் என்னைத் தேடுகிறாள்! சிவலைப்பெட்டை! ம்.. யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்?

தானாகக் கனிய விடுவதா, அல்லது தடி எடுத்து அடித்துக் கனியவைப்பதா? அம்மா, எப்போதும் எனக்குப் பொறுமை குறைவு என்கிறா.

தாளாமல் சொன்னேன்:

"மீரா உங்களோட கொஞ்சம் கதைக்கவேணும்..."

"என்ன விசயம்... ம்ம்.." சொண்டு சுழித்தாள். அப்பிடியெல்லாம் செய்யக்கூடாது அவள்!

"இது... இது.. ஆறுதலா அமைதியாக் கதைக்க வேணும்... பிறகு கதைப்பம்..."

"பிறகெண்டால்...?"

"பிறகுதான்... பின்னேரம்போல..."

நான் விரிவுரைக்குப் போகவில்லை. என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று, வாகைமரத்தின் கீழ் இருந்து ஒத்திகை பார்த்தேன். இதுவரையிலும் யார்கிட்டவும் காதலைச் சொன்ன எந்த அனுபவமும் எனக்குக் கிடையாது. யார்மீதும் காதல் வசப்பட்டதில்லை என்றும்தான் தோன்றுகிறது.

பல்கலைக்கழகத்துக்கு நான் படிக்க வந்தது காதலிக்கத்தானோ?

ஐந்துமணிக்கு விரிவுரை முடிந்தபோது தாவித்தாவி ஓடி வந்தாள்.

"என்ன விசயம்... சொல்லுங்கோ... பிறகு கதைப்ப மெண்டியள்.. எனக்கு லெக்சர் ஒண்டும் உள்ளடேல்லை... பேரின்பநாதன்சேர் ஏதோ அலட்டிறமாதிரி இருந்தது... சொல்லுங்கோவன், என்ன விசயம்... இப்ப நீங்கள் கதைக் காட்டில் பிறகு இரவைக்கு எனக்கு நித்திரையும் இல்லை..." முகத்தை நிமிர்த்தி என் கண்களைப் பார்த்தபடி இருந்தாள்.

"வாங்கோ அந்த மரத்துக்குக் கீழை ,ருந்து கதைப்பம்..."

புத்தகக்கட்டை நெஞ்சில் அணைத்து அருகில் நடந்தாள். மெதுநடை வைக்கின்ற மயில்போல. மணவறை யைச்சுற்றி இப்படித்தான் என் கை பிடித்து நடப்பாளோ?

வாடைக்காற்றின் சிலிர்ப்பில் சுருண்ட முன்மயிர்கள் அவள் நெற்றியை அளைந்தன. கறுப்புப் பொட்டை நெற்றி யில் இட்டிருந்தாள். அது இன்னும் மூன்று நான்கு வருடங் களுக்குத்தான். பிறகு குங்குமம் நெற்றியிலும் உச்சியிலும்!

கல்லாசனத்தில் என் முன் அமர்ந்தாள். அவளது கண்கள் என் கண்களைக் குத்தி இழுத்தன. "அப்பிடிப் பார்க்காதையடி" என்று மனசு சொன்னது. நான் முகத்தைத் திருப்பினேன்.

அது மஞ்சள் நேரம்! பின்னேரச் சூரியனின் பின்னணி யில் நூலகம். கூடுதலாகப் பெண்கள்தான் அதிலிருந்து இறங்கிப் போனார்கள். அவர்களது தலைமயிர்க்கற்றைகள் சூரிய ஒளியில் செம்பட்டையாக மினுங்கின. பின்னேரம் என்றாலே, பெண்களென்றாலே ஓர் அழகுதான்.

"என்ன அங்கை ஒரே பார்வை..." என்று திடுக்கிட வைத்தாள் மீரா. "என்ன விசயம்.... சொல்லுங்கோவன்..."

"மீரா, இதைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீங்களோ எனக்குத் தெரியாது.. எனக்கு டக்கெண்டு கேட்கவேணும் போல.. இடையில நீங்கள் ஒண்டும் கதையாதையுங்கோ... நான் கதைச்சு முடிச்சாப்பிறகு நீங்கள் சொல்லுறதைச் சொல்லுங்கோ... எனக்கு உங்களிலை விருப்பம்... நல்ல விருப்பம்... சத்தியமாச் சொல்லுறன், நான் இப்பிடி யாரையும் விரும்பினதில்லை.. அம்மாவிலை தங்கச்சியிலை அன்பு இருக்கு.. அது வேறை... அவையளிலை இருந்து விலத்தி உங்களிலை எனக்கு பிரத்தியேகமான விருப்பம்...

... எனக்கு உங்கன்ரை போக்குப் பிடிச்சுது.. கதைகள் பிடிச்சுது... உங்கன்ரை ஒவ்வொரு அசைவும் என்னை நல்லாய் பாதிக்குது... நீங்கள் என்னுடையவள் எண்டால் அதைப்போல சந்தோசம் வேறை என்ன இருக்கு... நீங்கள் எனக்குப் பக்கத்தில இருக்கிறதெண்டால் எந்த நேரமும் சோளகம் வீசிற மாதிரித் தான்... நீங்கள் ஓமெண்டால் என்ரை இன்னொரு உயிரா உங்களை நான் நினைப்பன்.."

எனக்கு மூச்சு முட்டிற்று. நானா இவ்வளவும் கதைக் கிறேன்? என்னிடம் இவ்வளவு சொற்களும் வார்த்தைகளும் இருக்கா? எது கதைத்தபோதும் மீராவின் முகத்தைப் பார்க்க வில்லை. அவள் அருகில் இருக்கிறாளோவும் தெரியாது. நான் பரமேஸ்வரன் கோயிலைப் பார்த்தபடிதான் இவ்வளவும் கதைத்தேன்.

பிறகு பரமேஸ்வரனையும் உமாதேவியையும் மனசில வரித்தபடி, "ஆண்டவா இவளை எனக்காய் ஆக்கிவிடு..." என்று வாய் முணுமுணுத்தது.

"அவ்வளவுதானா?" என்று மீரா கேட்டாள்.

"இல்லை..." என்றேன். பிறகு சொன்னேன்: "இதிலை உங்கன்ரை விருப்பமும் இருக்கு... என்னை வாழ்க்கைத் துணை யாக்க உங்களுக்கு விருப்பம் இல்லாமலும் இருக்கலாம்.. இதிலை நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் எனக்குப் பிரச்சினை இல்லை... நாங்கள் ஒன்று சேராட்டிலும் பறவாயில்லை.. நாங்கள் இந்த மாதிரியே நல்ல நண்பர்களாக இருக்கலாம். ஒண்டை உறுதியாச் சொல்லுறன்.... நான் உங்களைப் பிறகு ஆய்க்கினைப்படுத்தவே மாட்டன்... நீங்கள் இதை புரிஞ்சு கொள்ளுவியள் எண்டுதான் ,வ்வளவும் நான் சொன்னனான்... நீங்கள் இண்டைக்கு முடிவு சொல்லவேணுமெண்டில்லை... பிறகும் சொல்லலாம்... ஆனால் எங்கன்ரை நட்பு முறியக் கூடாது... அது முக்கியம்.."

பிறகு சிரித்துக்கொண்டு கூறினேன்: "இரவைக்கு நித்திரை இல்லாமல் பண்ணினத்துக்கு மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

மீரா குனிந்துகொண்டு இருந்தாள். ஒருபோதும் நிமிரவில்லை!

சில கணங்கள், யுகம்யுகமாய் நீடித்தன. அப்படித் தான் எனக்குப்பட்டது. ஏன் அவள் நிமிர்கிறாளில்லை? கண்ணீர் ஒழுகுகின்றதோ? எனக்கு அவள் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லை. அவள் என்னுடன் இயல்பாகப் பழக, நான் முட்டாள்த்தனமாக அதனைக் காதல் என்று மனதுள் பீற்றிக் கொண்டேனோ?

ஆண்டவா, எதுவாயினும் இதிலிருந்து விடுதலை செய்!

மீரா நிமிர்ந்தாள். என் கண்களை அவள் கண்கள் ஆராய்ந்தன. பிறகு குனிந்தவாறே இதனைக் கூறினாள்:

"உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா... எனக்கு ஏற்கனவே ஒருத்தர் இருக்கிறார்... இவ்வளவு காலமும்

உங்களுக்கு இதைப்பற்றி நான் சொல்லாதது என்ரை படு பிழை... சொல்லியிருக்கவேணும்... மனவருத்தமாக இருக்கு. நான் பெரிய பிழை விட்டிட்டன்.... உங்களிட்டை நிறையக் கனவுகளை வளர்த்திட்டன் போலை .. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ... எனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை... மன்னிச்சுக் கொள்ளுங்கோ.."

அவள் கன்னத்தில் கண்ணீர், கோடாக இறங்கியது. பெரிய பெண்ணாக அப்போது அவள் எனக்குத் தெரிந்தாள். அவள் தன் கண்ணீரைத் தானே துடைத்துவிட வேண்டியது தான். அவள் கன்னத்தைத் தொட்டுத் துடைத்துவிட எனக்கு இப்போ எந்த உரிமையும் கிடையாது!

நான் ஒப்புக்கு ஒரு வாக்கியம் சொன்னேன்: "சீச்சீ.. இப்பிடியெல்லாம் சொல்லாதையுங்கோ... இதைப் பெரிசா எடுக்கவேண்டாம்... இதுக்குப்போய் அழுதுகொண்டு... நான் தான் பிழையா விளங்கியிட்டன்... என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

"அப்பிடிச் சொல்லாதையுங்கோ... முழுப்பிழையும் என்னிலைதான்.. நான் பொம்பிளைப் பிள்ளையா கவனமா நடந்திருக்க வேணும்... எல்லாம் விதி.. "

இதைச் சொல்லிவிட்ட பின் ஒருபோதும் அவள் என் கண்களைப் பார்க்கவில்லை. நூல்நிலையத்தைப் பார்த்தபடி இருந்தாள். பிறகு பரமேஸ்வரன் ஆலயத்தில் அவள் கண்கள் தரித்தன. பிறகு என்ன நினைத்தாளோ, தன் புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு போனாள்.

சூரியன் மறைந்தபோது, நான் தனித்து வாகை மரத்தின்கீழ் இருந்தேன். சூனியவெளி என்முன்னே இருந்தது.

தார்வீதியில் நான் போக, மாடிவீட்டை என் கண்கள் நோக்கவில்லை. அந்தநாள் எனக்குச் செத்துப் போயிற்று. குதூகலித்துக் குளிக்க என்னதான் இருக்கிறது?

நாளைக்கு அவள் கண்களை எப்படிப் பார்ப்பேன்?

அப்படி நான் நினைத்திருக்கத் தேவையில்லை. ஒன்றுமே நடவாததுபோல அவள் இருந்தாள். சூரியன், இரண்டு பனை ஏறியிருந்தபோது, நான் வளாகத்துக்குள் நுழைந்தேன். காத்திருந்ததுபோல அவள் என்முன்னே வந்தாள்.

"குட்மோர்னிங்.." மீராவின் முகத்தில் அன்றலர்ந்த காலைப்பூ மலர்ந்தது. தலைக்கு நீர் வார்த்திருக்கிறாள். சுருண்ட மயிர்க்கற்றையிலிருந்து இன்னமும் நீர் சொட்டியது. நெற்றியில் நீறு!

"வாங்கோ உங்களுக்கு நான் பால் வாங்கித் தாறன்.." என்று கன்ரீனுக்குக் கூட்டிப்போனாள். "நான் இண்டைக்கு விரதம்... அதுதான் பால்.."

நான் அவளுடன் கதைக்கும்போது ஒரு திரை விலகியதுபோல உணர்ந்தேன். என் மனதில் கள்ளம் கபடம் ஏதும் இல்லாது, சுத்தமாக்கப்பட்டிருக்கிறது.

நெஞ்சை நிமிர்த்தி, அவளுடன் விகற்பம் இல்லாது கதைத்தேன். அது மகத்தானதொரு மனநிலை. அழகியாக நல்லவளாக ஒரு பெண், நட்பாகக் கிடைப்பது இலேசான விசயமல்ல.

"எப்பிடி ஆள்?" என்றேன். "நெடுவல்" என்று சொல்லிச் சின்னிவிரலைக் காட்டினாள். விளங்கக் கஸ்ர மில்லை. "ஒல்லியானவனாம்"

மீரா, தன் காதல் எப்படி ஆனது என்று சொன்னாள்:

ஏ.எல். படிக்கிறபோது, இவளுக்குக் காதல் அரும்பத் தொடங்கியது. அவனுக்கு ஓ.எல். படிக்கும்போதே இவள்மீது மையல். இருவரும் ஒரே வகுப்பு அல்ல் ஒரே பாடசாலையும் அல்ல. கடல்காற்று வீசுகின்ற ஆண்கள் கல்லூரியில் அவன் படித்தபோது, அதே கடல்காற்று வீசுகின்ற அக்கல்லூரியின் சகோதரக் கல்லூரியான பெண்கள் கல்லூரியில் இவள் படித்தாள். ஒரே காற்று இருவர்மீதும் தழுவியது. அவன் ஒரு வகுப்பு அதிகம். அவன் கணிதப்பிரிவு படித்தபோது, இவள் கலைப்பிரிவு படித்தாள்.

அவன் ஏ.எல். எடுத்து, பல்கலைக்கழகம் போக இருந்த ஒரு வருடத்தில் ,வளைத் துரத்தத் தொடங்கினான். அவனை நிராகரித்தும் படிப்பை அனுசரித்தும் இவள் மூன்றுமாதம் ,ருந்திருப்பாள். அவனது ஆய்க்கினை இவளை உடைத்து விட்டது. நல்ல படிப்புப் படித்திருக்கிறான். தெத்துப்பல் தெரிய அழகிய புன்னகை. கண்ணாடி அணிந்திருக்கிறான். பெயர் தெரியாத காலத்தில் அவனைப் "புரொபசர்" என்று மனது சொன்னது.

அவனை மிக விரும்புகிற வேறு மூன்று பெண்களை இவளுக்குத் தெரியும். அதிலொருத்தி, ,வன் சைக்கிளில் தெருவில் போனால் ஓடிவந்து பார்க்கிறாள்...

அவன் காதலை யாசித்த விதத்திலும் கதைக்கும் மிருதுத் தன்மையிலும் நெஞ்சு ஈர்க்கப்பட்டது. அவன் மீதான காதலில், இவள் மிக விரைவாகவே ஓமென்று விட்டாள்.

அவன் இப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில்,ரண்டாம் வருடம்.

எனக்கு மேலும் தகவல்கள் தேவைப்படவில்லை. மீராவுக்கு என்னிலும்விட அவன் மிகப் பொருத்தம் தான் என்று தெரிந்தது.

"ஒருநாளைக்கு அவனை எனக்கு அறிமுகப்படுத்தி விடுங்கோ..." என்றேன்.

"அவனை என்ன அவனை..ம்.. "அவரை" எண்டு சொல்லுங்கோ.." என்று குறும்பாய்ச் சிரித்தாள். சாடையான வெட்கமும் அவள் முகத்தில் படர்ந்தது.

பிறகு சொன்னாள்: "வாற வக்கேசனுக்கை அவரைக் கூட்டிக்கொண்டு வந்து, உங்களைக் காட்டி "இவர்தான் இப்ப என்ரை காதலன்" எண்டு உங்களை அறிமுகப்படுத்தி விடுறன்..."

"அதுக்குத்தான் நான் குடுத்து வைக்கேல்லையே..." என்றேன்.

அப்போது அவள் வம்புச் சிரிப்புடன் கண்ணடித்தும் விட்டாள். கிறங்கிப் போனேன்.

பகிடிபகிடியாகப் பிறகு இதையும் சொன்னாள்: "நீங்கள் ஆரெண்டாலும் ஒருத்தியை உடனை காதலிக்க வேணும்... அப்பத்தான் எனக்கு நிம்மதி... மோகனா எப்பிடி... உங்களிலை அவளுக்கு நல்ல விருப்பம்போல.. அறையிலை எப்ப பார்த்தாலும் உங்களைப் பற்றித்தான் கதைப்பாள்... உங்களைப் பார்த்து வெட்கப்பட்டுச் சிரிக்கேக்கை உங்களுக்கு விளங்கேல்லையே... நான் மோகனாவிட்டை ஒருக்காக் கேட்டுப் பார்க்கட்டே...?"

"நான் சிரித்துக்கொண்டு காதைப் பொத்தி இருந்தேன். மீராவுக்குச் சொன்னேன்: "நீங்கள் ஓமெண்டால் சொல்லுங்கோ... எனக்கு வேறை ஒருத்தரும் வேண்டாம்..."

"அடீ..." அவள் சொண்டைக் கடித்து என்னை அடிக்க வந்தாள்.

***

மனதின் மெல்லிய நரம்புகள்மீது தொடர்ந்து ஓர் அதிர்வு இருக்குமாப்போல எதுவெதுவோ நிகழ்கிறது...

தாடியைப்பற்றியதுதான் முக்கிய பிரச்சினை என்றால் என்னால் அதை நம்ப முடியவில்லை. ஆரம்பத்தில் "ராக்கிங்" குக்குப் பயந்து "கிளீன் ஷேவ்" இல் வந்தேன். காலப்போக்கில் முகத்தில் தாடியின் சிறு அரும்பல் கண்டது.

மீரா முகத்தை உற்றுப் பார்த்தாள். "பிளேட் வாங்கக் காசில்லையெண்டால் வாங்கித் தரட்டோ.." என்று கேட்டாள். "எனக்கு விளங்கேல்லை..." என்றேன்.

"ஓம்.. உங்களுக்கு ஒண்டும் விளங்காது.." என்று சொன்னதில் கடுமை,ருந்தது. நான் வேர்த்துப் போனேன்.

"என்ன தாடிக்கோலம்.. எனக்குத் தாடிக்காரரைக் கண்டால் பிடிக்காது.."

"ஓ.. அதுவா பிரச்சினை.. ராகிங்காலை இவ்வளவு

காலமும் தாடியை வெட்டினான்... இப்ப அது தானா வளருது..."

"வேண்டாம்... வேண்டாம்.. வெட்டுங்கோ.."

எனக்கு அது ஒரு பிரச்சினையாகத் தெரியவில்லை. இருவரினதும் அந்நியோன்யத்துக்குத் தாடி ஒரு தடையாகத் தெரியவில்லையே! தாடி குத்தும்படி அவளை நானென்ன கொஞ்சவா செய்கிறேன்?

ஒவ்வொருநாட் காலையிலும் முதலில் கண்டவுடன் தாடியைப் பற்றியே பிரஸ்தாபித்தாள். "சீக், அரியண்டமா இருக்கு.. வெட்டுங்கோ..."

நான் ஒவ்வொருநாளும் ஷாம்பூ வைத்துத் தோய்ந்து மிக அழகாகத்தான் வெளிக்கிட்டு வருகிறேன். இவள் என்னைக் கண்டவுடன் சொல்கிறாள்: "சீக், அரியண்டம்..."

"அது இயற்கையானது.. விடுங்கோ..." என்றேன். தொனியில் கடுமை வரக்கூடாது என்று கவனமாக இருந்தேன். அவளது வெள்ளை முகம் சட்டெனச் சிவந்தது. "மீரா கோபிக் காதையுங்கோ... என்ரை ராசாத்தியல்லா.."

"ஓம்.. உங்கன்ரை ராசாத்திதான்... ம்.. ஆளைப் பாரன்... நான் புரொபசரின்ரை ராசாத்தி... தெரிஞ்சுதா.." என்றாள்.

"ஓம் ராசாத்தி தெரிஞ்சுது..." என்றேன். அவள் சிரித்துக்கொண்டு கிட்டே வந்தாள். அப்படியே இழுத்துக் கொஞ்சவேண்டும்போல இருந்தது.

அப்படியான ஒருநாட் காலையில் அவள் ஆச்சரியம் தாறமாதிரிக் கதைத்தாள்: "தாடியை வெட்டுங்கோ... அரியண்டமாயிருக்கு... ஏன், நான் சொன்னால் கேட்கிறீங்கள் இல்லை..." என்று இரங்கினாள்.

பிறகு சொன்னாள்: "ஏன் முகத்தைக் கெடுக்கிறியள்... தாடி இல்லாமல் இருக்கேக்கை சின்னப்பிள்ளை மாதிரி எவ்வளவு வடிவா இருந்தியள்... இப்ப காவாலிகள் மாதிரி... நான் உங்களுக்குப் பக்கத்தில படுக்கிறவளா இருந்தால் நீங்கள் நித்திரையா இருக்கேக்கையே தாடியை வெட்டிடுவன்..."

"ம்.. அதுக்குத்தான் நான் குடுத்து வைக் கேல்லையே..." என்று முணுமுணுத்தேன்.

முகத்தில் வெட்கம் படர, சிரித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்!

"சோஷல்" அன்றுதான் சற்று வித்தியாசமாகக் கதைத்தாள்.

இந்த இடத்தில் நான் "சோஷல்" என்றால் என்னவென்று சொல்லவேண்டும். பல்கலைக்கழகம் வரும் முதலாம் வருட மாணவர்களை ராகிங் செய்வது பெரும்பாலும் இரண்டாம் வருட மாணவர்கள். மூன்று மாதங்கள் அது நீடிக்கும். பின்னர் சுபமுகூர்த்த நாளொன்றில், "ராகிங் எல்லாம் முடிந்தது, நாம் இனி நண்பர்" என்று இரண்டாம் வருட மாணவர்கள், முதலாம் வருட மாணவர்களுக்கு இரவு விருந்தொன்று வைப்பார்கள். கலைநிகழ்ச்சிகள், சிறப்புணவு... என்று பல. அன்றிரவு கன்ரீனில் தேநீரை யாரும் குடிப்ப தில்லை, வேறொன்றைக் குடிக்கிறார்கள் என்பது முக்கியமான தொன்று. சரி, விசயத்திற்கு வருகிறேன்.

எங்கு விட்டேன்? ஆ.. "சோஷல்" அன்றுதான் சற்று வித்தியாசமாகக் கதைத்தாள்.

"இண்டைக்குச் சோசலுக்கு வருவீங்களா.. வருவீங்கள்தானே? ம்... நீங்கள் வரேக்கை தாடியை வெட்டிக் கொண்டு அழகனா வாறீங்கள்... ஒரு அழகுப்பெடியனை இரவைக்கு நான் பார்க்கப்போறன்... சரியா... இண்டைக்குத் தான் தெரியும், நீங்கள் என்னிலை அன்போ இல்லையோ எண்டு... தாடியை வெட்டிக்கொண்டு வராட்டில்... ம்.. அன்பில்லாத ஆக்களோட பிறகு எனக்கென்ன கதை?.. ம்..?"

நான் அப்போது புன்னகை சிந்தி அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்....

"இஞ்சை வாங்கோ உங்களோட ஒரு கதை..." என்று வாகைமரத்துக்குக் கீழே ,ழுத்துக்கொண்டு போனாள். என் காதலை அதுவும் முதல்காதலை ஒன்றுமே இல்லாததாக்கிய வாகைமரம்! போனநேரமும் சரியில்லாத் பொழுதுபோல. மூன்று மணிக்கு விரிவுரை முடிய, மத்தியான வெக்கை குறையாத நேரம்! இன்று - இப்ப வாகை, என்ன தீங்கு ,ழைக்கப் போகிறதோ?

"இருங்கோ.." என்று கல்லாசனத்தில் அமர்ந்தாள். அருகில் அமர்ந்தேன்.

எங்கள் இருவரையும் இப்போது எந்த மாணவரும் வித்தியாசமாகப் பார்ப்பதில்லை. காதலின் உச்சத்தில் நாமிரு வரும் திளைக்கிறோம் என்பது அவர்களது திண்ணம்!

"கனநாளா நான் கதைக்கவேண்டும் என்று ,ருந்தனான்.. எனக்கு உண்மையைச் சொல்லவேணும்... ம்.. சொல்லுவீங் களோ இல்லையோ... ம்.."

"சொல்லுவன்.. என்னெண்டு கேளுங்கோவன்..."

"நான் உங்களுக்குக் கிடைக்கேல்லை எண்டா தாடி வளர்க்கிறியள்...? ஆ..?"

"என்ன.. என்ன.. ஒருக்காத் திருப்பிச் சொல்லுங்கோ..."

அவள் பேசாதிருந்தாள். எனக்குக் கை பரபரவென்று துடித்தது. அவள் கன்னத்தில் ஐந்துவிரல்களும் பதியுமாறு ஓர் அறை!

எப்படி என்னை அடக்கினேன் என்று தெரியவில்லை. எனக்கு எதற்கும் உரிமை கிடையாது.

"இவ்வளவு காலமும் என்னோட திரிஞ்சு ,தா புரிஞ்சுகொண்டியள்... ஆ.. " நான் அவள் முகத்தைப் பார்க்க விரும்பவில்லை. கோபம் என் கண்களில் கொப்புளித்தது. அதை அவள் காணக் கூடாது.

அதை அவள் புரிந்தாளோ, என்னவோ, சிறிது நேரம் ஒன்றும் பறையாது இருந்தாள். நான் வாகைமரத்தின் உச்சியைப் பார்த்தபடி இருந்தேன். பிறகு,

"இண்டைக்குச் சோசலுக்கு வரேக்கை கட்டாயம் தாடியை வெட்டிக்கொண்டு வரவேணும்... சரியா.." என்று கூறிவிட்டுச் சடாரென எழுந்து போனாள்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டு இருந்தேன். அவளது நடையில் பெண்மை ஏதுமில்லை.

நான் எழுந்து போய்ச் சலூனுக்குச் சைக்கிளை விட்டேன்.

தலைமயிரைச் சீராக வெட்டியபிறகு தாடியையும் மீசையையும் சாடையாகக் கத்தரிக்கச் சொன்னேன்.

மீண்டும் ஷாம்பூவில் ஒரு தோயல். உடலெங்கும் ஓடிக்கொலோனைத் தெளித்து, சோசலுக்கு என்றே வாங்கிய புது சேர்டைட்யும் லோங்க்ஸையும் அணிந்து பார்த்தபோது, நீளக்கண்ணாடி "நீ அழகன்" என்று அடித்துச் சொன்னது.

கூந்தலைக் குதிரைவால் முடிச்சுப் போட்டு, நீலச் சேலை கட்டி மிக அழகியாகத் திகழ்ந்தாள், மீரா. இன்னொருக் கால் நெஞ்சின் ஏக்கம் என்னைத் தின்றது. பக்கத்தில் றோஸ் கலர் சீலையில் மோகனாவும் அழகியாக நின்றாள். ஆயினும் என் மனசு இன்னொருத்தியை இப்போது ஏற்பதற்கில்லை.

வாசல்வரை தன் பார்வையால் எனக்காகக் காத்திருந் தாள், மீரா. என்னைக் கண்டவுடன் அவள் கண்களில் அப்படி யொரு மலர்வு. முகத்தில் என்னவோ ஒரு வெட்கமும் கவிந்தாற்போல.

நான் கிட்டப்போய், "ரண்டுபேரும் நல்ல வடிவா இருக்கிறியள்..." என்றேன்.

"நெல்லுக்கு இறைச்ச நீர் புல்லுக்கும் பொசிஞ் சிருக்கு.." என்றாள் மோகனா.

"இல்லை, இல்லை மோகனா.. உண்மையாத்தான் சொல்லுறன்.." என்றேன்.

மீரா என்னை அப்படியே பார்த்துக்கொண்டு இருந்தாள். நான் அவளைப் பார்த்தவுடன் கண்களை வெட்டி,

சின்னச் செம்மையான சிரிப்பு. ஒரு காதலி, தன் உயிரனைய காதலனுக்கு மாத்திரம் வழங்குவதான புன்னகை!

"பிறகு அவள் என் தாடியைப் பார்த்தாள். "நீங்கள் சொன்னதுக்காகத்தான் தாடியை ,ப்பிடிக் கிளிப் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறன்..." என்றேன்.

"ஆனால் நான் சொன்னதை நீங்கள் செய்யேல்லையே..." என்றாள்.

"எடி பெட்டை..." என்றேன். பிறகு சிரித்துக் கொண்டு, "வானத்தை வில்லா வளைக்கவேணுமெண்டால் வளைக்கிறன்... நட்சத்திரங்களைத் தோரணமாக் கட்டுற தெண்டால் கொண்டுவந்து கட்டுறேன்... நிலவைப் பிடிச்சுத் தரச்சொல்லிக் கேட்டீங்கள் எண்டால் அதையும் கொண்டு வாறன்... தாடியைப் பற்றி மாத்திரம் ஒண்டும் கதையாதை யுங்கோ.." என்றேன்.

அவள் சிரித்துக்கொண்டு காதைப் பொத்தினாள்.

கலைநிகழ்ச்சிகள் முடிகின்ற சமயம், அவள் என்னைக் கூப்பிட்டாள். "இஞ்சை வாங்கோ.. கிட்ட வாங்களேன்..."

போனேன். அவள் மேலிலிருந்து குட்டிக்கூரா பவுடரின் சுகந்தம் வீசிற்று. இன்னும் அவளை நெருங்கலாம் போல. கன்னத்தோடு கன்னம் உரசலாம்போல. கொத்தாய் அவள் கூந்தலைத் தூக்கி அளையலாம்போல. அவள் கைகள் பற்றி முகரலாம்போல. கன்னத்திலாவது ஒரேயொரு முத்தம்!

அஃதொன்றுக்காகவும் அவள் என்னை அழைக்க வில்லை. என் காதோடு குசுகுசுப்பாகச் சொன்னாள்: "எனக்கு நித்திரை வருகுது.. நானும் மோகனாவும் ரூமிற்குப் போறம்... நீங்களும் இப்பவே உங்கன்ரை ரூமிற்குப் போனால் நல்லது... இஞ்சை மினைக்கெடாதையுங்கோ.. சரியா.. கன்ரீன் பக்கம் ஏன் போய்ஸ் அடிக்கடி போய் வரீனம்.. ஆ.. "தண்ணி" ஆறாய்ப் பாயுதுபோல... கவனமாய் இருங்கோ.. சரி நான் போட்டுவாறன்... இண்டைக்கு நீங்கள் நல்ல வடிவா இருந் தீங்கள்... வெரி ஸ்மார்ட்! நான்தான் அவசரப்பட்டிட்டன் போல. சரி அதை விடுங்கோ... இந்தச் சந்தோசத்தோடை நீங்கள் போய் நிம்மதியாய் படுங்கோ... சரியா.. நாளைக்கு லெக்சரிலை சந்திப்பம்... போட்டு வாறன்... குட்நைட்..."

மீரா போவதைப் பார்த்து நின்றதுபோல, தர்மா வந்து கையைப் பிடித்தான்.. "மைச்சான் உன்ரை பிள்ளை என்னவாம்... நல்ல வடிவான பிள்ளை உனக்கு கிடைச்சுது.. சரி வா அந்தச் சந்தோசத்தைக் கொண்டாடுவம்..." கன்ரீனுக்கு இழுத்துச் சென்றான்.

எனக்கு அதிகமாக "ராக்கிங்" செய்தவன் தர்மா. இரண்டாம் வருட மாணவன். ஆனால் அதே அவன்தான் பொருளியல் பாடத்தில் எனக்குப் புரியாத சில பாடங்களைக் கற்பித்தும் விட்டவன்.

"மைச்சான் இந்தா பிடி.." என்று கன்ரீனுக்குள் வைத்து கிளாஸை நீட்டினான். "எனக்கு ஒரு சொட்டும் பழக்கமே இல்லையடா தர்மா.." என்றேன்..

"பொய் சொல்லாதை..."

"சத்தியமாடா... என்ரை அம்மாவாணை..."

"அப்ப நீ கள்ளும் குடிக்கேல்லையோ..."

"இல்லையடா..."

"அப்பிடியா... சரி... இண்டைக்கு உனக்கு அரங் கேற்றம் எண்டு வையன்... கம்பசிலை இதுவும் ஒரு படிப்புத் தான்ரா... ம்.. உன்ரை மீராவை நினைச்சு ஒரு மிடறு குடி! பிறகு எனக்காக ஒரு மிடறு! அவ்வளவுதான். பிறகு நான் உன்னை வில்லங்கப்படுத்தேல்லை..."

பளிங்குபோன்ற அந்தக் கிளாஸைக் கையில் எடுத்தேன். மண்ணிறத் திரவம் அதில் தளும்பி நின்றது. "க்ளுக்.." ஒரு மிடறு!

பிறகு ஒரு மிடறு மாத்திரம் அல்ல!

"தர்மா, உன்னை மாதிரி ஒரு நல்லவனை நான் காணேல்லை... உனக்கு மாத்திரம் ஒரு ரகசியம் சொல்லுறன்.. மீரா என்ரை காதலி இல்லையடா... அவளுக்கு வேறை ஒரு காதல் இருக்கு.."

"என்னெடா.. இதென்ன புதுக்கதை... நீ எனக்குக் கதை விடுறாய் என்ன... பொய் சொல்லாதை..."

"உண்மையாத்தான்ரா சொல்லுறன்... அம்மா சத்தியமா..."

"என்னெடா நீ..."

"ஓமெடா..." நான் அழத்தொடங்கினேன்....

அதன் பிறகு என்ன நடந்தது, ஏது நடந்தது... எதுவும் ஞாபகமில்லை.

அடுத்தநாள், மூஞ்சையைத் திருப்பியபடி, மீராதான் அதை ஞாபகமூட்டினாள்!

காலை ஒன்பது மணி விரிவுரைக்கு நான் போகவில்லை போகமுடியவில்லை. எழும்பியபோதே பத்துமணிக்கு மேலாகிவிட்டது. அப்போதும்கூட நான் அந்தரத்தில் மிதந்தேன். நிலத்தில் கால் பாவவில்லை! பாத்ஷரூமுக்குள் குளிக்கப் போகாமல் கிணற்றில் உள்ள தொட்டிக்குள் தண்ணீர் நிரப்பி அப்படியே முக்குளித்துக் கிடந்தேன். தலையின் கனம் குறைந்த பிறகுதான் பல்கலைக்கழகம் போக முடிந்தது.

மீரா என்னைத் தேடிக்கொண்டிருக்கிறாள்போலப் பட்டது. ஆனாலும் என்னைக் கண்டவுடன் அவள் முகத்தைச் சடாரெனத் திருப்பினாள். "மீரா..." என்றேன். திரும்பியும் பார்க்கவில்லை. "மீரா.. " என்று கிட்டப் போனேன். அவள் விறுவிறுவென்று நூலகம் நோக்கிப் போனாள். பின் தொடர்ந்தேன். சட்டெனவே உள் நுழைந்தாள்!

எனக்கு எதுதானும் புரியவில்லை. நடக்கிறது நடக்கட்டும். அப்படித்தான் இருந்தேன்.

போனேன். கண்ணன் லொட்ஜில் வயிறு நிறையச் சாப்பிட்டேன். அப்படி வயிறு கேட்டது. அறையில் போய் ஒரு படுக்கை. அது தேவையாக இருந்தது.

பின்னேரம் இன்னொரு தோயல் போட்டுவிட்டு, இஞ்சித் தேநீர் குடிக்கச் சைக்கிள் எடுத்தேன். மீராவின் மாடி அறையின்கீழ்தான் சைக்கிள் போகவேண்டும்.

மேலே இருந்து கூப்பிடும் குரல் கேட்டது. காத்திருந் தாள் போலும். காலில் செருப்பில்லாது மாடிப்படிகளில் சட்டெனப் பாய்ந்து பாய்ந்து இறங்கினாள். உவப்பில்லாத ஓர் உரையாடல் நிகழப்போகிறது என்று அவள் இறங்கும் வேகம் சொன்னது.

"உங்களோட கொஞ்சம் கதை ,ருக்கு..."

"ம்...."

"இராத்திரி நாங்கள் போனாப்பிறகு என்ன நடந்தது?"

"ஒண்டுமில்லை..."

"ஒண்டுமில்லையோ..." சுருண்ட மயிர்கொண்ட சின்னத்தலை விகாரமாக ஆடியது. மீரா என்னைப் பார்த்தபடி நின்றாள். கோபம் கனிந்து, சிவந்து முகத்தில் ஏறியது.

"உங்கன்ரை கூத்துக்களெல்லாம் எல்லாருக்கும் தெரிஞ்சிட்டுது. மயங்கிக் கிடந்தியளாமே... ஆ.. தள்ளாடித் தள்ளாடித்தான் உங்கன்ரை அறைக்குப் போனியளாமே... ஆ.. அதுவும் நீங்களாய் போகேல்லை... ரண்டு மூண்டுபேர் உங்களைத் தாங்கிக்கொண்டு போனவையளாம்... எனக்கு எல்லாக் கதையும் வந்திட்டுது... ஒருத்தன் சொல்லுறான்.. "நல்ல பிள்ளை.. நல்ல பிள்ளை எண்டு பின்னாலை வழிஞ்சு திரிஞ்சியளே... ராத்திரி ஆளைப் பார்த்திருந்தால் ஆளோடை சீவியத்திலை கதைக்க மாட்டியள்..." எண்டு. எனக்குப் படு வெக்கமாய் போய்ச்சு... ஆத்திரமும் அழுகையும் வந்துது... ஏன் இப்பிடிச் செய்யிறியள்.... சீக், இப்பிடியெண்டால் நான் உங்களோட பழகியே ,ருக்க மாட்டன்... நான் ஆரோடை கூடப் பழகிறன்... உங்களோட மாத்திரம்தானே பழகிறன்.... வேறை ஆரோடையும் பழகிறனே.. நீங்கள் இப்பிடி யெண்டால்... சீக், சரியான வெக்கமாயிருக்கு.. உங்களைப் பார்க்க அரியண்டமா ,ருக்கு.. நீங்கள் எனக்கு வேண்டாம்...

குட் பை....” ஆவேசம் தலைவிரித்தாடியது.

சட்டெனத் தாவி மாடிப்படி ஏறினாள். மேலே பார்த்தேன், மோகனா பார்த்துக்கொண்டு நின்றாள்.

மாடிப்படி ஏறியவள் திரும்ப வந்து அமைதியாகச் சொன்னாள்: “இனிமேல் நீங்கள் என்ரை முகத்தில முழிக்க வேண்டாம்” அவள் அப்படிச் சொன்னபோது அழுதிருந்தாள்.

எனக்கு என்னவோ செய்தது. என் உயிர் என்னிடம் இல்லை. சைக்கிள் ஓட மறுத்தது. இஞ்சித் தேநீரை மறந்து விட்டேன். இராச்சாப்பாடுகூட இல்லை.

“இனிமேல் நீங்கள் என்ரை முகத்தில முழிக்க வேண்டாம்...”

பெண்ணாம் பெரிய வார்த்தை சொல்லியிருக்கிறாள். ஆன்மாவைக் குத்தி இழுக்கிற வார்த்தை! என் ஆளுமையை அப்படியே தூக்கி வானத்தின் அந்தரத்தில் எறிந்துவிட்ட வார்த்தை! நான் ஒன்றுமில்லாதவன் அல்ல, ஒன்றுக்கும் உதவாதவன்! எனக்கு இனி யாருமில்லை!

இரவிரவாக நித்திரை வராது தவித்தேன். எனக்கு யாருமில்லை! நான் காற்றடைத்த வெறும் பை!

அப்படித்தானா? எனக்கு யாருமில்லைத்தானா?

காலைச் சூரியன் எழமுன் எனக்குப் பதில் கிடைத்தது.

அம்மாவிடம் போனேன்! அம்மா சோறு தீத்தி விட்டா!

ஒருகிழமைக்கு மேலாக நான் பல்கலைக்கழகத்தை எட்டிப் பார்க்கவில்லை. காய்ச்சல் என்று வீட்டில் படுத்திருந்தேன்.

“இனிமேல் நீங்கள் என்ரை முகத்தில முழிக்க வேண்டாம்...”

ஒருகிழமைக்குப் பிறகு...

படிப்பை விடமுடியாது. வந்தேன். கண்கள் மீரா வைத் தேடின. மனசு, அவளைக் காண அஞ்சியது. விரிவுரைக் குப் போகாது, நூல்நிலையத்தில் ஒதுங்கினேன். ஒருக்கால் அவளைக் கண்டுவிட்டு விரிவுரைகளுக்குப் போகலாம்.

“அவள் என்ன சொன்னாள்?” இனிமேல் நீங்கள் என்ரை முகத்தில முழிக்கவேண்டாம்...”

என்ன செய்யலாம்... ம்...

எதிர்பாராத திகைப்பு, “வாசிக்கும் பகுதி”யில் மீரா இருக்கிறாள். நானும் அங்குதான் போனேன். கண்டுவிட்டாள்! அவளுக்கும் திகைப்பு கண்களில் மின்னிற்று.

ஒரு புத்தகத்தைத் தூக்கி, ஒரு மேசையின்முன் தலை குனிந்தேன். அவள் என்னைக் கண்களால் துளைக்கிறாள் போல. என் உடம்பு கூசிற்று.

நான் வாசித்த புத்தகத்தின்மேல் ஒரு சின்னத்துண்டு ஏறியது. வைத்த கைகளில் பசுந்தான சின்னூட்டி விரல்கள். “வாகை மரத்திற்குக் கீழே இருக்கிறேன், வாங்கோ”

உடனே போகவில்லை. பத்துநிமிசமாவது இருந்துவிட்டுப் போவோம் என்றிருந்தேன்.

ஐந்துநிமிசத்திற்கு இடையிலேயே போய்விட்டேன். அவள் முகத்தைப் பார்க்கவில்லை. அவள் என்னையே பார்த்துக்கொண்டு இருக்கிறாள் என்பதை உணர்கிறேன். கல்லாசனத்தில் அவள் பக்கத்தில் அமர்ந்தேன். உடனேயே என் வலதுகையை எடுத்துத் தன் கைகளில் பொத்திக்கொண்டாள்.

“என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...”

என் கை பொத்தியபடியே இருந்தது. அவளைப் பார்த்தேன், கண் மூடி இருந்தாள். கண்ணீர் ஒழுகிற்று.

கண் திறவாமலே சொன்னாள்: “என்ரை முகத்தில முழிச்சதுக்கு மிகமிக நன்றி... தாங்யு வெரிமச்... ”

சிறிதுநேரம் ஓர் அமைதி. நான் பரமேஸ்வரன் ஆலயத்தில் கண் பதித்தேன்.

“அம்மாவிட்டை போனீங்களா..?” திரும்பிப் பார்த்தேன், அவள் கண்களில் கனிவு. “ஓம்” என்று என் தலை ஆடிற்று.

“நைச்சன்...” என்றாள். “இப்பிடி ஒரு “அம்மாவின் பிள்ளை” எனக்குக் கிடைச்சிருக்கு வேணும்...” சிரிக்க முயன்றாள். இப்போது கை விடுபட்டிருந்தது.

பிறகு, “அண்டைக்குக் குடிச்சதுக்கும் இந்தத் தாடிக் கும் நான்தான் காரணமோ?” என்று இரக்கமாகக் கேட்டாள்.

பார்த்தேன் அவளை, பாவமாக இருக்கிறது. என் சிரிப்பில் கசப்பு இருந்தது. “இவளால் என்னை விளங்க முடியாது.”

“சீச்சீ.. அப்பிடியெல்லாம் ஒண்டுமில்லை...” என்றேன்.

“நான் என்ன செய்ய... ம்.. புரொபசர் வில்லங்கப் படுத்தினான்... ஓமெண்டுட்டன்... அவசரப் பட்டிட்டன் போலை... உங்களைக் காணுவன் எண்டு அப்ப நான் நினைச்சனானே... இப்பிடி ஒரு குழப்படிக்காரன் இருக்கிறான் எண்டே எனக்குத் தெரியாது... இப்ப நான் படுகிறபாடு இருக்கே, அது உங்களுக்குத் தெரியுமா... புறபசரும் நீங்களும் மாறிமாறி மனசுக்கை வாறியள்... நான் உங்களோட மாத்திரம் தான் இதெல்லாம் கதைக்கலாம்.. மோகனாவோடைகூடக் கதைக்க ஏலாது... உங்களுக்கு ஒண்டு சொல்லட்டா... “என்ரை முகத்தில முழிக்கவேண்டாம்” எண்டு சொல்லிப்போட்டு, நான் பட்ட பாடு ,ருக்கே.. அடுத்தநாள் உங்களைக் காணேல்லை எண்டு... நான் சூசைட் பண்ண வெளிக்கிட்ட னான் தெரியுமா... பிறகு யோசிச்சன்... நீங்கள் எப்பிடியும் என்னட்டை வருவியள் எண்டு ஏனோ ஒரு நம்பிக்கை... வந்திட்டியள்.. அது போதும்...”

“வந்திட்டன்தானே மீரா... உங்களிட்டை ஓடோடி வந்திட்டன்...” என்றேன். “என்ரை ராசா...” என்று அவள் என் கைகளைத் திரும்பப் பற்றினாள்!

“போவோம்..” என்றேன்.

பரமேஸ்வரன் ஆலயத்துக்கு நேரே நடந்தாள். பரமேஸ்வரன் ஆலயம் முன் நின்று, அரை நிமிசம் அவள் கண்கள் மூடியது.

“இவனுக்கு நல்ல புத்தியைக் குடு..” என்று வேண்டி னாளோ, என்னவோ? அல்லது பரமேஸ்வரன்தான் அவளுக்கு ஏதும் உரைத்தாரோ, என்னவோ?

பிறகு பிறகெல்லாம் அவள் என்னுடன் கதையைக் குறைத்துக்கொண்டாள் போலத்தான் எனக்குத் தோன்றியது. அவள் இருந்த மாடிவீட்டுப் பக்கம் போனால், அவள் எனக்கா கக் காத்திருந்ததாக இல்லை! ஒருமுறை மாத்திரம் மோகனா வின் முகம் பார்த்தேன். என்னைப் பார்த்து முகத்தைச் சட் டென இழுத்து, உள்ளே ஏதோ சொல்வதுபோல எனக்குப்பட்டது.

விரிவுரைகளின்போதும் என் அருகில் மீரா இருப்பதாக இல்லை. பிந்திவந்து, கிடைத்த இடத்தில் அமர்கிறாள். அது எனக்குத் தூரமான இடமாக இருக்கிறது.

சில சமயங்களில் என்னை எதிர்ப்படுகிறபோது, கண்களில் எந்த உயிர்ப்பும் அற்று, சும்மா பார்த்து மென்முறுவலுடன் சரி!

இதை உனக்குப் புரிவது கஸ்ரமாக இருக்கலாம். நீ நம்பவும் மாட்டாய். ஒருநாளில் இப்படி ஒரு மாற்றமா என்றும் நீ கேட்பாய். ஆனால் அதுதான் நடந்தது.

எனக்கோவென்றால் எதையோ இழந்துகொண்டிருக் கிறேனோ என்ற உணர்வு அப்போது வந்தது. நெஞ்சில் மிக வலித்தது. குளம் கட்டி நிற்கிற கண்களும் அதன் பார்வை வசீகரமும் கண்கள் விரிய, நேரே கண் பார்த்துக் கதைக்கிற அழகும் சின்னச் சிணுங்கலும் என்மீதான பெரும் அக்கறையும் சீண்டலும் மெல்லிய திட்டலும் உறுக்கலும்... என்னவோ எனக்கு இனிக் கிடையாது என்றுதான் தோன்றியது.

பின்னும் பொழுதுகள் போக, ஒருநாட் பின்னேரம் வாகைமரத்தின்கீழ் கல்லாசனத்தில் இருந்தேன். “அன்ரன் செக்கோவின் சிறுகதைகளும் குறுநாவல்களும்” புத்தகம் என் கையில், ஆனால் வாசிக்கவில்லை. ஏதோ யோசனை.

ஏற்கனவே முகர்ந்த ஒரு வாசம் மூக்கில் ஏறிற்று. சட்டென மீரா வந்து அருகில் அமர்ந்தாள். எதிர்பார்க்கவில்லை.

"என்ன கண்கள் கலங்கியிருக்குமாப்போல" என்றாள்.

"சீச்சீ... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை" என்றேன்.

சிறிது மௌனம். எனக்கது தேவையாக இருந்தது. அவள் அருகில் வந்து அமர்ந்ததை ,ன்னும் நான் செரித்துக் கொள்ளவில்லை.

ஏன் நீங்கள் இப்ப என்னோடை அவ்வளவு கதைக் கிறேல்லை..." என்று பிறகு கேட்டாள்.

"இது நான் கேட்க வேண்டிய கேள்வி" என்றேன். துக்கம் என் குரலில் படிந்தது. அது அவளைத் தொட்டிருக்க வேண்டும்.

"எனக்குப் பிரச்சினைகள் கூடிக்கொண்டு போகுது..." என்றாள்.

"என்னாலையா?"

"இல்லை" என்றாள். "இல்லை" என்பது உறுதியாக வரவில்லை. "நாங்கள் வேறை ஏதாவது கதைப்பமே..." என்று பிறகு சொன்னாள். "உங்களுக்கு ஒன்று சொல்லட்டோ... நீங்கள் சந்தோசமா இருங்கோ... படியுங்கோ... குழப்படி விடாதையுங்கோ...வேறையொன்றும் என்னட்டை கேட்க வேண்டாம்... " என்றும் சொன்னாள். அப்படியே அவள் தலை குனிந்தது.

குனிந்த தலையிலிருந்து கண்ணீர் ஒழுகிற்றோ, தெரியவில்லை. குனிந்தபடியே மெதுவாகச் சொன்னாள்: "சனிக்கிழமை என்ரை பேர்த்டே. கட்டாயம் என்ரை ரூமிற்கு வரவேணும்..."

"எனக்கு நேரமில்லை மீரா..." என்றேன்.

"பொய் சொல்லுறியள்..."

"சத்தியமா எனக்கு நேரமில்லை... சனிக்கிழமை ஊரிலை சொந்தக்கார வீட்டிலை விசேசம்.. நான் கட்டாயம் வருவன் எண்டு அம்மாவுக்குச் சொல்லியிட்டன்.. நான் போக வேணும்... மன்னிச்சுக் கொள்ளுங்கோ மீரா.."

"எனக்கு "அந்த இந்தக்" கதை வேண்டாம்... சனிக் கிழமை நீங்கள் வாறியள்... நான் பார்த்துக்கொண்டு இருப்பன்... உங்களோட நான் கொண்டாடிற முதலாவது பேர்த்டே இது! நீங்கள் வராட்டில் அண்டைக்கு எனக்கு பேர்த்டே இல்லை... அவ்வளவுதான் சொல்லியிட்டன்.. கட்டாயம் வரவேணும்... நான் காத்துக்கொண்டிருப்பன்..."

என் பதில் ஒன்றையும் எதிர்பாராது சட்டென எழும்பிப் போனாள். அப்படியே போனாள். பரமேஸ்வரன் ஆலயத்தின் முன் அவள் நின்றது, ஒருநிமிசம். அங்கிருந்து என்னைப் பார்த்தாள். அப்படியே போனாள்!

நான் உறைந்துபோயிருந்தேன்.

சனிக்கிழமை, ஐந்தாறு கறிகளுடன் அம்மா எனக்குச் சோறு தீத்தினா. என்னவோ அம்மாதான் அப்போது எனக்கு மீரா மாதிரித் தெரிந்தது. மீராவும் அம்மாவும் ஒன்றோ?

இன்றைக்கு மீராவுக்குப் பிறந்தநாள்! ம்...

துக்கம் என் நெஞ்சில் இருண்டு கிடந்தது!

திங்கள் கம்பஸிற்கு வந்தபோது, மீரா, முகம் சிவந்து கிடந்தாள். மூக்குநுனி மேலும் சிவந்து கிடந்தது. மீராவை இப்படி நான் ஒருபோதும் பார்த்ததில்லை. நான் அவளை எதிர்கொள்ள ஆரம்பித்தேன்.

அவள் ஒன்றும் பேசாமல் வாகைமரத்தின்கீழ் போய் அமர்ந்தாள். எனக்கு வேறுவழி தெரியவில்லை.

"என்ரை பேர்த்டேக்கு ஏன் நீங்கள் வரேல்லை..." கடும் வார்த்தை!

நான் மென்மையாகச் சொன்னேன்: "நேரமில்லை எண்டு சொன்னனான்தானே..." ,வ்வாக்கியம் அவள் முதுகைத் தடவியிருக்க வேண்டும். அப்படித்தான் நினைத்துச் சொன்னேன்.

அவளது குரல் தளும்பத் தொடங்கியது. "உங்களுக் காக நான் எவ்வளவுநேரம் காத்துக்கொண்டு இருந்தனான் தெரியுமா... உங்களை மாத்திரம்தான் ஆசையாக் கூப்பிட்ட னான்... ஆனால் நீங்கள் வரேல்லை. உங்களுக்கு விருப்பம் எண்டு கடலைவடைகூடச் சுட்டு வைச்சிருந்தனான்... ஆனால் நீங்கள் வரேல்லை... ஏன் இப்பிடி இருக்கிறியள்... என்னை அவ்வளவு வெறுத்திட்டீங்களா.... ஆ..? நான் என்ன பாவம் செய்தனான் சொல்லுங்கோ... புறொபசரைவிட உங்களிலை தான் எனக்கு முதல் விருப்பம்... அது உங்களுக்குத் தெரியுமா... அது தெரியாமலே இருக்கட்டும்... து காதலில்லை, அதுக்கும் மேலே... அது உங்களுக்கு விளங்குமா... அதுதான் நான் செய்த பாவமா சொல்லுங்கோ... ரண்டு உயிரை ஒரே நேரத்தில என்ரை உயிரா நினைக்கக் கூடாது இல்லையா... என்னைப் போல ஒரு சீவன் உலகத்தில இருக்கவே கூடாது... ஆண்டவா ஏன் என்னை இப்படிப்போட்டு வதைக்கிறாய்... பன்னிரண்டு மணியோடை என்ரை பெர்த்டே முடியுது எண்டுபோட்டு ஒண்டும் சாப்பிடாமல் பிறகுதான் படுத்தனான்...

.... ஏன் நீங்கள் வரேல்லை.... சொல்லுங்கோ... நீங்கள் இப்பிடியெல்லாம் மாறுவியள் எண்டு நான் ஒரு சொட்டும் எதிர்பார்க்கேல்லை..." என்று அழுதுகொண்டு சொன்னாள், அல்லது சொல்லிக்கொண்டு அழுதாள்.

நான் அப்போ என்ன செய்வேன்? அவள் அழுவதை என் கண்கள் மௌனமாகப் பார்த்திருந்தன. இதற்கு நான் பேச என்னிடம் எந்தவொரு வார்த்தையும் இல்லை!

பின்னரெல்லாம் மீரா, என்னுடன் அவ்வளவாகக் கதைக்கவில்லை என்றே சொல்லவேண்டும். விந்தன், குணா, விக்கி, கிருபா.. என்று பிற ஆடவருடன் அவள் நிறையப் பேசினாள். என்னுடன் மாத்திரம் எதுவுமில்லை! என்னைக் கண்ணுறும் சமயம், நூர்ந்துகொண்டிருக்கும் விளக்கைப் போன்று ஓர் உயிரற்ற மென்முறுவலுடன் சரி.

பின்னைக்காலத்தில் ஒருநாள், நான் தாடியை மழித்தேன். மீசையைக்கூட இல்லாததாக்கினேன். தலைமயிர் கூடக் கட்டையாக வெட்டப்பட்டிருந்தது. அந்தப் பொழுதில் தான் மீரா பின்வருமாறு சொன்னாள்: "இப்பதான் நீங்கள் குழந்தைப்பிள்ளைமாதிரி வடிவா இருக்கிறியள்..."

"நக்கல் அடிக்காதையுங்கோ..." என்றேன்.

என் தலையில், பசுந்தான விரல்களைக்கொண்ட தனது கைகளை வைத்துச் சத்தியம் செய்தாள். "வெரி ஸ்மாட்"

இவற்றினாலெல்லாம் நான் சலனப்படவில்லை. இருவரிற்கு இடையிலும் ஓர் ஒட்டாத உறவு ,ருக்கிறது என்று நான் அறுதியிட்டுச் சொல்வேன்! புறொபசருடன் அவள் இனிதே வாழட்டும்!

ஆனால் இன்னமும்தான் அவள் என் உறவைத் துண்டித்ததன் காரணம் சரியாகப் புரியவில்லை. எங்கு, எதனால் அந்தப் பிளவு நேர்ந்தது?

அவள் சொன்னபோது தாடியைச் சிரைக்காததா?

சோசல் அன்று குடித்ததா?

அவளது பிறந்தநாளுக்கு நான் போகாததா?

பிரிவின் முளைவிட்ட தருணம்,வற்றில் எது?

மூன்றும்தானா? இம்மூன்றில் எதுவோ ஒன்றில்தான் பிரிவின் முளை விட்டிருக்கலாம், பின்னர் அது ஆழப் பதிந்திருக்கலாம். மேலாகப் புறொபசருடன் அவளுக்கு வாழ்வு இருக்கிறதல்லவா?

நான்கு வருடங்கள் என நினைத்தேன். ஒரு வருடத் திற்குள் எல்லாம் ஓய்ந்துவிட்டன.

இப்போதெல்லாம் மீராவை நினைக்கும் கணம் தோறும் மனதின் இழைகள்மீது மெல்லிய அதிர்வு கொண்டு தான் இருக்கிறது.... பௌர்ணமி நிலவைப் பார்த்தால் அவள் நினைவு வருகிறது....

***

போதும், இனிவரும் மழைக்காலத்தைக் கொஞ்சம் கவனி!




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.